Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, புரட்டாசி 17- ஆம் நாள். ரபியுலவல் பிறை 29 (3-10-59) சனிக்கிழமை இதழ் 35.

# பண்டாரநாயக்காவின் படுகொலை வஞ்சமா? அரசியல் சதித் திட்டமா?

## யு. என். பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இனி சேர்ந்து ஒத்துழைக்குமா?

### புதிய பிரதமர் தகநாயக்காவின் எதிர்காலம்

— நமது அரசியல் நிருபர் —

திரு. பண்டாரநாயக்காவின் கொலைக்கு என்ன காரணம்? தனிப்பட்ட ஒருவரது வஞ்சமா? அல்லது பலர் இதில் சேர்ந்து திட்டமிட்டு சதி செய்திருக்கிறார்களா? இந்தக்கொலைக்கு அரசியல் நோக்கங்கள் எதுவும் உண்டா? இதுபற்றியே இப்போது இலங்கையில் அரசியல் வட்டாரங்களிலெல்லாம் ஒரே பேச்சாக இருக்கின்றது. பல பல பெயர்கள் இதில் அடிபடுகின்றன.

தனிப்பட்ட ஒருவர் தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளவே இக்கொலை செய்துள்ளாரென்றும், இது திட்டமிட்ட சதியல்லவென்றும் ஒரு பொலிஸ் அதிகாரி கூறியதாகஒரு பத்திரிகையில் செய்தி வெளியாயிற்று. எதிர்க்கட்சியினர் அவசரக் கூட்டமொன்று கூட்டி, பொலிஸ் அதிகாரி இவ்விதம் கூறியதை ஆட்சேபித்து பிரதமர் தகநாயக்காவுக்கு ஒரு கடிதம் எழுதுவதாகத் தீர்மானித்தனர். பொது மக்களிடையேயும் ஆட்சேபங்கள் எழுந்தன.

செவ்வாயன்று பிரதமர் தகநாயக்கா பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலையும் மற்றும், உயர்தர அதிகாரிகளையும் அழைத்து, இந்தக் கொலைபற்றி பூரண விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டார். பொலிஸ் அதிகாரி கூறியதாக பத்திரிகையில் வெளியான செய்தி சரியல்லவென்றும், இக்கொலை சம்பந்தமாக எவ்வித தகவல் அறிந்தவர்களும், பொலிஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"பிக்கு வேடந்தாங்கிய ஒருவர்" சுட்டதாக முதலில் வெளியான செய்தி, சிறுபான்மை சமூகங்களுக்கு மீண்டும் ஆபத்தைவிளைவிக்க இருந்தது. இதை உணர்ந்து, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உடன் முதல் வந்து, கைது செய்யப்பட்டுள்ளவர் "அசல் பிக்கு தான்" என்று தெளிவுபடுத்திய பின்தான் அந்த விஷமம் தலை தூக்கவில்லை.

சிங்களவரல்லாதார் யாரும் இந்தக் காரியத்தைச் செய்திருந்தால், பிற சமூகத்தினர் இங்கெல்லாம் நிம்மதியாக நடமாடவோ, உயிர்வாழவோ முடியுமா என்பது சந்தேகம்.



புதிய பிரதமர் திரு. தகநாயக்கா

சென்ற வருஷம் நடந்த கலவர காலத்தில் கொழும்பு முதலிய இடங்களில் ஒரு தமிழரும் தலை நிமிர்ந்து நிம்மதியாக நடமாட முடியாமலிருந்தது. இச்சமயம் ஒரு புத்த பிக்குவும் வெளியில் காணவில்லை. பொலிஸ் பாதுகாப்புடனேயே அவர்கள் நடமாட வேண்டியுள்ளது. இலங்கை அரசியலில் இனி பிக்குகளுக்கு அதிக செல்வாக்கு இராதென்றும், பிக்கு பெரமுனை இயங்காதென்றும், இது ஒரு புதிய நல்ல மாறுதலாக இருக்குமென்றும் கருதப்படுகிறது.


பண்டாரநாயக்காவின் பிரேத அடக்கம் முடிந்தும், இந்தக் கொலை வழக்கு விசாரணையையும், இனி அரசியல் அரங்கில் நடக்க இருப்பதையும் பொது மக்கள் ஆவலுடனும் கவலையுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

#### பொதுத் தேர்தல்

இலங்கையைப் பற்றி "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில், பண்டாரநாயக்காவின் கொலையால், இங்கு அரசியல் அரங்கில் அதிக குழப்பம் ஏற்பட்டுள்ளதாயும், புதிய பொதுத் தேர்தலை விரைவில் நடத்துவது ஒன்றுதான், நிலைமையை மேம்படுத்த வழியென்றும் கூறியுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

வாழ்க நீ எம்மான்!



காந்தி ஜயந்தி நேற்று உலகெங்கும் கொண்டாடப்பட்டது. (கட்டுரை 3-ம் பக்கம் பார்க்க)

# மாயவார்த்தைகளால் மயங்கிவிடமாட்டோம்

## எந்த நாயக்காவும் எமக்கு ஒன்றுதான் நேரடி நடவடிக்கையைக் கை விடோம்

### இன்றைய அரசியல் நிலைமை பற்றி திரு. எஸ். ஜே. வி. யின் கருத்து

— நமது சிறப்பு நிருபர் —

— கொழும்பு

**புதிய பிரதமர் திரு. தஹநாயக்கா பதவியேற்றதும் சிறுபான்மையினரின் ஒத்துழைப்பைப்பெரிதும் வேண்டியிருந்தார். அத்துடன் பழைய பிரதமரின் கொள்கைகளையே தமது அரசாங்கம் பின்பற்றிவருமெனவும் மக்களுக்குத் தெரிவித்திருந்தார்.**


**'ஒரு நாயக்கா போய் இன்னொரு நாயக்கா வருவதால் எவ்வித வித்தியாசமுமில்லை' யென்பது தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கருத்தாகும். இக்கருத்தை அவர் இப்பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமைபற்றி அவர் மேலும் எமது சிறப்பு நிருபருக்குக் கூறியுள்ளதாவது:—**

திரு. பண்டாரநாயக்கா போய் திரு. தஹநாயக்கா வந்ததால் தமிழ்மக்களுக்கு ஏதும் நன்மை இருக்குமா என்று என்னைக்கேட்டால் அப்படி நன்மை பயக்குமோ என்று நானாவது அல்லது எங்கள் கட்சியாவது எதிர்பார்க்கவில்லை. 'தன்கையே தனக்குதவி' என்பதிலேயே எங்கள் கொள்கை தங்கியிருக்கிறது. பாரதூரமான நிலையில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறித்தெடுத்திருக்கின்றார்கள். பத்து இலட்சம் மக்களுக்குப் பிரஜாவுரிமை வாக்குரிமை அளியாமல் அவர்களை அனாதைகளாக்கி விட்டிருக்கின்றனர்.

இரண்டாவதாக 25 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் மொழியாகிய தமிழ் மொழியை அரசகருமமொழியாக்காது பாழ்நிலையிற்கொண்டு போய்த் தள்ளியிருக்கின்றனர். இந்த இரண்டு அநீதிகளையும் அகற்றி நீதி வழங்கப் புதிய பிரதமர் திரு. தஹநாயக்காவுக்கு மனப்பிரியமோ அன்றேல் தைரியமோ இருக்குமென எதிர்பார்ப்பது இலவு காத்த கிளியின் கதைபோலாகும்.

சென்ற மூன்று வருட காலமாகத் தமிழ்மக்கள் அரசினரையும் அவர்களின் சட்டதிட்டங்களையும் எதிர்த்து வந்த கோலத்தைக் கைவிடாமல் அதேநிலையில் இருந்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட ஆயத்தமாக இருக்க வேண்டும். இல்லாவிடின் காலஞ் சென்ற

(9 ஆம் பக்கம் பார்க்க)




Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினால் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினால் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஒட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.
போன்: 496
தந்தி: "ஒட்டோஸ்" யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

சிறந்த
★ சினிமா சிலேட்
★ விளம்பரச் சித்திரங்கள்
★ புளொக்குகள்
முதலியவற்றிற்கு:-
**கலாநிலையப் பதிப்பகம்**
**சிவன் கோவில் மேலை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினாலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினால் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ- செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

### அறிவித்தல்

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா**
**கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங்
76/3,78/1,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

### முக்கிய அறிவித்தல்

உங்கள் வீட்டிற்குத் தேவையான பல சரக்கு சாய்ப்புச் சாமான்களுக்கு எம்மிடம் கலந்தாலோசியுங்கள். எவ்வித முற்பணமும் இன்றி, உங்களுக்குச் சிரமமுமின்றி வீட்டிற்கே பொருட்களைக் கொண்டு வந்து தருகிறோம். விபரங்கட்கு, எம். ஏ. டோசாஜீ அன் கோ, 136, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம் (போன் 459).


# வெள்ளைக் கொடிகள் பறந்தன நல்ல உள்ளங்கள் கலங்கின

## மறைந்த பிரதமருக்கு மௌன அஞ்சலி

— நமது நிருபர் —

அனுராதபுரம்.

'**அனுராதபுரம்**தான் இலங்கையின் நிர்வாகத் தலைநகராக மாறும். அனுராதபுரத்தில் மீண்டும் பௌத்தம் தழைக்கும்; பௌத்த மதக் கோட்பாடுகள் சிறக்கும்!' என்று மூன்று வாரங்களுக்கு முன் கூறிச் சென்ற பிரதமர், ஒரு பௌத்த பிக்குவினாலேயே சுடப்பட்டு விட்டார் என்ற செய்தியைவானொலியில் கேட்டதும் அனுராதபுரம் அப்படியே ஸ்தம்பித்து விட்டது.

மறுநாள்- பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா மரணம் அடைந்து விட்டார் என்ற செய்தி காட்டுத் தீபோல் பரவிப் பெருகியதும், கடைகள் பட பட வென்று அடைக்கப்பட்டு வெள்ளைக் கொடிகள் துக்கச் சின்னமாகப் பறக்க ஆரம்பித்தன. பொது நிலையங்களான, தபால் நிலையம், நகர மண்டபம், கச்சேரி, நகர் காவலர் நிலையம் (அனுராதபுரப் பொலிஸ் நிலையத்தில் இந்த நல்ல தமிழில்தான் பெயர் இருக்கிறது) போன்ற இடங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் மெல்ல மெல்ல அசைந்து பறந்து, மறைந்த தலைவருக்குத் தம் மௌன அஞ்சலியைச் செலுத்திக் கொண்டன.

பௌத்த மக்கள் பெருவாரியாக வாழ்கின்ற இப்பகுதியில் உள்ளவர்கள் பெரும்பான்மையாகக் கொழும்பு நோக்கிப் புறப்பட்டு, திரு. பண்டாரநாயக்காவின் இறுதி மரியாதைகளில் பங்கு கொண்டனர்.

போக முடியாதவர்கள், தர்மத்தின் சின்னமாக விளங்க வேண்டிய அந்தப் பௌத்த பிக்குவின் அட்டகாசச் செயலை எண்ணி மனம் உடைந்து, கண்டித்தனர்.

நீதி மன்றத்திலே முக்கிய வழக்குகளுக்காகக் கொழும்பிலிருந்து வந்திருந்த திரு. எஸ். சரவணமுத்து என்னும் வழக்கறிஞர் இது பற்றித் தமது கருத்தைத் தெரிவிக்கையில், இத்தகைய பாதகச் செயல், செம்மறியாட்டுப் புத்தி கொண்டுள்ள சில இலங்கையரைத் தூண்டி விடும் என்றும், அரசியல் வாழ்வு ஒரு பயங்கர கட்டத்தை அடைந்துள்ளது என்றும் தெரிவித்தார். வேறொரு வழக்கிற்காக வந்திருந்த நியாயவாதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் மேற்கண்டவாறே கூறினர் என்று பின்னர் தெரிந்து கொண்டேன்.

அரசாங்க அதிபர் திரு. நிஸங்கா பி. விஜேரத்தின உடனடியாக கச்சேரி ஆணையாளர்களின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, ஈமக்கிரியைகளில் கலந்து கொள்வது பற்றித் தீர்மானித்தார்.

### கமிஷனருக்கு வாழ்த்து

திரு. எஸ். டபிள்யூ. குணவர்தன இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்காக உபகாரச் சம்பளத்தில் செல்வது 'ஈழநாடு' வாசகர்கள் தாம் முதன் முதவில் அறிந்து கொண்டார்கள். அவருக்குச் சென்ற 24ந் தேதி வெள்ளிக்கிழமை அனுராதபுர சாரணர் இயக்கத்தினர் மத்திய கல்லூரியில் ஒரு பிரியாவிடை உபசாரம் செய்து மகிழ்ந்தனர்.

வட மாகாண சாரண இயக்க அதிகாரி திரு. ஜயரத்தினம் அவர்களின் மேற்பார்வையிலும், திருவாளர்கள் ஏ. டபிள்யூ. குமாரசிங்க, ஜே. பி. விஜேரத்தின, எச். பி. டி. ஜயவிக்கிரம, குணசேகரா ஆகியோர் உதவியிலும்- அர்ச். சூசையப்பர் கல்லூரி, மத்திய கல்லூரி, சேனபுர தராதரப் பாடசாலை, கெக்கிராவ மத்திய பாடசாலை, மங்களப்புர பாடசாலை, தம்புத் தேகமப் பாடசாலை, கத்தாகடைப் பாடசாலை ஆகியவற்றின் சாரணர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி வைபவத்தில் திரு. எஸ். குமாரவேலு, திரு. குணவர்தனவை வாழ்த்திப் பேசுகையில், அனுராதபுரச் சாரண இயக்கத்துக்குப் பெருமளவு சேவை செய்துள்ள திரு. குணவர்தன ஆரம்ப காலத்தில் காலியில் சிறந்த சாரண இளைஞராக விளங்கியவரென்றும் அவரது சேவைகள் இந்த நகரத்துக்கு மேலும் தேவைப்படுவதால், இங்கிலாந்தில் கல்வி கற்று முடிந்த பின்னர் இவ்வூருக்கே திரும்பி வர வேண்டும் என்று தான் விரும்புவதாகவும் கூறினர். மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகள் யாவும் சிங்களமாகவே இருந்த போதிலும், டி. பி. ஹேமசிரி என்ற அர்ச். சூசையப்பர் கல்லூரிச் சிங்கள மாணவன் தமிழ்ப் பாட்டுப் பாடி சந்திரபாபு போன்று அபிநயம் செய்தார். அத்துடன் அந்த மாணவன் வேறொரு தமிழ்ப் பாட்டும் பாடி சபையோரை மகிழ்வித்தான்.

### கூட்டங்கள் பின் போடப் பட்டன

காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவுக்கு அனுதாபம் காட்டும் முகமாகவும், அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதாலும் பல பொது நிகழ்ச்சிகள் இங்கு பின்போடப் பட்டன.

திருமதி விமலா விஜயவர்தன வின் தலைமையில் 26-ம் தேதி சனிக்கிழமை இங்கு நடைபெற விருந்த கிராமச் சங்கத் தலைவர்கள் மாநாடு, இ. எஸ். இராமநாயக்காவின் தலைமையில் 27-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அகில இலங்கைப் புகையிரத என்ஜினியர்கள் – தொழிலாளர் சங்கக் கூட்டம், அர்ச். சூசையப்பர் கோயிலில் நடைபெற விருந்த தேவ நற்கருணைத் திருநாள் ஊர்வலம் முதலியன, பின்போடப் பட்டவற்றில் சில.

வியாழனன்று பிரதமரின் அடக்கத்தின் போது மக்கள் தரிசிக்க வேண்டும் என்று விசேஷ ரயில்கள் ஏற்பாடாகியுள்ளன.

## பிரயாணிகள் நிலையம் கோட்டைக்குள் அமைத்தல் கூடாது.

திருக்கோணமலை

திருக்கோணமலைக் கோட்டைக்குள் உல்லாசப் பிரயாணிகள் நிலையம் ஒன்றினை அமைக்க, முயற்சிகள் நடைபெறுகின்றன. இக் கோட்டைக்குள் கோணேசர்கோவில் இருப்பதால் இதைப் புனித இடமாக அமைத்துத் தரல் வேண்டும் என்று உல்லாசப் பிரயாணிகள் நிலையத்தை வேறு எங்காவது அமைத்தல் வேண்டும் என்றும் திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயம் கேட்டுள்ளார்.

### அநுதாபக் கூட்டம்

திரு கு. வன்னியசிங்கத்தின் மறைவுக்கு அநுதாபம் தெரிவிக்கும் முகமாக இந்துக் கல்லூரியில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கும் பெருந்தொகையான மக்கள் வந்திருந்தார்கள்.

### நினைவுறுத்தற் கழகம்

நான்கு நாட்களாக ஆசிரியர்கள் நினைவுறுத்தற் கழகம் இங்கு நடைபெற்றது. ஆங்கிலம் கற்பித்தல், விஞ்ஞானம் கற்பித்தல், உபகரணங்களை உபயோகித்தல். சுகாதாரக் கல்வி சம்பந்தமான விரிவுரைகள் நடைபெற்றன.

திருக்கோணமலை முஸ்லிம் மாதர் சங்கமும், பொதுமக்களும், முகம்மதுநபி பிறந்ததினத்தைக் கொண்டாடினர். ந.நி.

## டிசம்பரில் பெரு வெள்ளம் இலங்கையில் ஏற்படும்

### சோதிடர் கூற்று

டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று இலங்கையில் ஒரு பெரிய வெள்ளம் ஏற்படுமெனப் பிரபல சோதிடர் ஒருவர் கூறியுள்ளார். இவ்வெள்ளத்தினல் இலங்கைத்தீவுக்கு அதிக .சேதம் உண்டாகுமெனவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் இவ்வருட முடிவில் யு. என். பி. யின் செல்வாக்கு அதிகரிக்குமெனவும், லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த இரு தலைவர்கள் புரட்சிகரமான செயலில் ஈடுபடுவார்களெனவும் அவர் சோதிடம் சொல்லியிருக்கிறார்.

## தமிழரசுக்கட்சியின் மாநாடு யாழ்ப்பாணத்தில் டிசம்பரில் நடைபெறும்

யாழ்ப்பாணம்.

தமிழரசுக் கட்சியின் காரிய நிர்வாக சபைக்கூட்டம் சென்ற வாரம் நடைபெற்றது. இவ்வாண்டு டிசம்பர் 18, 19, 20-ம் தேதிகளில் கட்சியின் வருடாந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதென அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மாநாட்டை யொட்டி ஒரு கைத்தொழில், கமத்தொழில் கடல் தொழிற் பொருட் காட்சியும், ஏற்பாடு செய்யப்படும்.

இம்மாநாடு யாழ்ப்பாணம் நகர மண்டபத்திலும் முற்றவெளியிலும் இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

பொருட்காட்சி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பாலர் பகுதி கட்டடத்தில் நடைபெறும். —ந. நி.





இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள் :

**செட்டிநாட் கார்ப்பரேஷன் பிறைவேட் லிமிடெட்,**

**116/118** கெய்சர் வீதி, கொழும்பு.

காந்தி அடிகளின் பிறந்தநாள் உலகின் பல பாகங்களிலும் நேற்றுக் கொண் டாடப்பட்டது. அடிகளார் 1927-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நிகழ்த்திய பிரசங்கத்தை இங்கு வெளியிட்டுள்ளோம்.

# வலோற்காரத்தினுல் உண்டாகும் வெற்றி முடிவில் படுதோல்வியையே தரும்

## சத்தியமும் சாத்வீகமும் எவரையும் வெல்லும்

### காந்தி அடிகளின் அறிவுரை

இந்தக் கூட்டத்தில் எனக் களிக்கப்பட்ட பல வரவேற் புரைகளுக்காகவும் பண முடிச் சுக்களுக்காகவும் நான் உங்கள் எல்லோருக்கும் கடமைப்பட்ட வனுயிருக்கிறேன். இங்கு வர முன்பே வரவேற்புரைகள் எல்லாவற்றையும் படித்து முடித்து விட்டேன். அவற்றுள் ஒன்று "யாழ்ப்பாண வாலி பர்களே என்னை இங்கு வர வழைத்தார்கள்" என்று கூறி யிருப்பது மிகவும் சரி.

இலங்கைத் தீவுக்கு வந்து உங்கள் அன்பு கூர்ந்த வேளாண்மையை ருசித்த நான் இவ்வழகிய நாட்டை என் றென்றும் மறக்க முடியாது.

யாழ்ப்பாணத்துக்கு வந்தவு டனே எனக்கு இலங்கையில் இருப்பது போலத் தெரிய வில்லை. இந்தியாவில் எங்கோ ஓரிடத்தில் இருப்பது போலவே தோன்றுகிறது.

கொழும்பிலும் தென்னிலங் கையிலுமுள்ள அன்பர்கள் எனக்கனுப்பிய நொடிகளை விட யாழ்ப்பாண அன்பர்கள் கொடுத்திருக்கும் நொடிகள் மிகவும் கடினமானவையாய் தோன்றுகின்றன. இதையிட்டு நான் முறையிடவில்லை. அவற்றை எழுதத் தூண்டிய நோக்கத்தையே பாராட்டுகி றேன். பிரச்சினைகளைத் தீர்ப் பதில் என் உதவியை நாடு கிறீர்கள் என்பதை உணர்கி றேன். இதுவுமன்றி, நம்பிக் கைக்குரிய நண்பன் என்ற முறையில் என்னை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள் என்ப தையும் எண்ணி மகிழ்வுறு கிறேன்.

**சுயராஜ்யத்தின் திறவுகோல்**

நீங்கள் கேட்ட கேள்வி களுக்கு நேரடியான மறு மொழி கொடுக்கவில்லை என்ப தற்காக என்னை மன்னித்து விடுங்கள். ஆனுல் அவை எல் லாவற்றையும் நினைவில் வைத்து, இந்த நான்கு நாட்க ளிலும் நான் நேரில் கண்ட றிந்த கருத்துக்களை அடிப் படையாக வைத்து மறுமொழி தர முயலுகிறேன். அல்லாவிட் டால் நான் செய்வது முறை யீனமாய் விடும்.

உங்கள் கிராமச் சங்கங்களை யிட்டு நான் மிகவும் பெரு மைப் படுகிறேன். அவை சம் பந்தமாக நீங்கள் எனக்களித்த வரவேற்புரையில் குறிப்பிடப் பட்டிருப்பது போல், கிராமச் சங்கங்கள் வெற்றியாக உழைப் பதே இறுதி சுயராஜ்யத்துக்கு திறவு கோலாகும். வாலிபர்க ளும், ஏன் வயது வந்தவர்க ளும் கூட கிராம விஷயங்களை தங்கள் சொந்த விஷயமாகக் கருதிப் பாடுபட்டால் தான், உண்மையான தேசியப் பற் றுண்டாகி இறுதி வெற்றிபெற முடியும். மேனுட்டு நாகரிகத் தில் மூழ்கி விடாமல், உங்கள் பழைய பண்பாடுகளை இன் னும் பின்பற்றி வருகிறீர்க ளென்பது உங்களைப் பார்த்த வுடனேயே தெரிகிறது. எனவே உங்கள் சொந்த சுபிட் சத்தை நீங்களாகவே தேடிக் கொள்வதில் கஷ்டமிராதென் பது நிச்சயம்.

யாழ்ப்பாணத்தில், பாழ் பட்ட கள்ளுத் தவறணைகள் மூடப்படவிருக்கின்றன என்ற செய்தி எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இதையிட்டு இலங்கை மட்டு மல்ல, இந்தியாவுமே பெரு மைப்பட வேண்டும்.

**இரு விஷயங்கள்**

இவ்விடத்தில் இரண்டு விஷ யங்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். ஒன்று, எவ் விதத்திலாவது வலோற்காரத் தையும் பொய்யையும் தவிர்க்க வேண்டும். வலோற்காரத்தி னுல் எவ்வித சீர்திருத்தமும் இதுகாறும் இயற்றப்படவில்லை. வலோற்காரத்தினுல் உண்டா கும் வெற்றி முதலில் வெற்றி யாகத் தோன்றினுலும், ஈற்றில் அது முந்திய தீமையைவிடக் கொடிய தீமைகளைக் கொண்டு வரும். ஆனுல் என்னைத் தவ ருக நினைத்து விடாதீர்கள். பொதுமக்கள் உண்மையில் பூரண மது விலக்கை விரும் பினுல், அதைச் சட்டபூர்வமாக இயற்றிச் செவ்வனே கொண்டு நடாத்துவது மக்களின் உரிமை யும் கடமையுமாகும்.

இரண்டாவது, சட்டமியற் றப்பட்டபின் வாளாவிருக்க லாகாது. குடிக்கு அடிமைப் பட்ட ஒருவனின் மனத்தை அதி லிருந்து திருப்புவதற்காக சிற் றுண்டிச்சாலைகளையும், மோர் முதலிய பான வகைகள் அளிக் கும் பந்தல்களையும், இன்னும் பல்வேறு விதமான பொழுது போக்குகளையும் ஏற்படுத்த வேண்டும்.

கடைசியாக, மதுவிலக்கை எதிர்ப்பவர்கள் பலர் இருப் பார்கள். அவர்களோடு பொறு மையிழந்து சண்டை போட லாகாது. உண்மை, அஹிம்சை, சாத்வீகம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தால் எவரையும் வெல்லலாம்.

தீண்டாமை என்ற மற்ற வியாதி இந்தியாவில் மட்டு மிருப்பதாக நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அதை இங் கேயும் காண்பது எனக்கு மிக வும் வருத்தமாயிருக்கிறது. புத்தபகவானின் நிழல் படர்ந்த இந்நாட்டில் ஒரு மனிதன் மற்றவனுக்கு குறைந்தவன் அல் லது தாழ்ந்தவன் என்று நினைப் பது பெரும் தவறு. தாழ்த்தப் பட்டவர்கள் எனப்படுபவர்க ளில் இங்கு யாராவது இருந் தால் அவர்களுக்கு நான் சொல் லக் கூடியது இதுதான்: ஹிந்து தர்மத்துக்கேற்ப மதுபானத் தையும் மாமிசத்தையும் தவி ருங்கள்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவதொன்று. உங்கள் தாய் நாட்டை மறவாதீர்கள். அங்குள்ள ஏழைகளுக்கு உதவி செய்ய விரும்பினுல் கதராடை அணியுங்கள். இந்த விஷயத் தில் உங்கள் பெண்மணிகளின் ஒத்துழைப்பும் அவசியம். அவர் கள் கதர் அணிவதோடு நின்று விடாமல் நான் இவ்விடத்தை விட்டு அகலுமுன்பு சில பொன் னுபரணங்களையும் எனக்குத் தருவார்களென்று நம்புகிறேன்.

# மொழிச் சிக்கல் நாட்டைப் பிரித்துள்ளது அடிதடியினுல் இதனைத் தீர்க்கவியலாது

## எந்த நேரமும் குமுறக் கூடிய எரிமலை

### செனேட்டர் எஸ். நடேசன் பேச்சு

சாதிமத வேற்றுமையை ஒழித்து எல்லோரும் ஒருமுகமாய் ஒத்துழைத்தால்தான் நாட்டின் முக்கிய பிரச்சினையாகிய வறுமையைத் தீர்க்கமுடியுமென செனேட் சபையில் எடுத்துரைத்த செனேட்டர் எஸ். நடேசன் வறுமையை அகற்றுவதற்கு எவ்வளவு தியாகம் வேண்டும் என்பதைத் தலைவர்கள் மக்களுக்கு எடுத்துக் காட்டத் தவறியதைத்தமது பேச்சிற் குறிப்பிட்டுள்ளார். அவருடைய பேச்சின் முதற்பகுதி சென்ற வார இதழில் வெளியாயிற்று.

பிரிட்டிஷார் இங்கிருந்து போவதற்கு முன்பும் அதன் பின் கடந்த 12 ஆண்டுகளாக வும் எமக்கு உண்டாகியிருந்து வரும் அடிப்படையான சிக்கல் என்ன? இந்தக் கேள்விக்கு சரியான மறுமொழியை நாம் கண்டு பிடிக்காவிட்டால், இதையிட்டு நாம் ஒரு ஒற்று மையான முடிவுக்கு வராவிட் டால், பொருளாதாரம், கலாச் சாரம், தார்மீகம் முதலான துறைகளில் எம்மை இன்று பிடித்திருக்கும் நோய் இறுதி யில் எம்மை மீளாப் பிணிக் குள்ளாக்கிவிடும். மிகவும் கோரமான ஒரு பொதுமக்கள் எழுச்சியே எம்மை இப்பிடியி லிருந்து விலக்கக்கூடும். தற் சமயம் மிகப் பெரியவர்கள் என்றிருப்பவர்கள் சொற்ப காலத்துக்கு இந்த ஆனந்த த்தை அனுபவிக்கலாம். மற்ற வர்களில் சிலர் தங்களுடைய அரசாண்மைத்திறன் பிற்சந் ததியாருக்கு நன்மை பயக்கு மென்று நினைக்கலாம். இன் னும் சிலர் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்பவர்களாயி ருக்கலாம். ஆனுல் இந்நாட்டின் மகா ஜனங்களின் நிலை என்ன? அவர்களுக்கு அரசியல் தந்தி ரங்கள் தெரியாமலிருக்கலாம். ஆனுல், அரசியலிலும் பொரு ளாதாரத்திலும் நாம் அடைந் துள்ள பிற்போக்கான நிலை மையைஉணர்வதற்குப்போதிய புத்தி கூர்மையுள்ளவர்கள்.

எங்கள் அடிப்படையான சிக் கல்களை அறிந்து அவற்றிற்குப் பரிகாரம்தேடும்காலம்நெருங்கி விட்டது. சரியானபடி பரிகா ரம் தேடாவிட்டால், நோய் என்னவென்பதை அறியாத வைத்தியன் மருந்து கொடுப் பதுபோல பலர் மருந்து கொடுக்க முன் வந்து விடு வார்கள். பலவிதமான விசித் திர திட்டங்களையும் சாக்குப் போக்குகளையும் இயற்றிக் கொண்டிருந்தால் எங்கள் பிரச்சினை தீரப்போவதில்லை. பச்சையாகச் சொல்லப் போ னுல், பொருளாதாரத் துறை யில் நாம் முன்னேற முடியாத படியினுல் நாட்டில் ஏற்பட் டுள்ள வறுமைதான் எமது முக் கியமான, அடிப்படையான சிக் கல். இந்த வறுமை மிக மிகக் கொடியது. இதை நாம் வேரு டன் அழிக்காவிட்டால், இறுதி யில் அது எம்மை அழித்து விடும். இந்த வறுமையும் அதன் தோழனுகிய, வேலையில்லாத் திண்டாட்டமுமே எம்மை, இப் படிப் போகுமிடம் தெரியாமல் லட்சியமற்ற வழியில் கொண்டு செல்லுகின்றன. உலகப் பிர சித்திபெற்ற எமது கொலை விகி தத்துக்கும், குடி முதலிய பல வகையான சமூக ஊழல்களுக் கும் இதுவே காரணம். வறு மையில் தோன்றிய இத்தீமை கள் யாவும் மனிதனின் நெஞ் சைக் கெடுத்து, நல்லதெது தீயதெது என்று பாகுபாடு செய்யும் அறிவையும் பாழாக்கி, வறுமைப்பிடியிலிருந்து விடு தலை செய்வோமென்று கூக் குரல் போடும் அரசியல் வாதி களின் கையில் சிக்கப்பண்ணி, சகோதரரைக் கொலை செய்யக் கூடிய அளவுக்கும் அவனைத் தூண்டி, ஈற்றில் வெட்கயீன மான படுகுழியில் விழச் செய் கிறது. எமது நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளும் மற்று முள்ள திறமை சாலிகளும் ஒன்று சேர்ந்து இக்கொடிய வறுமையை எதிர்த்து அழிக் காவிட்டால், இப்பொழுது நாம் புதைந்துள்ள வெறுப்புணர்ச்சி என்ற கிடங்கில் இன்னும் ஆழ மாக மாட்டிக் கொள்வோம். சுதந்திரமடைந்த பின்னர் இலங் கையில் நான்கு அரசாங்கங்கள் ஆட்சி செய்திருக்கின்றன. ஆயி னும் இவற்றுள் ஒன்ருவது, எமது உண்மையான பிரச்சினை யாகிய வறுமையையும் குறைந்த உற்பத்தியையும்பற்றி மக்களுக்கு எடுத்துக் காட்ட வில்லை.

எமது தலையர்களிடத்து இன்ருேர் பாரதூரமான குற்ற முண்டு. வறுமையை மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டும். அரசியல் தலைவர்கள், எவ்வளவுதான் பொதுமக்களை வசீகரிக்க முடிந்த போதிலும், தனித்து நின்று வறுமையைப் போராட முடியாது. மேடைகளிலும், பாராளுமன்றத்திலும், மந்திரி சபைக் கூட்டங்களிலும் அதை எதிர்த்தும் போரிடமுடியாது. சாதி, சமய வேறுபாடின்றி இந்நாட்டு மக்கள் எல்லோ ரும் ஒருங்கே நின்று போராடி னுல் தான் வறுமையை வெல்ல லாம்.

ஆனுல் கடந்த 12 வருடங்க ளாக எமது பொதுமக்கள் மிகப் பெரியதோர் சூதில் அகப் பட்டுக் கொண்டார்கள். வறு மையை அகற்றி சுபிட்ச நிலை பெறுவதற்கு எவ்வளவு உழைப்புத் தேவை, எவ்வளவு தியாகம் வேண்டும் என்ற உண்மைகளை எமது தலைவர் கள் அவர்களுக்கு எடுத்துக் காட்டாமல் இன்று வரை ஏமாற்றி வந்திருக்கிருர்கள். தேர்தல் காலங்களில், பொது மக்களின் ஆதரவு தேவைப் படும்போது மட்டும், தங்கள் மாயாஜால வித்தைகளைக் காட்டி மருட்டுவார்கள். மந்திர வாதிகளைப் போல, பிரச்சினை களையும் அவற்றிற்குப் பரிகா ரங்களையும் எடுத்துக்கூறுவார் கள். மொழி, சமயம், சாதி, இந்தியத் தொழிலாளர், குதி ரைப் பந்தயம், சூதாட்டம், சனப் பெருக்கம் - இப்படியான பிரச்சினைகளெல்லாம் வளர்ந்து கொண்டே போகும்.

ஆனுல் வறுமையை ஒழிப்ப தற்கு என்னென்ன வழிகளைக் கையாள வேண்டுமென்று ஒரு அரசியல் வாதியாவது இன்று வரை கூறவில்லை. சாதி, சமய வேறுபாடில்லாமல் இந்நாட் டில் வாழும் எல்லோரும் ஒரே முகமாய் ஒத்துழைத்தால்தான் சுபிட்சமடையலாம் என்று சொல்லுவார் எவருமில்லை. சாதி ஒற்றுமை இருந்தால் தான் இப்பெரும் போரில் வெற்றி பெறலாமென்று எடுத் துரைப்பார் எவருமில்லை. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்று ஓதுவார் எவரு மில்லை. ஆனுல் சாதி, சமயம், மொழி என்ற கூக்குரலே எங் கும் தொனிக்கிறது. இராணு வப்படைகளில் கத்தோலிக்கர் தலைமை வகிக்கிருர்கள், 'தமி ழன் சிங்களவன் வாயில் மண் ணைப் போடுகிருன். கண்டி நாட்டுக் கிராம வாசியை இந் தியன் கொள்ளையடிக்கிருன்— தமிழனையும், இந்தியனையும், கத்தோலிக்கனையும்விரட்டியடி த்தால்தான் உங்களுக் கு விமோ சன முண்டு. அவர்கள் இருக் கும்வரையில் உங்கள் வறு மைக்கும் அழிவில்லை' என்பதே நமது அரசியல் வாதிகளின் பிர சாரமாயிருந்து வருகிறது. இவர்களைக் கலைத்து விட்டால் மட்டும் நாட்டில் செல்வம் கொழிக்க மாட்டாது—வேலை யில்லாத் திண்டாட்டம் மறைந்து விடாது—வாழ்க் கைச் செலவுகள் குறைந்து விடாது—என்று இந்த உண் மைகளை எவருமே எடுத்துக் காட்டவில்லை.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தில் சமய மறுமலர்ச்சி

## தமிழினத்துக்குக் குன்றக்குடி அடிகளார் செய்தி

தவத்திரு குன்றக்குடி அடிக ளார் தமது இலங்கை நிகழ்ச் சிகளை முடித்துக்கொண்டு 29-9-59 முற்பகல் திருச்சிக்கு விமானமூலம் பிரயாணமாக முன்னர் விடுத்துள்ள செய்தி:—

ஈழ நாட்டில் கடந்த சில நாட்களாக நாம் சுற்றுப்பிர யாணம் செய்தபோது ஆங் காங்கு தமிழ்ப்பெரும் குடி மக் கள் காட்டிய அன்புக்கு நமது வாழ்த்துக்கள்.

தமிழ் மக்கள் தங்களுடைய மொழியையும் சமயத்தையும் பேணி வளர்க்கும் திருப்பணி களில் அதிகமாக ஈடுபடுவார் களாக. சமய வளர்ச்சியை ஒரு முறைப்பட்ட வழியில் வளர்ப்பதே நல்லது. ஆங் காங்கு சிவாலயங்களில் வார வழிபாட்டு முறைகளைத் தோற் றுவித்து வழிபாட்டுணர்ச்சியை வளர்ப்பது நன்று. அருள் நெறி மன்றங்களை அமைத்து இளைஞர்களைச் சமயத்துறை யில் ஈடுபடுத்துவது வரவேற் கத்தக்கது. தமிழர்கள் தங்க ளுக்குள் அளவுகடந்த ஒற்றுமை உணர்ச்சியையும் கட்டுப்பாட் டையும் வளர்த்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின் ருர்கள். அங்ஙனம் அவர்கள் செய்துகொள்வார்கள் என நம்புகின்ருேம்.

முன் பலதடவைகளில் நாம் இங்கு வந்தபோது இருந்த நிலைமையைவிட தமிழர்கள் கொஞ்சம் அதிகமாகச் சமயசமு தாய மறுமலர்ச்சித்துறைகளில் வளர்ந்திருப்பதை அதாவது சமூக ஏற்றத்தாழ்வுகள் காட் டாது இருப்பது மகிழ்ச்சிக்குரி யது. இங்கு வாழும் மக்கள் முன்னைப் பழமைக்கு ஊறில் லாதவண்ணம், வளர்ந்துவரும் புதுக் கருத்துக்களை ஏற்று வளர்ச்சியுறுவார்களானுல் அவர்கள் எதிர்காலம் இன் னும் ஒளி உடையதாக இருக் கும்.

தமிழர் தங்களுடைய சமு தாய வாழ்வில் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்பத் தம்மை யும் தமது கொள்கைகளையும் உருவாக்கிக்கொண்டு வளர வேண்டும். எத்துறையிலும் ஆழமாகச் சிந்தித்து எது பூரண பலனைத்தருமோ அத் துறையிலேயே முயற்சி செய்து முன்னேற வேண்டும். பொது வாக அவர்களுடைய செயல்க ளில் ஆழ்ந்த சிந்தனையும், புத்தி சாலித்தனமும், பரந்த எண் ணமும், தேசியப் போக்கும் இருக்கவேண்டும்.

இந்தத்தடவை ஈழத்தை விட்டுப் பிரியும்போது இரண்டு துக்க சம்பவங்கள் நமக்கு வருத்தத்தைத் தருகின்றன. ஒன்று தமிழினத்தின் வாழ் வுக்கு நாளெல்லாம் உழைத்த நல் தொண்டர் திரு. வன்னிய சிங்கத்தின் பிரிவு. மற்றது, இலங்கையின் சிறந்த அறிஞ ரும் அரசியல் மேதையுமான பிரதமர் பண்டாரநாயக்காவின் மறைவு. இவர்களின் மறைவு சிறப்பாகவும் பொதுவாகவும் தமிழினத்துக்குப் பேரிழப்பே யாகும். அவர்களின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 4. கூட்டுறவு

அதிகாலையிலே அவனுக்கு வெயர்த்துக் கொட்டியது. உடுத்தியிருந்த சாரமும் போட்டிருந்த சட்டையும் தெப்பமாக நனைந்திருந்தன. சும்மாவா? ஒவ்வொருநாளும் அந்தத் தயிர்க்கார மயில்வாகனம் இருபது மைலாவது நடக்கவேண்டும். அவனுடைய ஊருக்கும் மூதூருக்கும் போகவர பதினைந்து பதினறுமைல் இருக்கும். தயிர் விற்பதற்காக ஊருக்குள் எப்படியும் நான்கு ஐந்து மைல் வீடு வீடாகச் சுற்றவேண்டும்.

தோளிலே இருந்த காவுதடியை இறக்கி வைத்துப் பெருமூச்சுவிட்டான் மயில்வாகனம். துண்டை எடுத்து முகத்தைத் துடைத்து விசிறிக் கொண்டான்.

ஏழு எட்டு வருடங்களாகச் சூரியன் உதிக்கத் தவறினலும், மயில்வாகனம் அவ்வழியால் வரத்தவறுவதில்லை. மழையோ வெயிலோ பனியோ காற்ருே அதிகாலையில் எழுந்தே அவன் புறப்பட்டு விட்டால் எப்படியும் எட்டுமணிக்கிடையில் துறையடிக்கு வந்து விடுவான். காலம் எவ்வளவோ மாறிப் போய்விட்டது. மயில்வாகனங் கூட எவ்வளவோ மாறித்தான் இருக்கிருன். முன்பெல்லாம் குடுமி வைத்திருந்தான். இப்போது அதை எடுத்துவிட்டான். தயிர் கொண்டுவரும் முறையிலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

அந்தக் காலத்திலே யாழ்ப்பாணத்துப் பனை ஓலைப்பெட்டியில், சட்டியில் ஊற்றிய தயிரை அடுக்கி வைத்துக் கொண்டு வருவான். இப்போது அப்படியில்லை. சிறிய கள்ளிப்பெட்டிகளில், சிகரட் டின்களில் தயிர் ஊற்றிக் கொண்டு வருகிருன். தராசு போல இருபக்கங்களிலும் கள்ளிப்பெட்டிகள் தொங்க வலது தோளிலே காவுதடியை வைத்து, நடையின் தாளத்தில் கள்ளிப்பெட்டிகள் அசைய அசையக் கையை வீசி வீசி அவனைப்போல எல்லாரும் நடக்கமுடியுமா? எல்லாம் பழக்கந்தான்!

ஆனல் மயில்வாகனம் எவ்வளவுதான் மாறிப்போயிருந்தாலும் அவனுடைய தயிர் மட்டும் இன்னமும் மாறிப் போகவில்லை. சட்டியில் இருந்தாலும் சிகரட் தகரத்திலிருந்தாலும், தயிர் மட்டும் ஆடை படிந்து, வெள்ளை வெளேரெனத்தளதளத்து......

ஆமாம். அதையும் மாற்றி விடமுடியுமா? மனிதன் எப்படித்தான் மாறினலும் சாப்பாடுமட்டும் மாருமல் தானிருக்கும்!

தீர்மானத்துக்கு வந்த வேலாயுதம் "என்னப்பா நிக்கிரு. போறதில்லையா? என்று மயில்வாகனத்தைக் கேட்டான்.

மயில்வாகனம் அலுத்துக் கொண்டே "காலங்காலமாச் செய்து வந்த தொழில். இனி இதையுஞ் செய்ய முடியாது" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

வேலாயுதம் தயிர்ப் பெட்டிகளை வள்ளத்துக்குள் தூக்கி வைத்துக் கொண்டே "ஏனப்பா; என்ன நடந்தது?" என்று பரிவோடு கேட்டான்.

"எங்க ஊரிலே தயிர் ஆக்குவதற்கு 'மில்' ஒன்னு வந்திருக்கு. எல்லாப் பாலையும் மில்காரனே வாங்கித் தயிர் உறைத்துக் கொழும்புக்கு அனுப்புகிருன். இனி எங்களுக்கெல்லாம் பால் கிடைக்காது" என்ருன் மயில்வாகனம்.

"என்ன? தயிர் உறைக்கவுமா மெஷின் வந்திற்று?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

"ஆமாம். தயிர் உறைக்கத்தான். எதுக்குத்தான் மெஷின் இல்லை. வயல் உழுவதற்கு மெஷின். நெல்லுக் குத்த மெஷின். தண்ணீர் இறைக்க மெஷின். ஆக்கின சோத்தை அள்ளித்தின்னத்தான் இன்னமும் மெஷின் வர இல்லை" என்ருன் எரிச்சலோடு மயில்வாகனம்.

வள்ளம் போய்க்கொண்டிருந்தது. சுக்கான் கட்டிப்பிடித்துக்கொண்டே வேலாயுதம் யோசித்தான். நெல்லுக் குற்றும் மெஷின் வந்ததினலே, கைக்குத்து அரிசி குற்றும் பெண்களுக்கெல்லாம் பிழைப்பில்லாமற் போய்விட்டது. இரண்டு மூன்று வருடத்திற்கு முன்னெல்லாம், கிண்ணியாக்காரப் பெண்கள் பெட்டிபெட்டியாக அரிசி குற்றிக்கொண்டு வியாபாரத்திற்குப் போவார்கள். இப்போது ஒருத்தராவது அந்தத் தொழில் செய்யக் காணேம்! இப்போது அந்தப் பெண்கள் எல்லோரும் கிடுகு பின்னுகிருர்கள். காலம் போகிற போக்கிலே கிடுகு பின்னவும் மெஷின் வந்து விடுமோ என்னவோ? யார் கண்டது?

வேலாயுதத்தின் சிந்தனை அவ்வளவோடு நின்றுவிட்டது. அந்த மெஷினைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று அவன் விரும்பினன். புதிதாக உழவு மெஷின் வந்தபோது ஊரெல்லாம் திரண்டு போய் அதைப் பார்க்கவில்லையா? அதைப்போல.

எனவே, மயில்வாகனத்திடம் கேட்டான். "அந்த மெஷின் பெரிசாயிருக்குமா? எப்படி வேலை செய்யுது?"

"மயில்வாகனம்விளக்கினன். மெஷின் அப்படி ஒண்ணும் பெரிசில்லை. பெரிய அண்டா மாதிரி இருக்கிறதுக்குள்ளே பாலை ஊற்றுகிருர்கள். மெஷின் வேலை செய்து பால் காய்ச்சுப் படுகிறது. பிறகு ஆடை வேருயும், தயிர் வேருகவும் வந்து விழுகுது. தயிரை எல்லாம் பேணியில்அடைத்து 'வானி'லே கொழும்புக்கு அனுப்புகிருன். அந்த மெஷினை உடைச்செறியாட்டி..."மயில்வாகனம் கறுவினன்.

மயில்வாகனத்துக்கு வேலையில்லாமற் போய்விடுமே என்ற அனுதாபம், வேலாயுதத்துக்குப் பிறந்தாலும், மெஷினை உடைக்கிறது என்று அவன் கறுவியது பிடிக்கவில்லை. அந்த மெஷினை உடைக்கிறதாயிருந்தால் எல்லாக் கார்களையும் பஸ்களையும் உடைத்தெறிய வேண்டும். உடைத்தெறிந்து விட்டுத் திருக்கோணமலைக்குப் போவதாக இருந்தால், எல்லோரும் கிண்ணியாவிலிருந்து பத்து மைல் தூரம் கால்நடையாகவே நடக்க வேண்டும்!

இப்படி எண்ணிக்கொண்டே "ஒரு நாளைக்கு அந்த மெஷின் எவ்வளவு பால் காய்ச்சும்? என்று கேட்டான்.

"எவ்வளவென்ரு கேட்கிருய்? எத்தனை தகரம் பாலூற்றினலும் காய்ச்சித் தள்ளிவிடும்" என்ருன் மயில்வாகனம்.

வேலாயுதத்திற்கு மின்னல் போல ஒரு எண்ணம் பளிச்சிட்டது. "காட்டிலே எத்தனையோ எருமைகள் கட்டாக் காலியாகத் திரிகின்றன. எல்லாவற்றையும் துரத்தி மேய்த்துக் கட்டிப் பால் கறந்தால், ஆயிரம் இரண்டாயிரம் குடம் பால் கறக்கலாமே. மயில்வாகனத்தைப் போன்றவர்கள் தயிர்ப் பெட்டியைக் காவிக்கொண்டு இருபது மைல் ஒவ்வொரு நாளும் நடக்கவே வேண்டியதில்லை. எல்லோரும் நிழலிலிருந்து இலேசாக மாடு மேய்க்கலாம். மெஷின் காரனுக்குப் பாலை விற்று விடலாம். நம்மூர்த் தயிரையும் எல்லோரும், கொழும்பில் உள்ளவர்கள் கூடச் சாப்பிடுவார்கள்.

இந்த எண்ணந் தோன்றியதும், மயில்வாகனத்தைத் தேற்றும் எண்ணத்தோடு "மெஷின் வந்தால் நமக்கென்ன நட்டம்? இரண்டு மூன்று எருமையை வளர்த்தா, அந்தப் பாலையே மில்க்காரனுக்கு விற்கலாம். உன்ர சீவியமும் போயிரும்" என்ருன்.

மயில்வாகனத்துக்கு இன்னமும் ஆத்திரம் தீரவில்லை. மேலும், வேலாயுதம் பேசியது அவன் ஆத்திரத்தைக் கூட்டிற்றே தவிரக் குறைக்கவில்லை. ஆகவே அவன் உக்கிர கோபத்தோடு "அவன் பெரிய பணக்காரன். வேலை மெனக்கெட்டு இதுக்கென்றே கொழும்பிலிருந்து வந்திருக்கிருன். இன்னுங் கொஞ்சநாள் போனல் எல்லாருடைய எருமைகளையும் விலைக்கு வாங்குவான். சம்பளம் கொடுத்து மேய்ப்பான். பட்டிக்குப் போய் பால் ஏற்றிவர இரண்டு ஜீப்பைக் கொண்டுவருவான். பிறகு இந்த ஊரிலே பால் காவுகிறவன், தயிர் விற்கிறவன் எல்லோருக்குமே வேலையில்லாமற் போய்விடும்."

வேலாயுதத்தின் மூளையில், மயில்வாகனம் சொன்னது சரியென்றே பட்டது. பணக்காரன் நினைத்தால் எதைத்தான் செய்யமுடியாது.? ஆனல் எல்லாப் பணக்காரரும் எப்படி இன்னமும் பணத்தைச் சேர்ப்பது என்று எண்ணுகிருர்களே தவிர, இருக்கும் பணத்தினல் உலகத்துக்கு என்ன நன்மை செய்வது? என்றுதான் நினைப்பதில்லை.

வேலாயுதத்திற்கு அந்தக் கொழும்புப் பணக்காரன் மேல் எரிச்சல்வந்தது. அவனுக்குச் சோற்றுக்குப் பஞ்சமில்லை. மற்றவர்களுக்குச் சோறு கொடுக்கக் கூடிய அளவு அவனிடம் பணமிருக்கிறது. மற்றவர்களுக்குச் சோற்றுக்கு வழிகாட்டாவிட்டாலும், அவர்கள் உண்ணும் சோற்றில் மண்ணைப் போடாமலாவது இருக்கமுடியாதா? என்று ஏங்கினன்.

அவனுக்கு இன்னமும் ஒரு யுக்திதோன்றியது. "ஏன்; மயில்வாகனம்? ஊரவர் எல்லோரும் ஒத்துக்கொண்டு அவனுக்குப் பால் தரமுடியாது என்ருல் என்ன? மிஷினைத் தூக்கிக்கொண்டு போய்விடுவானே" என்று கேட்டான்.

மயில்வாகனம் அலட்சியமாகச் சொன்னன். "போத்தல் பாலுக்கு ஐந்து சதம் கூட வைத்துக்கொடுத்தால், கூடின விலைக்குக் கொடுக்காமல் ஊரவன் உனக்கும் எனக்குமா பால்தரப்போகிருன்?

"அதுதானே நமக்குள்ள ஒற்றுமையில்ல. அது இருந்தா எவ்வளவு காரியத்தைச் செய்யலாம்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் வேலாயுதம்.

வள்ளம் அக்கரையை அடைந்துவிட்டது. மயில்வாகனம் தயிர்ப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

வேலாயுதத்திற்கு இன்னமும் வீட்டிலிருந்து சாப்பாடு வரவில்லை. எனவே ஒரு வேலையுமின்றிச் சோம்பியிருந்த வேலாயுதத்தின் மன அரங்கிலே தயிர்க்கார மயில்வாகனம் கிளப்பிய பிரச்சினைகள் தான் சுழன்று கொண்டிருந்தன.

பாவம்! மயில்வாகனமும், அவனைப்போல இன்னமும் பலரும், தயிர்ப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு கொதிக்கும் வெய்யிலில் நடையாக நடக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கையின் மூலாதாரமே எருமைப் பால்தான். மயில்வாகனத்தின் ஊரவர்கள் எல்லோருமே எருமைமாடுகளை நம்பித்தான் சீவிக்கின்றனர். காட்டிலே கவிபடித்துக் கொண்டு மாடு மேய்க்கும் சிறுவனுக்கும், பட்டியிலிருந்து குடத்திலே பால் சுமந்து கொண்டு வரும் பால்க்காரனுக்கும், பெட்டியிலே தயிர் சுமக்கும் தயிர்க்காரனுக்கும், அந்த ஊரவர் எல்லோருக்குமே படியளக்கும் பரமபிதா எருமை மாடுதான். இப்போது அவர்கள் எல்லோர் வயிற்றிலுமே மண்விழப் போகிறது!

வேலாயுதத்தின் இரக்கம் மிகுந்த இதயம், தன் சகோதரர்கட்காகக் கனிந்து உருகையில், அந்த இளகிய இதயத்திலே ஓர் அசைக்க முடியாத தீர்மானம் உருவாயிற்று.

"மில்காரனுக்கு எவருமே பால் கொடுக்கக்கூடாது. ஊரவர் எல்லோருஞ் சேர்ந்து ஒரு புது மெஷின் வாங்கித் தயிர் உறைக்க வேண்டும். இப்போது தான் அரசாங்கம் ஐக்கிய நாணயசங்கம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்று கடன் கொடுக்கிறதே. அப்படிப்பணம் எடுத்து மெஷின் வாங்க வேண்டும். காட்டிலே கட்டாக் காலியாகத் திரியும் எல்லா எருமைகளிலிருந்தும் பால் கறக்க வேண்டும். எவ்வளவு தயிர் உற்பத்தியாக்கமுடியுமோ அவ்வளவு தயிரை உற்பத்தியாக்கி, இலங்கை எண்ணூறு காதமும் அனுப்ப வேண்டும். வரும் இலாபத்திலே ஊரவர் எல்லோருக்கும் பங்கு இருக்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தைச் செய்து முடித்தபோது வேலாயுதத்திற்குக் களைப்பாக இருந்தது. அந்தக் களைப்பில் என் பேச்சை யார் கேட்கப் போகிருர்கள்? என்று அலுத்துக் கொண்டான். வாய் தன்னையறியாமலே கொட்டாவி விட்டது.

கொட்டாவி விட்டதும் நிமிர்ந்து பார்த்தபோது அவன் இளைய மகன் நின்று கொண்டிருந்தான்.

(தொடரும்)


## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழநாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம்.

★ **போட்டோவின் அளவு, 6" X 4"**

★ **முடிவு திகதி 31-12-59**

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

ஒரு படியாகக் கண்டிச்சீமை (இலங்கை)க்கு வந்து சேர்ந்துவிட்டனர். முன்னர் கேள்விப் பட்டது போல் நிலைமை அவ்வளவு சொகுசாக இல்லை. தேயிலைச் செடிக்குக் கீழே தேங்காயையும் காணோம். மாசியையும் காணோம்.

# மலைநாட்டுத்தமிழர் வாழ்க்கை

## கவிதை சொல்லும் 100 வருடக் கதை

ஸி. வி. வேலுப்பிள்ளை

மலைநாட்டுத் தமிழரின் தோட்டக்காட்டு சீவியம் கடந்த 100 வருடங்களாக அவர்களின் கிராமியப் பாடல்களில் பிரதி பலிக்கிறது.

தோட்ட வேலைக்கு ஆள் தேடிக்கொண்டு கண்டி, கம்பளை, கினிகத்தேனை முதலிய பட்டினங்களில் இரவு பகலாக அலைந்து திரியும் தலைமைக் கங்காணியின் கையாள், இரவு நேரங்களில் சாப்பாட்டுக்கடைகளில் தங்குவார். அவர் வந்து போகும் ஞாபகம் என்றும் அழியாமலிருக்கிறது — பாட்டு ரூபத்தில்:

கண்டிக் கருப்பாயி
கம்பளத்து மீனாச்சி
ஒத்தக்கடே ராமாயி
ஒரவிருந்தாப் போதுமடி.

வேலை தேடிக் கொடுப்பதற்கு அவர்கள் கொடுக்கும் 'கொமிஷனை' விட அவர்களுடைய உறவையே கங்காணியின் கையாள் மதிக்கிறுரென்பது இப்பாட்டில் புலனாகிறது.

இந்தியாவிலிருந்தபோது கிராம வாசிகள் வரியாலும் வறுமையாலும் அல்லல் படுவதைக் கண்டு கவலையுற்றிருப்பார். கிராமச் சந்தைகளிலும் கள்ளுக் கொட்டில்களிலும் வேலைக்கு ஆள் தேட அலைந்திருப்பார். கண்டிச்சீமை (இலங்கை) யைப் பற்றி பிரமாதமாக வர்ணித்திருப்பார். தேயிலைச் செடிக்கடியில் தேங்காயும் மாசியும் விளைகிறதென்று புகழ்ந்திருப்பார். நம்புவது கஷ்டம் தான்! அத்துடன் 'கண்டிச் சீமை' யும் வேண்டாமென்று போய்விட்டது.

கண்டி, கண்டி எங்காதிங்கோ
கண்டிப்பேச்சு பேசாதிங்கோ
சாதி கெட்ட கண்டியிலே
சக்கிலியன் கங்காணி.

இந்தவிதமான கவலைகளும் சாதித்துவேஷமும் நீண்டு நிலைக்கவில்லை. 'திரை கடலோடியும் திரவியந் தேடு' என்ற அந்த உற்சாகமான மனப்பாங்கு அதெல்லாவற்றையும் தோற்கடித்துவிட்டது. மரக்கலங்கள் புறப்பட்டன 'கண்டிச் சீமை'யை நோக்கி. கடலில் காற்றும் மழையும் கொந்தளித்து, பாட்டு ரூபத்தில் அவர்களுடைய அனுபவம் வெளி வந்தது.

வாடை யடிக்குதடி
வடகாத்து வீசுதடி
சென்னல் அடிக்குதடி-நாம்
சேந்து வந்த கப்பலிலே.

வடபகுதித் துறைமுகங்களில் இறங்கி காட்டு மார்க்கமாக நடந்து சென்ருர்கள். வெகு தூரம் நடக்க வேண்டியிருந்தது—பயணமோ கரடு முரடானது. ஊக்கிக் கொடுக்க ஒரு வஸ்தில்லாவிட்டால் நடைபறியாது போலிருந்தது. வழியில் சாராயக்கடை இருந்தது. ஒரே ஒரு 'டோஸ்'! தலைக்கேறிவிட்டது சாராயம். சாராயக் கடைக்காரன்மீது பழி!

சாராயக்காரா
சதிகாரச் சிங்களவா
நீ கொடுத்த சாராயம்
நெனவு தடுமாறுதடா.

ஒரு படியாகத் தோட்டத்துக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். முன்னர் கேள்விப் பட்டதுபோல நிலைமை அவ்வளவு சொகுசாக இல்லை. தேயிலைச் செடிக்குக் கீழே தேங்காயையும் காணேம் மாசியையும் காணேம். மெதுவாக நழுவலாமோ என்று தோன்றுகிறது.

கங்காணி கோவத்துக்கும்
காட்டுத் தொங்க ஏத்தத்துக்கும்
நம்ம தொரை கோவத்துக்கும்
நடந்திட்டாலும் குத்தமில்லை.

ஆனல் நழுவி விடுவது சுலபமான வேலையல்ல. "கங்காணி கட்டி வைச்சு அடிச்சுப் புடுவான்." விதியை நொந்து கொண்டு எப்படியாவது சமாளிக்க வேண்டியதை விட வேறு வழியில்லை. முதலாம் நாள் கண்டித் துரைத் தோட்டத்திலே (நானுஓயாக் கருகிலுள்ள கிளாரெண்டன் தோட்டம்) இலை பறிக்கப் போனுர்கள். அங்கே:

கண்டித்துரைத்தோட்டத்திலே
கருத்தகுட்டி முளிமிரட்டி
கிட்டக்கிட்ட நிறைபடிச்சு
சிட்டாப் பறக்குருளே.

இருந்தும், தோட்ட வேலைக்குப் புதியவர்கள் ஆகையினல் தேயிலைக் கொழுந்து பறிக்கும் நுட்பமான வேலை அவர்களுக்கு விரைவில் புரியவில்லை, புல்லு வெட்டும் வேலைக்கு அனுப்பப் பட்டார்கள். தோட்டத்துக்கு வந்த நாள் முதல் இந்தக் கஷ்டம் வந்து சேர்ந்துவிட்டது. கஷ்டம் தாங்காமல் ஒரு சிணுங்கல் புறப்படுகிறது:

ஆத்தோரம் கொந்தரப்பு
அதுநெடுக வல்லாரை
வல்லாரைவெட்டியல்லோ-என்
வாழ்வும் குறைந்ததையா.

மாசத்தில் ஒரு நாள் மட்டும் இந்தக் கடினமான சீவியம் இருக்கமாட்டாது. அன்றைக்கு புருஷனும் பெண்சாதியும் சாமான் வாங்குவதற்குக் கடைத்தெருவுக்குப் போவார்கள். வெகு தூரம் நடக்க வேண்டுமாகையால் புருஷன் மனைவிக்கு ஆறுதல் சொல்வான்.

ஏத்தமடி நூரெலியா
எரக்கமடி ராதாளை
தூரமில்லை நாஞேயா [வோம்
தொடந்து வாடி நடந்துபோ

ஒரு நாள், பக்கத்துத் தோட்டமொன்றுக் கருகாமையில் கொழுந்து பறிக்கச் சென்ருள் ஒருத்தி. இன்னொரு சிநேகிதியின் கூடையையும் தன் கூடைமேல் வைத்துத் தூக்கிச் சென்ருள். முன்பின் அறியாத ஒரு வாலிபன் தூரத்திலிருந்து அவளைக் கண்டவுடனே சொல்லுகிருன்.

கூடைமேலே கூடைவைத்து
கொழுந்தெடுக்கப் போர
[பெண்ணே
கூடை இறக்கி வைத்து
குளுந்த வார்த்தை சொல்லிப்
[போடி.

உடனே வந்தது எச்சரிக்கை:

கூடை இறக்க மாட்டேன்
குளுந்த வார்த்தை சொல்ல
[மாட்டேன்
நாளெருவன் பெண்டாட்டி
நானென்னத்தைச் சொல்லிடு
[வேன்.

இன்னொரு நாள், வேருெரு அழகிய மங்கையுடன், தோட்டத்திலிருந்து திரும்பி வரும் போது அவளுடைய தம்பியின் குரல் கேட்கிறது. அவன் பாடுகிருன்:

மஞ்சள் மினிக்கியடி
மயிரெல்லாம் பூமினிக்கி
கொண்டை மினிக்கியடி—
[உன்னை
கொண்டு போரேன் தொங்கத்
தோட்டம்.

உடனே இவள் தன் சிநேகிதியிடம் கூறுகிருள்:

ஆரடியிம் பங்களாவும்
அருபதடிப் பூந்தோட்டம்
பூஞ்செடிக்குத் தண்ணிபோடும்
புண்ணியரே என்பொறப்பு.

பாடியவன் என் தம்பி, அவனை மறுதலிக்காதே என்று மறைமுகமாகக் கூறுகிருள்:

அன்று தொடக்கம் அந்த வாலிபனும் அந்த இள நங்கையும் மாரன் வசப்பட்டுவிட்டார்கள். ஒருவருக்கும் தெரியாமல், தற்செயலாகச் சந்திப்பது போல, தங்கள் காதல் நாடகத்தை நடாத்திவந்தார்கள். ஒரு நாள் அவள் ஓடையில் குளித்துக் கொண்டிருந்தாள். அதைக்கண்ட காளை பாடினுன்:

ஓடு தண்ணியிலே
ஓரச்சு விட்டேன் சந்தனத்தை
சேர்திச்சோ சேரலையோ
சிவத்த பிள்ளை நெத்தியிலே.

சந்தேகம் தொனித்தாலும், அவள் மறுமொழி சொல்லுகிருள்:

அரக்கு லோஞ்சு காரபையி
பறக்க விட்ட கண்மளா
மறக்க மாட்டேன் என்று
[சொல்லி
நிண்ணயம் செய்து தாடா.

அவன் உறுதி கூறுகிருன்:

கல்லில் அடித்துத் தாரேன்
கண்ட சத்யம் செய்து தாரேன்
மீனுச்சி கோவிலிலே
வெட்டி போட்டு தாண்டி தாரன்.

அதற்குப் பின் தேயிலை மரத் தோட்டத்தில் தேன் காதல் வளர்ந்தது. பெரியவர்கள் எல்லோரும் கூடி அவர்களுக்கு மணம் முடித்து வைத்தார்கள்.

நாளாந்தம் தோட்டத்திலும் வீட்டிலும் கஷ்டமான வேலைகள் இருந்தபோதிலும், இனிமையான சமயங்களும் இருந்தன. பொங்கல், தீபாவளி வருங்காலங்களில் பெரும் தடபுடலாக ஜோடனைகளும், வேடிக்கைகளும், பாட்டும், கூத்தும் நடக்கும். பெண்கள் நெற்றியில் குங்குமமும், உதடுகளில் இரத்த நிறத் தாம்பூலத்தின் பூச்சுக்கிடையில் ஆனந்தப் புன்சிரிப்பும் திகழ, சர்வாலங்கார பூஷிதைகளாக, கும்மியாடுவார்கள்.

தன்னன்னே என்றுமே சொல்
[லுங்கடி—உங்க
நாவுக்கு சக்கரை நான் தாரேன்
வால சரஸ்வதி அம்மாளே—
[உன்னை
பூவிலே வைச்சுக் கும்பிடு
[வோம்.
குத்தங்கள் சொல்லாதே
[மாமிமாரே
கோபங்கள் வைக்காதீர் மாமன்
[மாரே
தேவேந்திரன் பிண்டம் உங்கள்
[மருமகள்
சாமிமேலே பதம் பாடி வா
[ரேன்.


'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்றலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.


## பம்பாயில் தமிழ் முழக்கம்

### நேற்று ஆரம்பமான எழுத்தாளர் மாநாடு

பாரதநாட்டின் வணிகப் பெரு நகரமாகிய பம்பாய் ஸ்பானிலுள்ள 'கோகுல்' மண்டபத்தில் நேற்று மாலை தமிழ் எழுத்தாளர் மாநாடு ஆரம்பமாயிற்று. இம்மாநாடு ஞாயிற்றுக்கிழமைவரை தொடர்ந்து நடைபெறும். 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஆரம்பித்து வைத்த இம்மாநாடு சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) தலைமையில் நடைபெறுகின்றது. முதல்நாள் மாநாட்டில் பிரபல எழுத்தாளர்களான திரு. எம். ஆர். ஜம்புநாதன், (தமிழ்) டக்டர் கே. எம். முன்ஷி (குஜராத்தி) திரு. வி. ஸ. காண்டேகர் (மராட்டி) ஆகியோர் தமது தாய்மொழிக்கு ஆற்றி வரும் பணிகளுக்காகப் பாராட்டப்பட்டனர்.

இன்று நடைபெறும் விவாத அரங்கில் 'இக்காலத் தமிழிலக்கியத்திறனுய்வு ஆக்க முறையில் உள்ளதா? அழிவு முறையில் உள்ளதா?' என்னும் பொருள்பற்றி விவாதம் நடைபெறும். எழுத்தாளர் பிரதிநிதிகள் இதிற் பங்குகொள்வார்கள். ஞாயிற்றுக்கிழமை பன்மொழிச் சொல்லரங்கம் நடைபெறும்.

தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலுமுள்ள எழுத்தாளர் பிரதிநிதிகள் பலர் இம்மாநாட்டிற் பங்குபற்றுகின்றனர்.

## அச்சமற்ற எழுத்தாளரே நாட்டுக்கு இன்று வேண்டும்

'எழுத்தாளர்' என்ற சொல்லின் பிறப்பு அண்மைக் காலத்தே, 'எழுத்தினை ஆள்பவர்' என்பதுதான் இதன் பொருளாகும என விளக்கும் பேராசிரியர் சி. இலக்குவனர் எம். ஏ., எம் ஓ. எல். உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை அச்சமின்றி எடுத்துரைக்கும் உண்மை எழுத்தாளரே இன்று நாட்டுக்கு வேண்டுமென 'தமிழ்நாடு'இதழில் எழுதியுள்ளார். அவர் மேலும் எழுதுவதாவது:

தமிழகத்தில் இன்று எழுத்தாளர்கள் பெருகி வருகின்றனர். புத்தகங்கள் எழுதுவதும் வெளியிடுவதும் வருவாய் மிகுந்த தொழிலாகவே உருவாகி வருகின்றது. எழுத்தாளர் மன்றங்களும் அமைப்புகளும் ஆங்காங்கு தோன்றியுள்ளன. மாநாடுகள் நடைபெறுகின்றன. மலர்கள் வெளியிடப்படுகின்றன. மக்களிடையே தொடர்பு கொள்ளும் செயல்கள் நிகழ்கின்றன. அரசினரை வற்புறுத்தி உரிமைபெற முயற்சிகள் நடைபெறுகின்றன. இவை எல்லாம் வரவேற்கத் தக்கனவே. ஆனல் தமிழ் எழுத்தாளர் உண்மையாகவே எழுத்தாளராக இருக்கின்றனரா? தமிழ் நலத்தைப் பேணுதலைத் தலையாய கடனாகக் கொண்டுள்ளனரா.?......

"உரையாடுவது போல் எழுதுதலே சிறந்தநடை அதற்கு இலக்கணம் ஏன்?" எனக் கூறி வருவோரும் உளர். கொச்சைப் பேச்சை ஏட்டில் எழுதி இதுவே சிறந்த நடை எனப் பறை சாற்றுவோரும் உளர். இவ்வாறு எழுதிவிட்டுத் தம்மைத் தமிழ்நாட்டு உவெல்ஸ், கார்க்கி, ஹெமிங்வே, மாபோசான், தாகூர் என்று தமக்குத் தாமே பெருமிதம் கொள்வாருமுளர். மறுமலர்ச்சிஎழுத்தாளர் என்று கூறிக்கொள்வோரில் பலர் எழுத்துத் துறையைத் தம் வாழ் நாள் குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென்று விரும்பி ஏற்றுக்கொண்டவர் அல்லர். 'பஞ்சத்து ஆண்டி' போன்று வந்தவர்களும் பலர் உளர். பிற துறைகளில் நுழைவதற்குத் தகுதி பெருதோரும், பிற துறைகளில் சென்று தோல்வியுற்ருேரும், இதழ்களில் தம் பெயர்கள் வந்தால் போதும் என்று நினைப்போரும், தமிழ் மொழிப் பற்றின்றித் தமிழ் வளர்க்கும் கருத்தின்றிப் புதியது புனையும் விருப்பம் கொள்ளாமல், ஓய்வு கிடைக்கும் நேரங்களில், தம் உளம் சென்றவாறே, தாம் அறிந்த குடும்ப நிகழ்ச்சிகளையோ எழுதிக் கதைகள் 'நாவல்கள். என்று இதழ்களுக்கு அனுப்புகின்றனர். நம் நாட்டு இதழ்களில் பெரும்பாலான கட்டுரைகள் இலவசமாகப் பெற்றுவெளியிடும்நிலையிலேயே உள்ளன. ஆகவேபக்கங்களை நிரப்புவதற்காக மையால் கிறுக்கப்பட்டு வருகின்றவற்றையெல்லாம் வெளியிடுகின்ற இதழ்களும் உண்டு. அன்றியும் சாதியும் மதமும் பதவியும் பணமும் வேறு இத்துறையில் ஆட்சி புரிகின்றன.

உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை அச்சமின்றி எடுத்துரைக்கும் உண்மை எழுத்தாளரே இன்று நாட்டுக்கு வேண்டும்.

கதைகளாயினும் கட்டுரைகளாயினும், அவை கட்டுரைக்குரிய இலக்கணங்களுடனும் தமிழில் உயர்ந்த கொள்கைகளை விளக்கக் கூடியனவாய்ப் படிப்போர்க்குப் பல வகையானும் இன்பம் பயந்து அவரை உயர்த்தக் கூடியனவாயும் இருத்தல் வேண்டும். இவ்வாறு எழுதும் எழுத்தாளர்களுக்குக் கருவியாக உள்ளது மொழியே. தமிழ் எழுத்தாளர்க்குக் கருவி தமிழே.

எத்தொழிலில் ஈடுபடுவோரும் அத்தொழிலுக்குரிய கருவிகளில் நற்பயிற்சியுடையோராய் இருத்தல் இன்றியமையாதது. மொழித் துறையில் நுழைவோர், மொழியைக் கருவியாகக் கொள்வோர், மொழியில் நற்பயிற்சி உடையோராக இருத்தல் வேண்டாமா? ஆதலின் தமிழ் எழுத்தாளராகப் புகழ்பெற விரும்புவோர் தமிழில் நற்பயிற்சி வரன் முறையாகப் பெறுதல் வேண்டும்.

## வானொலி விமர்சனம்

சங்கீத குரு சிஷ்ய பரம்பரையில் சிஷ்யர்கள் பலவகைப் பட்டவர்கள். சிலர் தங்கள் குருவின் பாணியை அச்சொட்டாகப் பின்பற்றுகிறவர்கள். பாடுவது குருவோ, சிஷ்யனோ என்று சந்தேகப்படுமளவுக்கு அசல் பிரதியாயிருக்கும் அவர்கள் பாட்டு. வேறு சிலர் பாடங் கேட்ட குருவின் பாணியை அறவே மறந்துவிட்டு, தங்களுக்கென ஒரு தனி வழியை வகுத்துக் கொள்வார்கள். இன்னும் சிலர் பாடும்போது அவர்கள் சாரீரத்துக்கும், ஞானத்துக்கும், கற்பனைக்கும் ஏற்றாற் போல தங்கள் சொந்தப்பாணியில் பாடுவார்கள். ஆனல் பாடங்கற்ற குருவின் சாயலையும் இடையிடையே வெளிப்படும்.

மதுரை எஸ். சோமசுந்தரம் நாம் கடைசியில் சொன்ன இனத்தைச் சேர்ந்தவர். சமீபத்தில் அவர் பாடியபோது இந்த விஷயம் நமக்கு ஞாபகத்துக்கு வந்தது. சோமுவின் பாட்டு பலரை பிரமிக்கச் செய்யும். அநாயாசமாக பிர்க்காக்களை கொட்டித்தள்ளுவார். கீழ் 'ஸா' விலிருந்து மேல் 'ஸா' வுக்கு எது வித சிரமமுமின்றி ஒரே பாய்ச்சலில் தாவுவார். இப்படிப்பட்ட இன்னும் பல வான வேடிக்கைகளைக் காட்டி ரசிகர்களை மயக்கி விடுவார். அவரது சாரீர அமைப்பு இவை எல்லாவற்றிற்கும் நன்ருக இடங்கொடுக்கும். ஆனல் அவருடைய பாட்டை உள்ளத்தை உருக்கும் அந்த ரகத்தில் சேர்க்க முடியுமோ என்பது சந்தேகத்துக்கிடமானது.

ராக ஆலாபனை செய்யும் போது நாம் மதுரை சோமுவைத்தான் கேட்கிருேம்—அவருடைய குருநாதர் சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளையையா. சோமு சுரம் பாடும்போது மட்டும் சித்தூராரின் நடைபேதங்களும் சுதி பேதங்களும் எப்படியோ வந்துவிடுகின்றன.

எம். எஸ். சுப்புலக்ஷ்மியையும், எம். எம். தண்டபாணி தேசிகரையும் சங்கீதப் பிரியர்களுக்களித்த மதுரை இன்று சோமுவையும் தந்திருக்கிறது. சில வருடங்களுக்குள் சங்கீத உலகில் முன்னணிக்கு வந்து விட்டார்.

அன்று தோடி, கல்யாணி முதலிய ராகங்களை நன்ருக ஆலாபனை செய்து இரண்டிலும் கீர்த்தனை, நிரவல், சுரம் எல்லாம் பாடினர். கண்டதேவி அழகிரி சாமியும், தஞ்சாவூர் ராமமூர்த்தியும் அழகாக பக்க வாத்தியம் வாசித்தார்கள். மோர்சிங் வாத்தியத்தை இக்காலத்தில் பாட்டுக் கச்சேரிகளில் கேட்பது அருமையாகி விட்டது. சோமுவின் கச்சேரியில் அதைக் கேட்க முடிந்தது.

'ஆகாச வாணி' கச்சேரிகளில் சிறந்தவற்றை அஞ்சல் செய்து வந்த எமது இலங்கை வானொலி இப்பொழுது அதை நிறுத்தி விட்டதேனோ என்று தெரியவில்லை. அங்கே நல்ல கச்சேரிகள் நடக்கும் நேரத்தில் இங்கும் சங்கீத நிகழ்ச்சிகள் இருந்தால், இசைப்பிரியர்கள் எதைக்கேட்பார்கள் என்பதை நாம் எடுத்துக் கூற வேண்டியதில்லை.

சங்கீத நிகழ்ச்சிகள் எமது வானொலியில் மிகவும் குறைந்து விட்டன என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். 'சங்கீத நிகழ்ச்சிகள்' என்ற வகையளவில் "டப்பா" சங்கீதத்தைத்தாராளமாக அள்ளி வழங்கும் "நேயர் விருப்ப" நிகழ்ச்சிகளை நாம் சேர்க்கவில்லை.

# குருஷேவ்-ஐஸனேவர் கூட்டறிக்கை
## சமரசப் பேச்சுக்கள் மூலம் சர்வதேசச் சிக்கல்களைத் தீர்க்க முடிவு

ருஷியப்பிரதமர் குருஷேவ் தமது 13 நாள் அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை முடித்துக் கொண்டார். இரண்டாந் தடவையாக அமெரிக்க ஜனதிபதி ஐஸனேவருடன் பத்து மணி நேரம் வரை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிவடைந்ததும், 500 வார்த்தைகள் அடங்கிய ஒரு கூட்டறிக்கை வெளியாகியது. இவ்வறிக்கையில் காணப்பட்ட பிரதான விபரங்கள் பின்வருமாறு:—

1. பேர்லின் சிக்கலுக்குத்தீர்வு காண்பதற்குச் சம்பந்தப்பட்ட நாடுகள் உடன்பட்டால்பெருந்தலைவர் மாநாடு நடைபெற வேண்டும்.

2. சகல சர்வதேச சிக்கல்களுக்கும் சமரசபேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படவேண்டும்.

3. அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் இடையே கலாசாரத் தொடர்புகள் வியாபாரம் ஆகியவற்றைப்பெருக்குவதற்கு நடைபெற்ற ஆலோசனைகளில் முன்னேற்றம் காணப்பட்டன.

4, படைக் குறைப்பும் ஆராயப்பட்டது.

### சமாதானத்தில் நம்பிக்கை

உலக சமாதானம் குறித்து வலுவடைந்த நம்பிக்கையுடன் தாம் தாயகம் திரும்புவதாக குருஷேவ் கூறியிருக்கிருர்.

## உலக நிலை

தமது சுற்றுப் பிரயாணத்தின் போது குருஷேவ் நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ் சான்பிரான்சிஸ்கோ, அயோவா மாகாணம், பிற்ஸ்பேர்க் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்ததோடு தமது பூரண படைக்குறைப்புத் திட்டத்தை ஐக்கிய நாடுகள் தாபன பொது மகாசபையில் வெளியிட்டார்.

சென்ற வியாழக்கிழமை பீக்கிங் நகரில் ஆரம்பமான கொம்யூனிஸ்ட் சீனத்தின் பத்தாவது தேசிய விழாவில் கலந்து கொள்வதற்காக குருஷேவ் பீக்கிங் நகருக்குப் பிரயாணமானர். தாம் ஜனதிபதி ஐஸனேவருடன் நடாத்திய பேச்சு வார்த்தையின் முடிவுகளை சீன அரசாங்கத் தலைவர்களுக்குத் தெரியப்படுத்துவார் எனச் செய்திகள் கூறுகின்றன.

ஜனதிபதி ஐஸனேவர் தமது ருஷிய சுற்றுப்பிரயாணத்தை அடுத்த வருடம் வசந்தகாலம் வரை ஒத்திவைத்திருக்கிருர். இவ்வருட இலையுதிர் காலத்தில் இச்சுற்றுப் பிரயாணம் நடைபெறும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. அடுத்த மே அல்லது ஜூன் மாதத்தில் அமெரிக்க ஜனதிபதி ருஷியாவுக்கு விஜயம் செய்வாரெனத்தெரிகிறது.

# முஸ்லிம் மகளிர் கல்லூரி
## ஜனவரியில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட விருக்கும் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கான கட்டட வேலைகள் ஆரம்பித்துவிட்டன. இக்கல்லூரி இரட்டை மாடிக் கட்டடமாக அமைக்கப் பெறும். இதனைக் கட்டி முடிப்பதற்கு மூன்றரை இலட்சம் ரூபாய் தேவைப் படுமெனக் கணக்கிடப் பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் முஸ்லிம் வித்தியா சங்க செயலாளர் ஜனப் என். ஏ. றசீன் தெரிவிப்பதாவது: இந்த நல்ல காரியத்தைச் செய்வதற்கு உதவியாக இருந்தவர் யாழ்ப்பாணத்து எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆவர். இவர் அரசினரிடமிருந்து எண்பதினயிரம் ரூபாய் பெற்றுத் தந்துள்ளார். மிகுதிப்பணம் பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதெனச் சங்கம் தீர்மானித்துள்ளது. முகலாய கட்டட அமைப்பு முறையில் நிறுவப்படும் இக்கல்லூரி அடுத்த வருடம் ஜனவரியில் ஆரம்பிக்கப்படும்.

ந. நி.

# காசநோயாளருக்கு இலவச 'எக்ஸ்ரே' பரிசோதனை
## மக்களுக்கு சுகாதாரப் பகுதியின் சேவை

யாழ்ப்பாணம்.

காசநோயை நாட்டிலிருந்து அகற்றுவதற்காக இலங்கை முழுவதிலும், சுகாதாரப் பிரிவினரால் இலவச 'எக்ஸ்றே' பரிசோதனை வசதிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இதற்கான இலவச பரிசோதனைகள் யாழ்ப்பாணத்தில் ராணித்தியேட்டருக்கு அருகாமையில் தினம் நடைபெற்று வருகின்றன. "காச நோய் ஒரு கொடிய நோய். அதனை நாட்டிலிருந்து பூண்டோடு ஒழிக்க வேண்டும். இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்து விடாதீர்கள்" என சுகாதாரப் பகுதியினர் யாழ்ப்பாணம் முழுவதிலும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

—ந. நி.

# தொழில் நுட்பக் கல்லூரியில்
## வணிகத்துறை வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருக்கும் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் இம்மாசம் முற்பகுதியில்வணிகத்துறை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். தொழில் துறை சம்பந்தமான ஏனைய வகுப்புக்கள் 1960-ம் ஆண்டு ஜூன் மாதமே ஆரம்பிக்கப் படுமெனத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரி வேலைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. தற்காலிக இராணுவ விடுதியாக உபயோகிக்கப்பட்ட இக்கட்டடம் இப்போது சீரான நிலையில் இல்லை.

# திட்டமிடப்பட்ட அரசியல் சதியா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் புதிய பிரதமர் தகநாயக்கா, இன்னும் 18 மாதம் தாம் ஆட்சி நடத்த உத்தேசித்துள்ளதாக முதல் அறிக்கையிலேயே கூறியுள்ளார். அவரது அரசாங்கக் கட்சி பலவீனமாகவுள்ளதை அவர் மறைக்கவில்லை. ஆனல் 'எம். ஈ. பி.' கட்சியிலிருந்து விலகிய ஸ்ரீமதி ராஜரத்ன, எஸ். டி. பண்டாரநாயக்கா, பெலிகமன முதலிய சேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை மூன்றும் மீண்டும் அரசாங்கக் கட்சியில் சேர முன்வந்துள்ளனராம். இவர்கள் காலஞ் சென்ற பிரதமருக்கு பரம விரோதிகளாக இருந்தவர்கள் என்ருலும் தமது கட்சிக்குப் புதியபலம் தேட திரு. தகநாயக்கா அவர்களை வரவேற்கக் கூடும். இப்படி வரவேற்பதால், அவர்களது தீவிர மொழிக் கொள்கையையும் ஏற்பாரா? நியாயமான அளவு தமிழ் உபயோக சட்டத்தை ரத்து செய்வாரா? அப்படிச் செய்ய மாட்டாரென்ருலும், தமிழரைப் பொறுத்த வரை, அரசாங்க மனப்பான்மை மேம்படுமென்று நம்ப ஆதாரமில்லை. மோசமாகாமல் இருந்தால் அதுவே பெரிய காரியம் என்று தமிழ் அரசியல் வட்டாரங்களில் கருதப் படுகின்றது.

### இணைந்து விடுமா?

இதே சமயம் யு. என். பி. கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கா, ஜே. ஆர். ஜயவர்த்தன, எம். டி. பண்டா இம் மூவரும் புதிய பிரதமரை நேரில் கண்டு வாழ்த்தியதும், திரு. தகநாயக்கா, அவர்களை ஆவலுடன் வரவேற்று "உங்கள் ஒற்றுமையை வரவேற்கிறேன். ஜே. ஆர். எனக்கு உற்ற நண்பர்" என்றெல்லாம் சொன்னர்.

இப்போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், யு. என். பிக்கும் கொள்கை அளவில் அதிக வேற்றுமை இல்லை. அரசாங்கக் கட்சி இப்போது முற்றிலும் 'வலது சாரி' யாகியுள்ளது. ஆகவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், யு. என். பி.யும் இணைந்து விடுமா? அடுத்த பொதுத் தேர்தலில் இரண்டும் சேர்ந்து விடலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஆனல் யு. என். பி. வட்டாரங்களில் விசாரித்ததில், ஏதோ மரியாதைக்காகவே தங்கள் தலைவர்கள் புதிய பிரதமரைக் கண்டதாகவும், இதற்கு மேலாக அந்த சந்திப்பில் அதிக முக்கியம் கற்பிப்பதற்கில்லை என்றும் தெரியவந்தது.

### உலகின் கவனம்

இது எப்படியாயினும், பொதுத்தேர்தலை அவசரப்பட்டு நடத்த புதிய பிரதமரோ, அல்லது அவரது கட்சியினரோ முன்வருவாரென்று நம்புவதற்கில்லை. கூடுமானவரை அதிக காலம் இந்தப் பதவியிலிருந்து அதிகாரம் செலுத்தவே முற்படலாம்.

இப்போதுள்ள அவசரகால பிரகடனமும், பண்டாரநாயக்கா கொலைவழக்கு விசாரணை முடியும்வரை நீடிக்கலாமென்றும் அவசரப்பட்டு அதை அகற்ற மாட்டார்களென்றும் கூறப்படுகின்றது.

பண்டாரநாயக்கா படுகொலையால், நாட்டு அரசியலில் இனி விபரீதங்கள் ஏற்படலாமென்று கருதிப் பல வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள், அவசரமாக இங்கு பறந்து வந்திருக்கிருர்கள். புதுடில்லியிலிருந்து 'விஸா' கூட வாங்காமல் பறந்துவந்தனர். இலங்கை இமிகிரேஷன் அதிகாரிகள், நிலைமையின் அவசரத்தை உணர்ந்து தாராளமனம்காட்டி, அவர்களுக்குத் தற்காலிக 'விஸா' அளித்துள்ளனர்.

இன்று உலகின் கவனமெல்லாம் நம் இலங்கைமீது திரும்பியுள்ளன. இனி என்ன நடக்கப்போகிறது? அரசியல் புரட்சிகள் ஏற்படுமா? என்று பலரும் ஆவலுடன் காத்திருக்கிருர்கள். ஆனல் நிர்வாக அனுபவமும் திறமையும் வாய்ந்த கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணத்திலக்கா, அவசரகால பிரகடனம் செய்து, நிலைமையைத் தக்கபடி சமாளித்துவருவதாலும், திரு. தகநாயக்கா தமது எளிமையான உடை, வாழ்க்கை முதலியவற்ருல், பொதுமக்களின்அபிமானத்தை பெற்றுள்ளதையும், இலங்கையில் இந்த அசாதாரண நெருக்கடியானது அமைதிக்குப் பங்கமேற்படாத முறையில் சமாளிக்கப்படுமென்றே எதிர்பார்க்கப் படுகிறது.

### புதிய பிரதமர்

தமிழ்த் தலைவர்கள் பலரும் சிறப்பாகச் சனப் பிரநிதிகள் சபை அங்கத்தினரும், புதிய பிரதமர் தகநாயக்காவை நேரில் கண்டு வாழ்த்தி அவருடன் நல்ல தொடர்பு வைத்துக் கொள்வது நல்லது.

மந்திரியாவதற்கு முன்பு, திரு. தகநாயக்கா, தமிழ் பேசும் மக்களின் அபிமானத்தை அமோகமாகப் பெற்றிருந்தார். மொழித் தகராறு வந்து எல்லாவற்றையும் மாற்றி விட்டது.

இப்போது அவர் மிகப் பொறுப்பான பதவிக்கு வந்திருப்பதாலும், எல்லாருக்கும் நீதி வழங்குவேன் என்று அறிவித்துள்ளதாலும், தமிழ்த் தலைவர்கள் தங்கள் கட்சியிலுள்ள நியாயத்தைஅவர் மனத்தில் படும்படி எடுத்து விளக்கினல், அது வீண்போக முடியாது. நன்மை ஏற்படாவிடினும் இதனல் தீமை எதுவும் ஏற்படாதல்லவா?

### இ. தொ. கா.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் கூடிய சீக்கிரம் புதிய பிரதமரை நேரில் கண்டு பேசுவரென்று அறிகிறேன். இலங்கை இந்தியர் பிரச்சினை விஷயமாக பேச்சுக்கள் நடத்த ஒரு மந்திரியை, நேருஜியைச் சந்திக்க சீக்கிரம் அனுப்பப் போவதாகப் புதிய பிரதமர் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இ. தொ. கா. புதிய நிர்வாகிகள் தேர்தல் இன்னும் இரண்டு வாரங்களில் நடைபெறுமென்று அறிகிறேன்.

திரு. பண்டாரநாயக்காவின் மறைவு, இந்தியாவுக்கும் சிறப்பாக நேருஜிக்கும் பெருநஷ்டம். உலக அரசியலிலும்,சாம்ராஜ்ய நாடுகள்விஷயங்களிலும்நேருஜி தமது வலக்கரத்தை இழந்து விட்டார். இலங்கையின் புதிய பிரதமர் திரு. தகநாயக்கா, இந்தியாவுடன் இதே உறவை வைத்துக்கொள்வாரென்றே எதிர் பார்க்கப்படுகின்றது.

### அபூர்வக்காட்சி

கொலையுண்ட பிரதமருக்கு, இலங்கைப் பொது மக்கள் லட்சக் கணக்கில் கூடி, அமைதியாகச் செலுத்திய கடைசி அஞ்சலி சரித்திரம் காணுத அபூர்வக் காட்சியாகும். எல்லாச் சமூகத்தவர்களும் இதில் ஒன்ருகக் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மீலாத் தினப் பேச்சுப் போட்டி

இப்பேச்சுப்போட்டி 16-9-59 இல் நடைபெற்றது. ஜனப் கே. எம். ஏ. காதர் தலைமை வகித்தார். இளங்கீரன், இ. நாகராஜன், காதி எம். எம். சுல்தான், எம். ஏச். எம். முகிதீன், ஓ. எம். அப்துர் ரஸாக் ஆகியோர் நீதிபதிகளாய் இருந்தனர். முடிவில் முஸ்லிம் வாலிப இயக்க காரியதரிசி எம். எஸ். ஏ. ரஹீம் பரிசில்களை வழங்கினர். பரிசு பெற்ருேர் விவரம் வருமாறு:

"ஏ" பிரிவு 1. எம். ஏ. கபூர்.
2. வீ. எம். மஜீத்.
3. உ. ஹமீது சுல்தான்.

"பி" பிரிவு 1. எஸ். ஏ. ஸி. இனூன்.
2. எம். எஸ். ஏ. ரஹீம்.
3. எம். ஐ. சுலைமான்.

"ஸி"பிரிவு 1. எம். சாகுல்கமீது.
2. எம். பு. ஆத்காதர்.
3. எம். ஏ. ரஸீன்.

ஆறுதல் பரிசுகள் 1. எம். எஸ். ரஹீம். 2. ஐயூப்ஹஸன்பே "ஏ" பிரிவில் முதலாவது பரிசாக வெள்ளிப் பேழையுள் வைக்கப்பட்ட 1-3/4 அங்குல நீளமும் 1 அங்குல அகலமுமுள்ள 30 ஜுஸு குர் ஆன் வழங்கப்பட்டது.

## பூஜ்யம் தபால்

அமரர் பண்டாரநாயக்கா
ஆவி உலகம்

வணக்கம்!

சென்ற திங்கட்கிழமை அமெரிக்காவுக்குச் சென்று, அங்கே ஐக்கிய நாடுகள் சபையில் பேச ஆவலுடன் திட்டம் போட்டீர்கள். ஆனல் யாருமே சற்றும் எதிர்பாராத முறையிலே இரண்டுநாள் முன்னதாகவே, சனிக்கிழமையன்று இவ்வுலகத்தை விட்டே மறைந்துவிட்டீர்கள்!

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்ருகும், அன்றி அது வரினும் வந்தெய்தும், ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்" என்ற ஆன்ரோர் வாக்கு உண்மையாயிற்று.

ஐ. நா. சபைக்கு தாங்கள் செல்ல முடியாவிட்டாலும், தங்களுக்காக அச்சபை மட்டுமன்றி, அகில உலகமும் துக்கித்து இன்று அஞ்சலி செய்வதை ஆவிருபத்திலுள்ள தாங்கள் கண்டு பெரும் திருப்தி அடையலாம். அங்கு தாங்கள் நேரில் சென்று பேசியிருந்தாலும் இவ்வளவு மதிப்பும் மரியாதையும் கிடைத்திருக்கமுடியுமா என்பது சந்தேகம்.

தாங்கள் ஏதோ புண்ணியம் செய்தவர்கள். சந்தேகமில்லை. வாழ்க்கையில் தாங்கள் விரும்பியதெல்லாம் கிடைத்துள்ளன. பிரதம மந்திரி பதவிக்கு வர வேண்டுமென்று தங்களுக்கு வெகுநாள் ஆசை. அந்த ஆசை பூர்த்தியாயிற்று. மூன்றரை ஆண்டுகள் பிரதம மந்திரியாக இருந்து தங்களுக்கே போதும் போதும் என்று ஆகிவிட்டது.

உலகப் புகழுக்காக ஆசைப்பட்டீர்கள். அதுவும் அமோகமாகக்கிடைத்துவிட்டது. தாங்கள் மட்டும் ஏதாவது நோய்வாய்ப்பட்டு இறந்திருந்தால் இவ்வளவு பெரிய மரியாதையும் புகழும் கிடைத்திருக்குமா? தாங்கள் சுடப்பட்டு மாண்டதால், தங்கள் உயிரையே நாட்டுக்காக அர்ப்பணித்த தியாகி ஆகி, மகாத்மா காந்தி, ஆப்ரகாம் லிங்கன் முதலியவர்கள் வரிசையில் சேர்ந்து, சரித்திரமே மறக்க முடியாத அழியாப் புகழ் பெற்றுவிட்டீர்கள்.

அரசியல் வாழ்விலே தாங்கள் செய்த சில தவறுகள் என்னைப்போல் பலருக்குப் பிடிக்கவில்லை. என்ருலும் தாங்கள் செய்த உயிர்த்தியாகத்திலே, அதையெல்லாம் மறந்துவிட்டோம். தவறு செய்வது மனிதர் யாருக்கும் சகஜம் தானே! தாங்கள் அமரராகிவிட்டீர்கள். தங்கள் வாழ்க்கையும், தியாகமும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் நல்ல எச்சரிக்கையாகவும் இருக்குமென்றே நம்புகிறேன்.

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு :—

தங்கள் அரசியல் வெற்றிக்கு பௌத்த பிக்குகளைத் தாங்கள் பயன்படுத்தினீர்கள். முடிவில் அவர்களில் ஒருவராலே தங்கள் உலக வாழ்க்கையே முடிந்துவிட்டது. "என்னை ஏன் அவர் சுட வேண்டும்?" என்று கடைசி நேரத்திலும் தாங்கள் ஒன்றும் புரியாமல் கேட்டீர்களாம்!

அரசியலில் சமயவாதிகளைப் பயன்படுத்தியதின் பெரிய தவறுக்கு, தங்கள் உயிரைக் கொடுத்து பிராயச்சித்தம் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது, பௌத்த பிக்குகள் எங்கும் தலைகாட்டவும் வெட்கப்படுகிருர்களாம். வெளியில் வரவும் பயப்படுவதாகத் தெரிகிறது. இனி அவர்கள் சமய விஷயங்களில் மட்டும் பணி ஆற்றவும், அரசியல் கிளர்ச்சிகளில் தலையிடாதபடியும் தாங்கள் மறைமுகமாகச் செய்துவிட்டது நாட்டுக்குப் பெரியதோர் கடைசி சேவையாகும். இதற்காக நாடு தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கும்.

தங்களைத் தாக்கியவர்மீது கருணை காட்டும்படி தாங்கள் கடைசியாகக் கேட்டுக்கொண்டது, காந்தி அடிகளின் கருணையை நினைவூட்டுகிறது.

பௌத்தராக இருந்தும் தாங்கள், கவலை ஏற்படும் போதெல்லாம் கதிர்காமம் சென்று முருகனை வேண்டி, அவன் அருள் பெற்று பலபல சங்கடங்களையும் வென்றீர்கள். தங்கள் மனைவி முருகனுக்குக் காவடி தாங்கிய காட்சியையும், தாங்கள் மயில்வாகனத்தின் மீதுள்ள முருகக் கடவுளை தலைமீது தூக்கி, அம்பாரியில் வைத்த காட்சியையும் என்னல் மறக்கமுடியவில்லை.

முருகபக்தனுகிய தங்களுக்கு முருகன் பூரண அருள்புரிந்து, தாங்கள் வேண்டியதெல்லாம் அளித்துவிட்டான்!

தங்களது மனைவி மக்களுக்கு உலகமே அனுதாபப்படுகின்றது. அவர்களையும் அந்த முருகன் காப்பதுடன், தங்கள் ஆன்மா பூரண சாந்தி அடையவும் செய்யப் பிரார்த்தனை செய்கிறேன்.

பூஜ்யம்.

# கண்ணீர்வடித்துக் கைகூப்பிநின்ற ஜனத்திரள்

## பிரதமரை வளர்த்திக் கிடந்தபெட்டியைத் தொட்டுக்கண்ணில் ஒற்றினர்

## பரமானந்த சொருபியாகச் சயனித்திருந்தார் பிரதமர்

கைப்பிடித்த மனையாள், கதறியழும் மக்கள், நம்பியிருந்த நாடு—இவர்கள் எல்லோரையும் விட்டுவிட்டு சொலமன் பண்டாரநாயக்கா வீர சுவர்க்கம் எய்திவிட்டார்.

காலஞ்சென்ற பிரதமர் சுடுபட்ட செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே எங்கிருந்தோ வந்து அவருடைய ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தையும் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியையும் முற்றுகை போட்ட ஜனக்கூட்டம், அவர் இறந்த செய்தி எட்டியதும் திரள் திரளாகவும் படை படையாகவும் வந்து பொருமிவிட்டது. அவருடைய பூதவுடல் ஆஸ்பத்திரியிலிருந்து வீடுவந்து சேர்ந்த போது ஜனத்தொடர் இரட்டைவரிசையாக கறுவாக் காட்டுத் தெருக்கள் எல்லாம் சுற்றி அதன் வால் பக்கம் மீண்டும் ரோஸ்மீட் பிளேஸுக்கு வந்துவிட்டது! இந்த பிரமாண்டமான கியூவிலிருந்து பொறுமையிழந்தவர்கள் பிய்த்துக்கொண்டு ஓடிவிடாதபடி அதை அடக்குவதற்காக இவ்வளவு பொலிஸ்காரரும் எங்கிருந்துதான் வந்தார்களோ!

### கண்ணீரும் கம்பலையும்

உறவினரும் நண்பர்களும் மையப்பெட்டியை வீட்டுக்குள் எடுத்துச் சென்றனர். ரோஸ்மீட் பிளேஸின் இரு பக்கத்திலும் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது. மந்திரிகள், நெருங்கிய உறவினர்கள் முதலியவர்களின் கார்களே வீட்டுக்குள் அனுமதிக்கப்பட்டன. சற்று நேரம் கழித்து மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக்கா வந்து தமது மரியாதையைச் செலுத்திவிட்டு கண்ணீரும் கம்பலையுமாக அருகில் நின்று கொண்டிருந்த ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கு ஆறுதல் கூறிவிட்டுச் சென்ருர். மந்திரிகளும், பிரமுகர்களும், நண்பர்களும் - ஏன் எதிரிகளும் கூட—விளுடிக்கொருவராக வந்து, மௌனமாக நின்று கண்ணீர் வடித்தோ, கைகூப்பி நமஸ்காரம் செய்தோ, தங்கள் கவலையையும் இறுதி மரியாதையையும் தெரிவித்தனர். வவனியா எம். பி. திரு. சுந்தரலிங்கம் ஓர் வெள்ளைப் பூமாலையை அணிவித்து கரம் கூப்பி வணங்கி, ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கும் தலை குனிந்து வணக்கம் செலுத்தினர். திரு. பிலிப் குணவர்த்தன, திரு. பீற்றர் கெனமன் முதலிய வேறு பல எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் அஞ்சலி செய்தனர்.

பிரதமர் பண்டாரநாயக்கா வேலை பார்க்கும் சிறிய அறை வெறிச்சென்று தோற்றமளித்தது. கடிதங்களும் விண்ணப்பங்களும், அழைப்புப் பத்திரங்களும், கட்டுக் கட்டாக வேறு காகிதங்களும் அவருடைய மேசையில் கவனிப்பாரற்றுக் கிடந்தன. இவையெல்லாம், துப்பாக்கிக் குண்டுகள் அவருடைய உடலைத் துளைத்த கொடிய தினத்தன்று காலையில், அவர் பார்த்து முடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தவை. வெளி விருந்தையில், அவர் உயிரை மாய்த்த குண்டு ஒன்று ஜன்னல் கண்ணடி ஒன்றையும் சிதறடித்திருந்தது.

### சோடிழந்த அன்றிலைப் போல்


ஸ்ரீமதி பண்டாரநாயக்கா அடிக்கடி வந்து தமது கணவனின் தலையைக் கோதிப் பெருமூச்செறிவதும், பின்பு ஆயாசம் தாழாமல் ஒரு சோபாவில் போய்ச்சார்வதும், திடீரென்று ஏதோ ஒரு பழைய வாழ்க்கை சம்பவத்தை நினைத்துக் கொண்டு, குளறி அழுது கொண்டு திரும்பியோடி வருவதுமாக, சோடிழந்த அன்றிலைப்போல் துயராய்த் துடித்தார். புத்திரிகள் சந்திரிகாவும் (வயது 16) சுனேத்ராவும் (14) அழுதழுது கண் சிவந்து முகம் வீங்கிப் போய் இடி விழுந்தவர்கள் போல் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தார்கள். மகன் அனுரா(10) கைக் குட்டைக்குள் சீறிச் சீறி அழுது கொண்டிருந்தான்.

ஞாயிற்றுக்கிழமை முழுவதும் முடிவில்லாத ஜனக் கூட்டம். இடைக்கிடை பெய்த மழையையும் பொருட்படுத்தாமல், பிரதமருக்கு மரியாதை செலுத்திய வண்ணமிருந்தது. எல்லோருடைய முகத்திலும் கவலை தேங்கிக் கிடந்தது. மௌனமாக ஒவ்வொருவரும் பிரதமரை வளர்த்திக் கிடந்த பெட்டியைச் சற்றி வலம் வந்தனர். சிலர் பெட்டியைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கும்பிட்டனர். 'எந்தையே, உம்மை எப்பிறப்பில் காண்போம் இனி' என்று நினைத்து வருந்தினர்.

திங்கட்கிழமை காலை பிரதமரின் பூதவுடல் ரோஸ்மீட் பிளேஸிலிருந்து ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதற்கு முன் சில கிருத்தியங்கள் நடந்தன. பெட்டி மூடப்பட்டபோது, அனுரா கண்களைப் பொத்திக் கொண்டு விம்மினன். பெண்மமணிகள் எல்லோரும் 'ஓ' வென்று ஓலமிட்டனர்.

### இராஜாங்க ஊர்வலம்

ஆயிரக்கணக்கான மலர்ச் செண்டுகளுக்கிடையே பெட்டி காரில் வைக்கப்பட்டு இராஜாங்க ஊர்வலம் ஆரம்பமாயிற்று. வழி நெடுக இரு மருங்கிலும் கொழும்பில் முன்னெப்போதும் கண்டிராத பெரும் ஜனசமுத்திரம் மௌனமாக நின்று அஞ்சலி செய்தது. ஜனங்களில் பலர் முதல் நாள் சாயங்காலமே வெளியூர்களிலிருந்து வந்து கொழும்பில் இராத்தங்கியவர்கள். பஸ்களிலும் வேறு போக்குவரத்துகளிலும் நெருக்கடி தாங்க முடியவில்லை. நேரம் தவறி வந்து ஊர்வலத்தைக்காண முடியாதவர்கள் அதன் பின் ஓட்டமாய் ஓடினர்கள். இதற்கிடையில் ஏற்கனவே ஜனப்பிரதிநிதிகள் சபையில் பிரமாண்டமான இரு 'கியூ'க்கள் சேர்ந்து விட்டன. இரண்டிலும் படை படையாக நால்வர் நின்றனர். ஒரு கியூ வரிசை கால்பேஸ் வழியாக கொள்ளுப்பிட்டி வரை சென்றது. மற்றது கொம்பனித் தெரு, நகரசபை மண்டபம்வழியாகச் சென்று வளைந்து கொள்ளுப்பிட்டியிலுள்ள மற்ற கியூவின் வாலை எட்டிப்பிடித்தது. மணிக்கணக்காக இப்படி நின்றவர்களுக்கு நீண்ட பெரும் ரப்பர் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் சில இடங்களில் விநியோகம் செய்யப்பட்டது. சில பரோபகாரிகள் சோடா முதலிய பானங்களையும் வழங்கினர்கள்.



காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் பூதவுடல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் பொதுமக்களின் தரிசனத்துக்கு வைக்கப்பட்டிருந்தபோது பல்லாயிரக் கணக்கானேர் தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

ஊர்வலம் அதிகம் தாமதிக்காமல் விரைவில் பிரதிநிதிகள் சபைக்கட்டடத்தைஅடைந்தது. அங்கே சேர்ஜோன் கொத்தலாவல, செனேட்டர் நடேசன், திரு. என். ஆர். இராஜவரோதயம், சேர் ரஸிக் பரீத் முதலியவர்கள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு படிகளில் ஏறிச் சென்றனர். வாயிலில் சபாநாயகர் ஜனுப் எச். எஸ். இஸ்மெயிலும், செனேட் சபாநாயகர் சேர் சிறில் டி சொய்சாவும் அதைப் பெற்றுக்கொண்டனர். பெட்டியைச் சுற்றி அனந்தம் பூச் செண்டுகளும், மல்லிகைப் பூச்சரங்களும், குத்துவிளக்குகளும், பிரதமர் வீட்டிலிருந்தே லொறியில் கொண்டுவரப்பட்ட ஒரு ஆள் உயரமுள்ள நான்கு பெரும் யானைத் தந்தங்களும் வைத்து அலங்காரம் செய்யப்பட்டது. மேல் மூடி திறக்கப்பட்டதும் மகன் அனுரா ஓடி வந்து பன்னீர் தெளித்தான். மகாதேசாதிபதி ஒரு பெரும் மலர் வளையத்தைக் கொண்டு வந்து பெட்டிக்கருகில் வைத்து இரு கரங்களையும் கூப்பி வணங்கினர். தொடர்ந்து புதிய பிரதமர் திரு. தஹநாயக்காவும், பிரதம நீதிபதியும், செனேட் சபாநாயகரும், பிரதிநிதிகள் சபை சபாநாயகரும் அவர்களுக்குப் பின் மந்திரிகளும், எம். பிக்களும் தங்கள் தலைவருக்கு வந்தனை செலுத்தினர்.

எந்த சபையில் கடந்த 22 வருடங்களாக அங்கத்தவராக

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சிந்துநதி நீர்ப்பங்கீடு

## இவ்வாண்டு உடன்பாடு ஏற்படும்?

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே 12 வருட காலமாக இருந்துவரும் சிந்து நதி நீர்ப்பங்கீடு பற்றிய தகராற்றைத் தீர்த்துவைக்கும் ஒப்பந்தம் இவ்வருடம் முடிவடைவதற்குமுன் வாஷிங்டனில் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கி அதிகாரிகளுக்கும் இந்தியா பாகிஸ்தான் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே லண்டன் மாநகரில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் செப்டெம்பர் 15-ம் திகதி முடிவடைந்துவிட்டன. உலக வங்கி இப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு கடந்த எட்டு வருட காலமாக முயற்சி செய்துவந்திருக்கின்றது.

இச்சிக்கலைத் தீர்த்து வைக்கும் சர்வதேச நீர் ஒப்பந்தத்தின் விபரங்களை நிர்ணயிப்பதற்கு வாஷிங்டனில் அக்டோபர் 20ல் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகி முழு உடன்பாடு ஏற்படும் வரை தொடர்ந்து நடைபெறும்.

### எல்லை விவகாரம்

காஷ்மீரின் கிழக்குப் பாகத்திலுள்ள லடாக் பிரதேசத்தில் இந்திய எல்லையைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நேபாளத்திற்கும் சீனத்திற்கும் இடையே உள்ள சுமார் 500 மைல் நீளமான எல்லையை விரைவாக நிர்ணயிக்குமாறு சீன அரசாங்கம் நேபாள அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

ஒக்டோபர் 8ல் பர்மாவின் பிரதம மந்திரி ஜெனரல் லீவின் இந்தியாவுக்கு விஜயம் செய்யும்போது சீன எல்லை விவகாரத்தை இரு பிரதமர்களும் ஆராய்வார்கள் எனத் தெரிகிறது.

## இந்தியா

இந்திய சீன எல்லை விவகாரத்தை சமரசமாக தீர்த்துவைப்பதன் அவசியத்தை வற்புறுத்தி அகில இந்திய காங்கிரஸ் குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

### பம்பாய் இராச்சியம்

பம்பாய் இராச்சியத்தின் எதிர்கால அரசியல் அமைப்பு குறித்து ஆலோசனைகள் கூறுவதற்கு ஒரு குழுவை நியமித்திருப்பதாக இந்திய காங்கிரஸ் தலைவர் திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிருர். இக்குழுவின் அங்கத்தவர்கள் வருமாறு:- பண்டித கோபிபலப்பந், திரு. எஸ். கே. பட்டில், திரு. வை. பி. சவான், டக்டர் ஜீவராஜ் மேதா, திரு. தக்குறுபாய், திரு. தேசாய், திரு. கே. கே. ஷா, திருமதி எம். எஸ். கண்ணம்வார், பாபா சாஹிப் சவாங்கர், திரு. கேட்கர்.

### மேற்கு வங்காள சட்டசபை

சென்ற வாரம் மேற்கு வங்காள சட்டசபையில் அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைக் கண்டித்து விவாதம் நிகழ்ந்தபோது கொம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் மந்திரிமார் மீது சப்பாத்துகளையும், செருப்புகளையும் கழற்றி வீசினர். கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. மறுதினம் உபசபாநாயகர் வன்மையான எச்சரிக்கையின் பின் விவாதம் தொடர்ந்து அமைதியாக நடைபெற்றது.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு புரட்டாசி மீ 17 உ (3-10-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## பண்டாரநாயக்கா படுகொலை

இலங்கையின் பிரதமர் பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்டது, சுதந்திர இலங்கையின் அரசியலில் மிகக் கொடுமையான, வெட்கக் கேடான சம்பவமாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நாம் இரத்தம் சிந்தாமல் அரசியல் சுதந்திரம் பெற்றதாகப் பெருமைப்பட்டோம். புதிதாகச் சுதந்திரம் பெற்ற வேறு பல ஆசிய நாடுகளில் அரசியல் குழப்பங்களும், ஸ்திரமற்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கையில், இலங்கையிலே நாம் ஸ்திரமான அரசாங்கம் அமைத்து ஜனநாயகத்தை வெற்றிகரமாக நடத்துவதாகவும் நம்மில் பலர் கருதி வந்தனர். ஆனால் இந்தப் பெருமையனைத்தும் இப்போது பாழாகி விட்டது.

சென்ற வருடம் நடந்த வகுப்புக் கலவரங்களே இலங்கையின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தி விட்டன. இங்கு ஜனநாயகத்துக்கு மண்டையில் பெரிய அடி விழுந்தது. அதைத் தொடர்ந்து இப்போது பிரதமரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

"கொலை செய்வது அரசியலல்ல" என்று ரத்தினச் சுருக்கமாக ராஜாஜி கூறினர். ஆனல் துரதிருஷ்டவசமாக கொலைகார எண்ணங்கள் இலங்கையில் அதிகரித்து, அரசியல் வாழ்வைப் பயங்கரமாக்கி வருகின்றன. நாடு இதே போக்கில் செல்லுமாயின், நாம்பெற்ற சுதந்திரமே நமக்கு சாபத்தீடாகி, முடிவில் மீண்டும் அடிமைப்பட்டு விடுவோம்.

திரு. பண்டாரநாயக்காவைக் கொலை செய்தவரின் நோக்கம் சொந்த விஷயமாக இருக்கமுடியாது. அப்படி இருப்பின், "என்னை அவர் ஏன் சுட வேண்டும்?" என்று இறப்பதற்கு சில மணி நேரம் முன்பாகவும் அவர் தம் மனைவியாரைக் கேட்டிருக்க மாட்டார். இதற்கு அரசியல் காரணங்கள் இருக்க வேண்டும். பெரிய சதி நடந்திருக்கிறதென்றே கருதுகிறோம்.

இந்தக் கொலையைப் பற்றி போலிசார் தீர விசாரித்து, சற்றும் தயவு தாட்சண்யம் காட்டாமல், சதியில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து, அவர்களுக்குச் சரியான தண்டனை கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

பிரதமரைச் சுட்டுக் கொன்றது சம்பந்தமாக இருபுத்தபிக்குகள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பொது மக்கள், சிறப்பாக சிங்கள பௌத்தர்கள், இப்போது பெரும் ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள். பௌத்த பிக்குகள் யாரும் இதனல் இச் சமயம் வெளியில் தாராளமாக வந்து நடமாடவும் பயப்படுகின்றனர். யாரோ ஒரு புத்திகெட்டவன் செய்த செயலுக்காக புத்த பிக்குகள் எல்லார் மீதும் ஆத்திரமடைவது சரியாகாது.

புத்த பிக்குகளில் பலர் தங்கள் சமய விஷயங்களில் மட்டுமன்றி சமீப காலமாக அரசியலிலும் தலையிட்டுக் கிளர்ச்சி செய்து வந்தனர். சென்ற வருஷக் கலவரங்களின்போது சில பிக்குகள், தார்ச்சட்டி இயக்கத்திலும், பயமுறுத்தல், துண்டுப் பிரசுர விநியோகத்திலும், கலந்து கொண்டதாகப் பல புகார்கள் எழுந்தன. இதனல் புத்த பிக்குகளுக்கிருந்த மதிப்பும் மரியாதையும் வெகுவாகப் பாதகமடைந்தது.

ஜனநாயகமென்பது பெருவாரி சமூகத்தின் ஆட்சி என்று சிலர் தவருக உணர்ந்தனர். மொழி வெறியும், சமய வெறியும் தாண்டவமாடுகின்றன. இந்த வெறிகள் எல்லாம் இனியாவது அடங்கி, இலங்கையில் உண்மையான ஜனநாயகம் ஆரம்பமாகுமா? இதற்கான வகையில், இங்கு அரசியலைப் புனிதமாக்க திரு. பண்டாரநாயக்காவின் மரணம் உதவ வேண்டும்.

## இலங்கையின் தேசிய நெருக்கடி

திரு. பண்டாரநாயக்காவின் திடீர் மரணத்தால், இலங்கைக்குப் பெரிய தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதை உணர்ந்து கவர்னர் ஜெனரல் அவசரகாலப் பிரகடனத்தைச் செய்தார்.

புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டு விட்டதால், அவசரகால பிரகடனத்தை ரத்துச் செய்து விடவேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் கேட்கின்றூர். இந்தப்பிரகடனம் நீடிக்கும்வரை பொதுக்கூட்டங்கள் கூட்டுவது, ஊர்வலம் நடத்துவது, போன்ற உரிமைகள் வெகுவாகப் பறிக்கப்படுமென்பது உண்மையே. என்றாலும் நாட்டில் பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. அடுத்தபடி என்ன ஏற்படுமோ? என்ற கவலையும் பீதியும் வெகுவாக நிலவுன்கிறன. ஆகவே, பரபரப்பு அடங்கி உண்மையான அமைதி ஏற்படும் வரையில், அவசரகால பிரகடனம், எவ்வளவு விரும்பத்தகாததெனினும், நீடிக்கப்பட வேண்டுமென்பதே நமது கருத்து.

புதிய பிரதமர் தகநாயக்கா அரசியலுக்குப் புதியவரல்ல. எனினும் இன்று திடீரென அவர் தலையில் சுமந்துள்ள பொறுப்பு மிக அதிகம். அதிலும் அரசாங்கக்கட்சி மிக பலவீனமடைந்துள்ள நிலையில் அவருக்கு இப்பதவி கிடைத்துள்ளது. இந்த நிலை அவருக்குச் சற்றே திகைப்பும் கலக்கமும் அளிப்பின் அதில் வியப்பில்லை.

சென்ற சனிக்கிழமை அவர் நாட்டுக்கு விடுத்த முதல் அறிக்கையில் "உங்களுடைய அன்பான ஒத்துழைப்பு இல்லாவிட்டால், நானும், புதிய மந்திரி சபையும் பலவீனமான நிலையில் இருப்போம். இந்த துக்கமான சமயத்தில் உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகிறோம்." என்று கேட்டுக்கொண்டார். நாட்டுக்குப் பெரும் நெருக்கடியும் சோதனையும் ஏற்பட்டுள்ள இச் சமயத்தில், தேச அமைதியையும் நன்மையையும் முன்னிட்டு, புதிய பிரதம மந்திரி விடுத்துள்ள வேண்டுகோளுக்கு எல்லாரும் செவி சாய்த்து ஒத்துழைக்க வேண்டியது முக்கிய தேசிய கடமையாகும்.

ஆனல் புதிய பிரதமர் சிங்களத்தில் வெளியிட்ட அதே அறிக்கையில் "நமது நாடு, நமது சமுதாயம், நமது மதம் இவற்றின் நன்மைக்காக திரு. பண்டாரநாயக்கா மேற்கொண்ட கொள்கைகளை அடுத்த 18 மாதங்களிலும் பின்பற்றி தொடர்ந்து வேலை செய்யநாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று கூறினர். இந்நாட்டிலே பல சமூகங்களும், பல மதத்தினரும் சேர்ந்து வாழ்கின்றனர். நாட்டின் பிரதம மந்திரி, எல்லாச் சமயத்தவருக்கும், எல்லாச் சமூகத்தினருக்கும் பொதுவானவர். எல்லாருடைய பொது நன்மைக்காகவும் சேவை செய்ய வேண்டியதே அவரதும் அவரது அரசாங்கத்தினதும் மேலான கடமையாகும். இதுதான் ஜனநாயகத்தின் அடிப்படையுமாகும். ஆனல் புதிய பிரதமரின் அந்தப்பேச்சு, மற்ற சமூகங்களுக்கும், சமயத்தவருக்கும் வீண் சந்தேகங்களை உண்டாக்கி அவர்களது ஒத்துழைப்பு புதிய பிரதமருக்கு தேவைப்படவில்லையோ என்ற தப்பெண்ணத்தை ஏற்படுத்தக் கூடும்.

இதனை உணர்ந்து தானே என்னவோ மறுநாள் இதைப் பிரதமர் ஆங்கிலத்தில் வெளியிட்ட இரண்டாவது அறிக்கையில் திருத்திவிட்டார். "எல்லாருக்கும் நீதிவழங்கவும் இந்நாட்டின் அரசாங்கம் மக்களுக்காக, மக்களால், மக்களுடையதாக நடைபெற வேண்டும் என்பதே எனது கொள்கை" எனவிளக்கினர். வெறும் பேச்சுடன் நிறுத்தாமல், அவர் எல்லாக் கட்சியினரையும் அழைத்து, அவர்களது ஒத்துழைப்பை நாடினல் அது வீண்போக முடியாது. ஒத்துழைப்பு என்பது பரஸ்பர முறையில்தான் இருக்க முடியுமேயன்றி ஒருதலைப் பட்சமாக இருக்க முடியாது.

இதே சமயத்தில் சிறப்பாக சனப்பிரதிநிதிகள் சபையிலுள்ள தமிழ்த்தலைவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்து தங்கள் பழைய வேற்றுமைகள் என்ன இருப்பினும் அவற்றையெல்லாம் மறந்து பொது நோக்கத்துக்காக சேர்ந்து ஒத்துழைக்க முன்வரவேண்டியது மிகவும் அவசியமாகும். அப்படி ஒன்றுபட்டாலே, தமிழ்ச் சமூகத்தின் மதிப்பு உயரவும், அவர்களது நல உரிமைகளுக்குப் புதிய தீங்குகள் ஏதும் ஏற்படாமல் பாதுகாக்கவும் முடியும்.

## நல்ல தருணம்

**பு**திய பிரதமர் திரு. விஜயானந்த தஹநாயக்கா முன்னர் சில சந்தர்ப்பங்களில் பேசும் போதெல்லாம் அடுத்த பிரதமர் பதவி தமக்கே கிடைக்குமெனக்குறிப்பிட்டிருந்தார். அப்படி அவர் பேசும்போது எதனையும் எதிர்பார்த்துப் பேசவில்லை. இயல்பாகவே நகைச்சுவையுடன் பேசுவதிலும் பாக்கள் இயற்றுவதிலும் திறமை வாய்ந்த புதிய பிரதமர் சபையோரைச் சிரிக்கச் செய்வதற்காகவே அப்படி பேசியிருந்தார். அவர் அன்று பேசியது இன்று கைமேல் பலன் அளித்துள்ளது. சும்மா இருக்க இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது போலத் திரு. தஹநாயக்கா தேடாமல் இருக்கவே அவரைத்தேடி அடைந்திருக்கின்றது இலங்கைப் பிரரமர்' என்ற ஒப்புயர்வற்ற பதவி.

இலங்கையின் அரசியலில் மிகுந்த கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள இவ்வேளையில் பொறுப்புள்ள இப்பதவி அவர்மேற் சுமத்தப்பட்டுள்ளது. சிங்களம் மாத்திரம் சட்டம் நாட்டைப் பிரித்துவிட்டிருப்பதுடன் வகுப்பு ஒற்றுமைக்கும் உலை வைத்துள்ளது. இதன் பெறுபேறுகளைச் சென்ற வருடம் இலங்கை நன்கு அனுபவித்தது. அதனல் ஏற்பட்டுள்ள 'புண்' இன்னும் தான் அறவில்லை. எனவே, இத்தருணத்தில் புதிய பிரதமர் தஹநாயக்கா தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ள விரும்புவாராயின் அது வரவேற்கத்தக்கதாகவேயிருக்கும்.

ஆகவே, மொழி சம்பந்தமாக இந்தியாவில் நேருஜி காட்டியுள்ள வழியைப் பின்பற்றி சிங்களம் மாத்திரம் சட்டத்தை 1960-ம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவராது பின்போடலாம். சனநாயக முறையைப் பின்பற்றி மக்களின் நலத்துக்கான ஆட்சியே நாட்டில் நிலவுமென உறுதிஅளித்துள்ள புதிய பிரதமர் மொழி சம்பந்தமான சட்டத்தைத் தவிர்த்தி தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களையும் குளிரச் செய்வார் என எதிர்பார்க்கலாமா? அப்படிச் செய்வதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

## புதிய நம்பிக்கை

**அ**மெரிக்க ஜனதிபதி ஐசனேவரும், ருஷியப் பிரதமர் குருஷேவும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், விசேஷமெதுவுமில்லை என்றும் அது வெறும் கண் துடைப்பு என்றும் சிலர் கூறலாம். ஆனல் அரசியல் அரங்கில் நேர் விரோதமான இவ்விரு தலைவர்களும் சேர்ந்து அளவளாவி ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட முடிந்ததும், இரண்டு வார தினம் குருஷேவ் அமெரிக்காவில் வெற்றிகரமாகச் சுற்றுப் பிரயாணம் செய்ததும் சர்வதேச அரங்கில் மிகவும் வரவேற்கத் தக்கதாகும்.

இந்தச் சந்திப்பினல், பிரச்சினைகள் எதுவும் உடனடியாகத் தீரவில்லை என்பது உண்மையே. ஆனல் யுத்தத்தால் எந்தப் பிரச்சினையும் தீர்க்க முடியாதென்று இரு தலைவர்களும் ஒருமனப்பட்டுள்ளனர். ஆயுத பரிகரணத்தின் அவசியத்தையும் உணர்ந்துள்ளனர். எதிர்காலத்தில் அடிக்கடி சந்திக்க வேண்டுமென்றும் முடிவு செய்துள்ளனர். இதனல் இரு வல்லரசுகளுக்கும் இருந்த 'கெடு பிடி' நிலைமை பெரிதும் தளர்ந்துள்ளது. அந்த மட்டில் உலக சமாதானத்துக்கு நல்லதேயாகும். உலக சமாதானம் இவ்விரு வல்லரசுகளின் நல்லுறவிலேயே பெரிதும் தங்கியுள்ளதென்றுல் அது மிகையாகாது.

அடுத்தபடியாக இரு தலைவர்களும் தங்கள் தங்கள் சகாக்களுடன் நேரில் கலந்து பேசி, "உச்சி மகாநாட்டுக்கு" ஏற்பாடு செய்யலாம். இரு தரப்பினருக்கும் வேற்றுமைகள் அதிகம் உள்ளதென்றுலும், நல்லெண்ணத்துடன் நேரில் கலந்து பேசினல், எந்த வேற்றுமையும் தீர வழியுண்டு இதற்கான புது நம்பிக்கை இச் சந்திப்பின் பயனுக இப்போது உதயமாகியுள்ளது.

## விதியின் விளையாட்டு

என் வாழ்க்கையிலே எவ்வளவோ 'க்யூ' வரிசைகளைப் பார்த்திருக்கின்றேன். ஆனல் பிரதமர் பண்டாரநாயக்காவின் சடலத்தைத் தரிசிக்க, மைல் கணக்கில் நீண்டுள்ள இவ்வளவு பெரிய வரிசைகளை நான் கண்டதே இல்லை.

பெரிய சேனநாயக்கா குதிரைமீதிருந்து விழுந்து இறந்தாரல்லவா? அவர் சடலத்தைக் காணவும் இவ்வளவு பேர் மணிக்கணக்காக நிற்கவில்லை.

சனப்பிரதிநிதிகள்சபை மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது சடலத்தைக் காண 'க்யூ' வரிசைகள் பாம்புபோல் வளைந்து வளைந்து தெஹிவளை பாதையிலும் நீண்டிருந்ததாம்.

"மத்தியானம் ஒரு மணிக்கு பம்பலப்பிட்டியில் இந்த'க்யூ'வில் சேர்ந்தேன்! மெது மெதுவாக நடந்து நடந்து இரவு 9 மணிக்கு பார்லிமென்டை நெருங்கினேன். அங்கே நெருக்கித் தள்ளிவிட்டதால் நானும் இன்னும் சிலரும் 'க்யூ'வுக்கு வெளியே வந்துவிட்டோம். மீண்டும் அதில் சேரமுடியவில்லை. பிரதமரின் சடலத்தைப் பார்க்கமுடியாமல் திரும்பிவிட்டேன்." என்று ஒரு தமிழ் மாணவர் ஏமாற்றத்துடன் தெரிவித்தார்.

'க்யூ' வரிசையிலே என்ன பேசிக்கொண்டார்கள்? என்று கேட்டேன். "முன்னர் பண்டாரநாயக்காவை எதிர்த்தவர்களும், அவற்றையெல்லாம் மறந்து அவரிடம் அனுதாபமும் மரியாதையும் காட்டுகிறுர்கள். பௌத்த பிக்குகளைக் கண்டபடி ஏசுகிறுர்கள்" என்றுர்.

* * *

பிரதமரின் சடலத்தை பார்லிமெண்டுக்கு ஊர்வலமாகக் கொண்டுவந்தபோது லட்சக் கணக்கான மக்கள் கூடிநின்று கண்ணீருடன் அஞ்சலிசெய்தனர். பிரதமரின் குடும்பத்தார், வாய்விட்டுக் கதறி அழுததை நேரடியாகவே கேட்டவர்களும் உள்ளமுருகிக் கண்ணீர்விட்டனர்.

ஆனல் சாதாரணமாக எங்கும் காணப்படும் புத்த பிக்கு ஒருவராவது மருந்துக்கும் அங்குக் காணவில்லை!

* * *

சில பிக்குகளைக் கொழும்பில் சிங்களமக்கள் அடித்துவிட்டதாயும் வதந்திகள் உலவுகின்றன. தனது துக்கத்தையும் மறந்து, ஸ்ரீமதி பண்டாரநாயக்கா வேண்டுகோள் விடுத்தும்கூட, புத்த பிக்குகள்மீது மக்களின் ஆத்திரம் தணிந்ததாகத் தெரியவில்லை.

மஞ்சள் உடைக்கே களங்கம் வந்துவிட்டதாக, ஆஸ்கிரியா பௌத்த பீடத்தார், அறிக்கை வெளியிட்டிருக்கிறுர்கள்.

"பிக்குபோல் உடைதரித்த ஒரு முட்டாள்" தம்மைச் சுட்டதாகப் பிரதமர் கடைசி அறிக்கை வெளியிட்டதும், தமிழரோ, கத்தோலிக்கரோ, முஸ்லிமோதான் இப்படிச் செய்துவிட்டதாக ஒரு ஆபத்தான வதந்தி கிளம்பிவிட்டது.

இது பரவியிருந்தால் என்னென்ன விபரீதங்கள் ஏற்பட்டிருக்குமோ! நான் இங்கிருந்து இதை எழுதியிருக்கவும் முடியாது! நல்ல வேளையாக, போலீஸ் அதிபர் உடனே ஓர் அறிக்கையை வெளியிட்டார். பிரதமரைச் சுட்டதாகப் பிடிபட்டது ஒரு புத்தபிக்குதான் என்று பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் தெளிவாக்கி, சமூகக் கலவரங்கள் ஏற்படாமல் தடுத்தார்.

பிரதமரை வேறுயாராவது சுட்டிருந்தால் நிலைமை என்ன

(9-ஆம் பக்கம் பார்க்க)

# பழைய வரலாறு, இன்றைய அக்கிரமம் நாளைய சுதந்திரம்

## தமிழ் ஈழத்தை உருவாக்குகின்றன

## சிங்கள அரசா? சிங்கள-தமிழ் சமஷ்டி அரசா ? தனித் தமிழ் அரசா? தமிழினம் விரும்புவது என்ன?

### திரு. சுந்தரலிங்கத்தின் ராஜினுமாவும் அவர் தரும் விளக்கமும்

நமது சிறப்பு நிருபர்

**வியாழக்கிழமை நடுநிசி. அமைதி நிலவிய இருளைக் கிழித்துக்கொண்டு கார் 'விர்' எனப் பறந்து சென்றது. 10-00, 11-00, 12-00, 1மணி. வவனியாவில் உள்ள லிங்கம் தோட்டத்தின் வாயிலில் கார் சென்று நின்றது. மறு கணம் ஓர் உயர்ந்த உருவம் எங்களைக் கைகூப்பி வரவேற்றது. "ராஜினுமாச் செய்து விட்டீர்கள் என்பதை அறிந்து தங்களிடம் வந்திருக்கின்றோம். தமிழினத்துக்குத் தாங்கள் கூறவிருப்பதென்ன" என்று வவனியா தொகுதி எம். பி. பதவியை ராஜினுமாச் செய்துவிட்டு, உற்சாகத்துடன் வவனியாவிலுள்ள தமது தோட்டத்தில் இருக்கும் திரு. சுந்தரலிங்கத்தைக் கேட்டோம்.**

**"சொல்லுகின்றேன் கேளுங்கள்" என்று கூறி அவர் பேச ஆரம்பித்தார்:**

வவனியாத் தொகுதியின் எம். பி. பதவியை நான் ராஜினுமாச் செய்துவிட்டேன். இவ்வாறு ஏன் நடந்துகொண்டேன் என்பதைப் பொதுமக்களுக்கு விளக்கவேண்டியது எனது கடமையாகும். ராஜினுமாச்செய்தல்,ஓய்வு பெறுதல், வேலையினின்று நீக்கப்படுதல் என்பன எனக்கு ஏதோ வழக்கமாகிவிட்டதென்பதை மக்கள் நன்கு அறிவார்கள். தகுந்த காரணத்துக்காகவே அவ்வாறு செய்துவந்துள்ளேன் என்பதைக் காலம் உண்மையாக்கியுள்ளது.

#### சேனநாயக்காவின் தொடர்பு

இந்தியன் சிவில் சேவையிலிருந்து 1920ஆம் ஆண்டில் ராஜினுமாச் செய்தேன். பிரித்தானிய ஆதிபத்திய ஆட்சியினின்றும் இலங்கையை விடுதலை செய்து நாட்டுக்கு நற்பணியாற்றுவதற்காகவே நான் அப்பதவியைத் துறந்தேன். இவற்றுக்கெல்லாம் எதிர்ப்புக்கள் இருந்தாலும் எனது உள்ளம் சரியெனக் கண்டதைச் சாதிக்கத் தவறியதேயில்லை. காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயக்காவுடன் நானும் இன்னும் சிலரும் 1924ஆம் ஆண்டிலிருந்து நெருங்கிப் பழகிவந்தோம். அக்காலத்தில் அரசியல் துறையில் திரு. சேனநாயக்கா பயிற்சிபெற்று வந்தார். இவருடைய மந்திரிசபையில் 1947ஆம் ஆண்டு நான் சேர்ந்திராவிட்டால் இலங்கைக்குச் சுதந்திரம் இவ்வளவு இலேசாகக் கிடைத்திருக்கமாட்டாது. திரு. சேனநாயக்காவுக்கும் எனக்குமுள்ள தொடர்பை அறிந்தவர்களுக்கு இவை யாவும் நன்கு தெரிந்த விஷயங்களே.

#### ராஜினுமாச் செய்ததேன்?

சென்றவாரம் நான் பார்லிமெண்டிலிருந்து ராஜினுமாச் செய்ததன் காரணம் என்னவெனின் தமிழ் ஈழம் என்னும் சுதந்திர நாட்டை உருவாக்கும் முயற்சிகளில் இது எனக்கு உதவியாக விருக்குமென்பதே யாகும்.அத்துடன் 1955-ம் ஆண்டிலிருந்து இலங்கையில்வளர்ந்துவரும் சிங்கள ஆதிக்கத்திலிருந்து தமிழ் மக்களை மீட்கவும் எனக்குப் போதியளவு அவகாசம் கிடைக்கும்.

தமிழ் ஈழம் இலங்கைக்குப் புதியதொன்றல்ல. போத்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் நிலவுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே இலங்கையில் தமிழ் இராச்சியம் இருந்துவந்துள்ளது. றெபேட் நொக்ஸ் எழுதிய 'இலங்கையின் சரித்திரத் தொடர்புகள்' என்ற நூலிற்காணப்படும் இலங்கைப் படம்இதற்குச்சான்று பகரும். சரித்திர ஆதாரங்களைக்கொண்டு நிரூபிக்கப் பட்டிருப்பது யாதெனில் இலங்கையில் சிலாபத்திலிருந்து வளவை வரை உள்ள நிலப்பகுதி தமிழரின் பூர்வீகப் பகுதியாக இருந்து வந்துள்ளதென்பதே. தமிழினம், வெவ்வேறு காலத்தில், சில சமயங்களில் சிங்கள நாட்டிலிருந்து பிரிந்தும், அந்நிய ஆட்சிக்குள் இருந்து வந்துள்ளதென்பதும் இதிலிருந்து புலனுகின்றது. தமிழினம் ஒருபோதும் மேனுடுகளின் நேரடி ஆட்சிக்குள் இருந்ததில்லை. சிங்கள ஆதிக்கத்தின் கீழ் அவர்கள் இருந்து வந்ததே இதற்குக் காரணமாகும்.

#### வாக்குறுதிகள் பறந்தன

பிரிட்டனிடமிருந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோது சிங்களத் தலைவர்கள் தமது பொறுப்புக்களையும் வாக்குறுதிகளையும் காற்றில் பறக்க விடுவார்கள் எனத் தமிழ்த் தலைவர்கள் சந்தேகிக்கவில்லை. அப்படியான சந்தேகம் ஏற்பட்டிருப்பின் நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போக்கே வேறு விதமாக மாறியிருக்கும். இலங்கைக்குச் சுதந்திரம் அளிக்கும் சட்டமானது இலங்கையின் முதலாவது பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டபோது தமிழ்ப் பிரதிநிதிகள், இலங்கை இந்தியப் பிரதிநிதிகள் உட்பட, இந்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவேயில்லை. ஆனல் அப்போது கொம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த திரு. தஹநாயக்காவும் வேறு சிலரும் அதனை எதிர்த்து வாக்களிக்கவே செய்தார்கள்.

சுதந்திரங் கிடைத்துப் பல வருடங்கள் கழிந்து விட்டன. 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் ஒன்றின் பின் ஒன்ருக நாட்டில் நடைபெற்ற அக்கிரமச் செயல்களையும் கோர சம்பவங்களையும் தமிழினம் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது.

1. சிங்களம் மட்டும் சட்டம்—ஜூன், 1956.
2. காலிமுக மைதானத்தில் தமிழ் எம். பீக்களின் சத்தியாக்கிரகம். எம். பீக்கள் தாக்கப்பட்டனர்.
3. கொழும்பு, கல்ஓயா பகுதிகளிலும் மற்றும் பல இடங்களிலும் வகுப்புக் கலவரங்கள். 300-க்கு மேற்பட்டோர் இக் கலவரங்களால் உயிரையோ உடமையையோ இழந்தனர். அவசரகால நிலைமை பிரகடனம்.
4. 1957-ம் ஆண்டு முற் பகுதியில் நடைபெற்ற சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம்.
5. சுதந்திர தினமாகிய பெப்ரவரி 4-ம் திகதியை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 'தமிழர் துக்கதின'மாக அனுட்டித்தல்.
6. 1957-ம் ஆண்டில் நாடெங்கணும் பெரியளவிற் சத்தியாக்கிரகம் செய்வதாகத் தமிழரசுக் கட்சியின் பயமுறுத்தல்.
7. 1957-ம் ஆண்டுப் பிற்பகுதியில் செய்யப்பட்ட பண்டா—செல்வா ஒப்பந்தம்.
8. சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தை தமிழரசுக் கட்சி மீண்டும் ஆரம்பித்தது. இதன் எதிரொலியாக தமிழருக்கு எதிராக நாடெங்கும் எழுந்த தார்ச்சட்டி இயக்கம்,—ஏப்பிரல் 1958. தமிழ்ப் பெண்மணிகள் அவமதிப்புக்குள்ளாயினர்.
9. முன்னுள் பிரதமர் இல்லத்துக்கு முன்னுல் சில பிக்குகள் சத்தியாக்கிரகம் செய்ததன் விளைவாக பண்டா—செல்வா ஒப்பந்தம் முறிந்தது. —ஏப்ரல் 1958.
10. செட்டிகுளச் சம்பவம். நீர்ப்பாசன் நில அபிவிருத்திப் பகுதியில் வேலை செய்யும் 300க்கு மேற்பட்ட காடையர்களின் அட்டகாசம்.
11. போகந்தலவாவில் துப்பாக்கிப்பிரயோகம்.
12. கஹாவத்தையிற் கத்திக் குத்து.
13. அனுராதபுரத்திலுள்ள துட்டகைமுனுவின் சிலையின் முன்னுல் சில சிங்கள வகுப்புவாதிகள் தமிழர் சங்காரப் பிரதிக்ஞை செய்தல்.

    எக்சத் பிக்குப் பெரமுனவின் தமிழர் கடைகள் பகிஷ்கரிப்பு.

    ஏருவூரில் துப்பாக்கிப் பிரயோகமும் கத்திக்குத்தும்.
14. வவனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாடு. (23—29-5-58) இம் மாநாட்டின் பாரதூரமான விளைவுகளைப்பற்றி வவனியாப் பிரதிநிதி விடுத்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது இம் மாநாடு நடைபெற்றது.
15. இம் மாநாட்டுக்கு மட்டக்களப்பிலிருந்து தி[illegible]ராஜதுரை எம். பியின் தலைமையிற் புறப்பட்ட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அரசினர் பாதுகாப்பு அளிக்க மறுப்பு.
16. ஹிங்கொரக்கொட—பொலனறுவைப் பகுதிகளில் மூண்டெழுந்த வகுப்புவாதம் இலங்கை முழுவதிலும் தாண்டவமாடியது. பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்ட கணக்கின்படி உயிரிழந்தோரின் தொகை 1600. கற்பழித்தல், சூறையாடல், பெற்ரோல் ஊற்றித் தீமூட்டல் போன்ற பலகோரசம்பவங்கள். இழந்த உடைமைகள் மதிப்பு ரூபா 30 கோடிக்கு மேல்.
17. 1958 மே மாதம் 27ஆம் திகதி நாடெங்கும் அவசரகாலநிலைமை பிரகடனம்.
18. பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழரசுக் கட்சி செயற்குழு அங்கத்தவர்களுக்கு வீட்டு மறியல்.
19. இவ்வாண்டு ஓகஸ்ட்மாதம் குண்டசாலை அரசினர் விவசாயக் கல்லூரியிலுள்ள தமிழ் மாணவர்களைச் சிங்கள மாணவர் வெளியேற்றுதல்.
20. திரு. பண்டாரநாயக்கா சுடப்பட்டதின் விளைவாக 25-9-59 இல் அவசரகால நிலைமைப் பிரகடனம். வகுப்புக் கலவரம் மீண்டும் தலை தூக்காமல் இருப்பதற்காகவே கவர்னர் ஜெனரலால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

#### பொருளாதாரத்தில்

சர்வ சிங்களமயமான இவ்வரசாங்கம் தமிழினத்துக்கு மாருகப்பொருளாதாரத்துறையில் எடுத்துள்ள நடவடிக்கைகள்:

1. காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலையில் இரண்டாவது சூளையை நிறுவாது விட்டமை.
2. 1955-இல் யு. என். பி. செய்த தீர்மானத்துக்குமாருக காங்கேசன் துறை துறைமுக அபிவிருத்தி வேலைகள் கைவிடப்பட்டன.
3. கொழும்பு உதவிநிதித் திட்டத்தின் கீழ் பரந்தன் தொழிற்சாலையில் 'டி. டி. ரி.' இயந்திரத்தைநிறுவுவதற்கு மறுப்பு.
4. வவனியா, மன்னர் மாவட்டங்களைச் சேர்ந்த துணுக்காய்ப் பகுதியில் நிறுவப்பட விருந்த கரும்புத் தோட்டத்தையும் தொழிற் சாலையையும் இவற்றுக்கு பொருத்தமற்ற கந்தலாய் — கல்ஓயா பகுதியில் நிறுவிய செயல்.
5. திருக்கோணமலையில் செயற்கை உரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவவதற்கான திட்டங்களை மட்டந் தட்டுதல்.
6. அரசாங்க சேவையில் தமிழர் உத்தியோகம் பார்த்தல், உத்தியோக உயர்வு பெறுதல் முதலியவற்றுக்கு மாருன பாரபட்ச நடவடிக்கைகள்.

புதிய பிரதமர் திரு. தஹநாயக்கா நாட்டுக்கு விடுத்த முதற் செய்தி சிங்களத்திலேயே அமைந்துள்ளது. அச் செய்தியில் அவர் '**எங்கள் நாடு**' '**எங்கள்** சமயம்' ஆகிய இரண்டையும்வளர்க்கத் தான் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் பழைய பிரதமரின் கொள்கைகளையே தாம் பின்பற்றப் போவதாகவும் கூறியுள்ளார்.

#### மூன்று வழிகள்

இந்த அழகில், ஈழநாட்டுத் தமிழ் பேசும் மக்கள் பின்வரும் வழிகளில் எது உகந்ததென்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாகவிருக்கின்றனர்.

1. **திரு. எதிர்மன்னசிங்கம் போன்ற தலைவர்கள் ஆதரித்து நிற்கும் சிங்கள அரசா?**
2. **தமிழரசுக் கட்சியினர் விரும்பும் சிங்கள-தமிழ் சமஷ்டி அரசா?**

    [குறிப்பு: இந்தவித சமஷ்டி ஆட்சிக்கு எந்த ஒரு சிங்களத் தலைவரோ அல்லது கட்சியோ தமது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை]
3. **அடியேன் எடுத்துக் கூறிவரும் தனித்தமிழ் அரசா?**

இவற்றுள் எந்த வழியை தமிழ்பேசும் மக்கள் தேர்ந்தெடுத்தாலும், ஒற்றுமை பூண்ட நேர்மைமிக்க தலைவர்களிடம் அதற்கான பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டியது தமிழினத்தின் கடமையாகும்.

தளபதிகளே தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் நிலைமையில் எந்த இனமும் தனது விடுதலைப் போராட்டத்தில் வெற்றிகாண முடியாது.

தனித் தமிழ் நாட்டை அமைக்கும் திட்டத்தை ஏற்காத எந்த ஒரு கொள்கையையும் நான் ஆதரிப்பேனேயாகில், எனது மனச் சாட்சிக்கு முற்றும் மாருக நடந்தவனுவேன்.

ஈழத்தின் பழைய வரலாறும் இன்றைய அரசியல் நிலைமையும் தமிழினத்துக்கென ஒரு தனி நாட்டை இன்றியமையாததாக்கிவிட்டது. தமிழ் ஈழம் உருவாகும்வரை இலங்கைக்கு விமோசனம் இல்லை என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

---

## விதியின் விளையாட்டு

(8–ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிருக்கும்? காந்தி அடிகளை ஒரு முஸ்லிம் சுட்டிருந்தால், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் முறையே ஒரு முஸ்லிமோ, இந்துவோ உயிருடன் இருக்க முடியுமா?

* * *

பார்லிமெண்டிலே பிரதமரின் சடலத்தைப் பார்க்க, புத்த பிக்குகளுக்குத் தனி வாசல் அமைத்துள்ளதாக ரேடியோவில் பலமுறை அறிவிக்கப்பட்டது என்ருலும் முதல் வெகு நேரம்வரை அவர்கள் வரவில்லை. பின்னர் பலத்த இராணுவ காவலுடன் மோட்டார் 'வான்'களில் அவர்களை ஏற்றிக்கொணர்ந்து, பின்னர் காவலுடன் திருப்பி அழைத்துச் செல்லவேண்டியதாயிற்ரும்!

நேற்றுவரை "பிக்குகளின் ஆண்டுவா"வாக இருந்த ஸ்ரீ லங்காவில் இன்று ஒரு பிக்கும் வெளியே நடமாட முடியாமல் உள்ளது! அவ்வளவு வெட்கமும் பயமும்! என்னே விதி செய்யும் விளையாட்டு!

—ஐயாறன்

---

இரத்தினக் கம்பளம்
இடமின்மையால் வெளிவரவில்லை

---

## மாயவார்த்தைகளால் மயங்கிவிடமாட்டோம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பண்டாரநாயக்கா தமிழ் மொழிக்கு அளித்த இரண்டாம்தர அந்தஸ்தும் பறிபோகுமென்பது நிச்சயம். அரசியல் நிலைமையில் தமிழ் பேசும் மக்களைப் படுகாயப்படுத்தியுள்ள அதே அரசாங்கம் அதே மக்களைத் தங்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்பது ஏமாற்ருன பேச்சேயன்றி நன்மையான வார்த்தையல்ல. இந்தப் பொய்ப் பேச்சில் தமிழ் மக்கள் மயங்கி விடுவார்கள் என்ற எண்ணமே தமிழ் மக்களை அவமரியாதை செய்வதாகும். நானே அன்றேல் எங்கள் கட்சியோ அரசாங்கத்தின் மாய வார்த்தைகளினுல் மயங்குவதில்லை. இலங்கைத் தமிழர் பூரண சுதந்திரத்துடனும் முழு கௌரவத்துடனும் வாழும் நிலைமை ஏற்படும் வரை நாம் விழிப்பாக இருந்து எதிர்ப்பு மனப்பான்மையைக் கைவிடாமல் அந்தந்த நேரத்துக்கு ஏற்றதாக நேரடி நடவடிக்கையில் இறங்குவதற்கு இலங்கை வாழ் தமிழ் மக்களை முற்றும் ஆயத்தம் செய்துவருவோம். எங்கள் சுபிட்சத்துக்கு வேறு வழி எதுவுமில்லை. ஒரு நாயக்கா போய் இன்னெரு நாயக்கா வருவதால் எவ்வித வித்தியாசமும் இல்லை.

# மொழிச் சிக்கல் நாட்டைப் பிரித்துள்ளது

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மொழி, சாதி, சமயம்

பிரதான பிரச்சினைகளாகிய வறுமையையும், குறைந்த உற்பத்திவிகிதத்தையும் நாம் நீக்காவிட்டால் நமது நாட்டுக்கு விமோசன மேற்படாது. இவற்றை நேற்றிக்கு நேர் எதிர்நோக்காமல் வேறு விஷயங்களில் மக்களின் மனத்தை திருப்ப நினைந்தால் அது வெறும் ஏமாற்று வித்தையாகும்.

ஏற்கனவே அடுத்த பொதுத் தேர்தலில் எந்தச் சுலோகத்தைக் கத்துவோம் என்று யோசனைகள் நடக்கின்றன. மொழிப் பிரச்சினையா, இந்தியப் பிரச்சினையா .அல்லது பௌத்த பிரச்சினையா? இப்படி ஏதாவது ஒரு ஜால வித்தையைக் காட்டி மக்களின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வரும் எந்த அரசாங்கமும் அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

எமக்கு முன்னுள்ள சில பிரச்சினைகளைப்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக, மொழி, சாதி, சமயம், சனப் பெருக்கம் முதலான பிரச்சினைகள் அடிக்கடி எழுகின்றன. 'இந்தியத் தொழிலாளர்களால் நாம் சுகமாக வாழ முடியவில்லை. அவர்கள் இருப்பதால் ஜனப் பெருக்கம் அதிகமாகிவிட்டது' என்பதுதான் கடைசியாக எழுந்துள்ள கூக்குரல். அடிப்படைப் பிரச்சினையாகிய பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்துவிட்டால் இப்படியான கூக்குரல் எழுவதற்கு இடமிராது. ஆனல் இந்தப் பிரச்சினையை நெருப்புக்கக்கும் வார்த்தைகளாலும்,அடிதடியினலும், இரத்தக்களரியினலும் தீர்த்துவிட முடியாது. பொருளாதார, இயந்திர நுட்ப வளர்ச்சிகள் திறமாக நடைபெற்ருல் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

நமது நாட்டைப் பிரித்து வைத்திருக்கும் மொழிப்பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். இலங்கைமக்கள் எல்லோருடைய பலத்தையும் திரட்டி வறுமையை எதிர்த்துப் போராட வேண்டிய நேரத்தில் அரசாங்கம் தனிச் சிங்களக் கூக்குரலை எழுப்பியது. இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து இருந்த காலத்தில், பல பள்ளிக்கூடங்களிலுள்ள தமிழ் மாணவர்கள், சிங்களம் படித்தால் அதிக உத்தியோகங்களைப் பெறலாமென்றும், பொதுவில் தங்களை நல்ல பிரஜைகளாக்குமென்றும் நினைத்து அம் மொழியைக் கற்றுவந்தார்கள். ஒரு சிறுபான்மைப்பிரிவினர் பெரும்பான்மையினரின் மொழியைக் கற்பது இயற்கையே.

நாளடைவில் தமிழ்மக்கள் சிங்களத்தை நன்ருகக் கற்றபின் அதைத் தனி உத்தியோக மொழியாக்கியிருந்தால் கூட இவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கமாட்டாது. அல்லது, இந்தியாவில் நடந்ததுபோல, சிங்களம் இன்னும் 15 வருடங்களில் தனி உத்தியோக மொழியாக்கப்படும் என்று பிரகடனம்செய்து, தமிழ் மாணவர்களுக்கு சகல வசதிகளையும் அளித்து, அதேசமயத்தில் ஏதாவதொருவகைப் பிராந்திய சுதந்திரத்தையும் வழங்கியிருந்தால், சிங்களம் தனி அரச மொழியாக்கப்படுவதில் இவ்வளவு சிரமம் இருந்திராது.

அல்லது, இரண்டையுமே அரசமொழிகளாக்கியிருந்தால், நாளடைவில் ஒவ்வொரு தமிழனும் சிங்களத்தை நன்ருகப் படித்து, பெரும்பான்மை மொழி என்ற முறையில் சிங்களத்தை மட்டும் அரசமொழியாக்கியிருக்கலாம்.

ஆனல் இப்படியான நீண்டகால பரிகாரங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தாமல், சட்புட்டென்று வேலையை முடித்துவிட நினைத்தது. எனவே, தமிழருக்குள் சில புத்திசாலிகளினுடைய உதவியைக்கூடத் தேடாமல், தமிழ்மக்களுக்கெதிராக '24 மணித்தியாலத்தில் சிங்களம்' என்ற கூப்பாட்டைக் கிளப்பியது.

## ஓர் எரிமலை

எந்த நிமிடமும் வெடித்துக் குமுறக்கூடிய ஓர் எரிமலை உண்டாக்கப்பட்டது. இந்த முறை சில அரசியல்வாதிகளுக்கும், அரசியல் பிக்குகளுக்கும் பிடித்தமாயிருந்திருக்கலாம். ஆனல், தமிழரும் சிங்களரும் ஒன்றுசேர்ந்து வறுமையைப் போக்கடிக்க வேண்டியதில் உபயோகிக்கப்படவேண்டிய சக்தி துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள எதிர்ப்பின் பலனுக, அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும், உதவிபெறும் பள்ளிக்கூடங்களிலும்சிங்களத்தைக்கட்டாய பாடமாக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கை நிறைவேறவில்லை. ஒரு சிறுபான்மைக் கட்சி இகழ்ச்சி செய்யப்பட்டதனல் எழுந்த இந்த எதிர்ப்பை அரசாங்கம் புத்திசாலித்தனமாகவும், நீதியான முறையிலும் சமாளித்திருக்கலாம். ஏதாவதொரு நியாயமான உடன்படிக்கைக்கு வந்திருக்கலாம். இப்படி நேர்ந்திருந்தால் தமிழ் மாணவர்கள் சிங்களத்தை ஓர் கட்டாய இரண்டாம் பாடமாக ஏற்றிருப்பார்கள். தமிழ் மொழியும் கலாச்சாரமும் வளர்ந்து செழிப்பதற்கு அரசாங்கம் ஒரு தனிப் பகுதியையே ஒதுக்கியிருக்கலாம்.


நீண்டகாலத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தாமல் உடனடியாகச் சட்டம் உண்டாக்கியபோதிலும், அந்தச் சட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயன்றிருக்கலாம். இதற்கு மாருக, அரசாங்கம், இவ்விரு வகுப்பினருக்குமிடையில் தீராப்பகையை உண்டு பண்ணி, வறுமையை எதிர்த்துப்போராடவேண்டியவர்கள், ஒருவரையொருவர் வெட்டிக் கொத்தி நாசமாக்கும் நிலைக்கு அவர்களைக் கொண்டுவந்துவிட்டது. வகுப்புவாதம் மெல்ல மெல்லச் சீழ்கூட்டி மனிதனைத் தின்னும் ஓர் வியாதி. இது சிலசமயங்களில் அடங்கிக்கிடக்கும். அரசியல்வாதிகள் அதை நினைத்த நேரத்தில் தட்டி எழுப்பி விடுவார்கள். அப்போ ஜனங்கள் எல்லோரும் ஒன்றுகூடி நடாத்தவேண்டிய வறுமைப்போர் என்னுவது?

—தொடரும்


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

ஏனெனில்
அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்.

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்,
த. பெ. 189 கொழும்பு.

மெக்கானிக்குகள் குழந்தைகள், வாலிப வயதினர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன இழந்த சக்தியை மீட்டுத்தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவையாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.

# சிறுவர் பகுதி

## காந்தி மகாத்மா

க. இந்திரகுமார் (பதிவுஎண்: 373)

1869-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி இந்தியாவின் புனிதநாளாகும். அந்த நன்னாளில் மோகனதாஸ் காந்தி பம்பாய் மாகாணத்தில் போர்பந்தர் என்னும் இடத்தில் பிறந்தார். பாரதத்தின் அருந்தவப் புதல்வன் உதித்த போது புதிய நட்சத்திரம் விண்ணிலே விளங்கவில்லை; தேவர்கள் பூமாரி பொழியவில்லை; புதுப் புது விநோதங்கள் தோன்றவில்லை. அண்ணல் காந்தி, அமைதியான நேரத்தில் சாதாரண குடும்பத்தில் தோன்றினர்.

சின்னஞ் சிறு வயதிலேயே மோகனதாஸிடம் பல நற்குணங்கள் காணப்பட்டன. உண்மை பேசுதல், அஞ்சாமை, தாயன்பு முதலிய நற் பண்புகள் இளங் காந்தியின் சீவியத்தில் வேரூன்றி விட்டன. காந்தியைச் சமய சூழ்நிலையிலேயே வளர்த்தவரும் அவரின் வருங்கால வாழ்வை வளம் பெறச் செய்தவரும் அவருடைய அன்னை ஸ்ரீமதி. புத்லி பாய் ஆவர். தாயகத்தில் படித்து எப். ஏ. பட்டம் பெற்ற பின் நியாயவாதப் பரீட்சைக்குப் படிக்க இங்கிலாந்து சென்ற மோகனதாஸ் காந்தி, அன்னைக்குக் கொடுத்த வாக்குறுதிப்படியே அங்கே மதுபானத்தையாவது மாமிசத்தையாவது உட்கொள்ளவில்லை. அன்னை சொல்லைத் தெய்வ வாக்காக மதித்து நடந்துவந்தார்.

அக்காலத்தில் இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமையாகிக் கிடந்தது. தாய் நாட்டிலும் பிறநாடுகளிலும் வாழ்ந்த பாரத மக்கள் ஆங்கிலேயரால் அவமதிக்கப்பட்டனர்; நிறத்துவேஷத்தால் நிந்திக்கப்பட்டனர்; நியாயவாதியாகப் பிறந்தகம் திரும்பிய காந்தி தமது தொழில் விஷயமாகத் தென் ஆபிரிக்காவுக்குச் சென்றிருந்த போது, இந்திய மக்கள் இன்னற்படுவதைக் கண்ணுரக் கண்டார். மனிதனுக்கு மனிதன் அடிமையல்லவென்றும், இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமமென்றும் முழக்கிய காந்திஜி ஆங்கில அரசுடன் போர்ப்பிரகடனம்செய்தார். இப்போராட்டத்தில் அண்ணல் உபயோகித்த ஆயுதங்கள் அன்பும் அஹிம்சையும் ஆகும். இந்திய மக்களின் இன்னல்களைக் களைவதற்குச் சுதந்திரம் அவசியம் எனக் கண்டு பாரத தேசத்தின் விடுதலைப் போரை ஆரம்பித்தார் அஹிம்சா மூர்த்தி. ஹரிஜனத் தொண்டு, இந்து முஸ்லிம் ஒற்றுமை, தேசிய புனருத்தாரணம் முதலிய துறைகளில் இந்திய தேசிய மகாசபையுடன் அல்லும் பகலும் சலியாதுழைத்தார். இவற்றின் பொருட்டு பலமுறை உண்ணவிரதம் இருந்தார்; சிறைவாசமும் அனுபவித்தார்.

இந்திய மக்களின் இதய பீடத்தில் வீற்றிருந்த இப்பெரியார் மஹாத்மா என்றும், பாபுஜி என்றும், காந்திஜி என்றும் அழைக்கப்பட்டார். அன்பு என்ற பாசக் கயிற்றால் பகைவர்களையும் தம்முடன் பிணைத்தார். சாதி மத பேதமின்றி மக்கள் யாவரும் "ஒன்றே குலம்" என்பதற்கமைய வாழ வழி தேடினர். "சாதியிரண்டொழிய வேறில்லை" என்று பாரத சமுதாயத்தை உணரச் செய்தார். இவரின் போதனைகள் வகுப்புவாதப் பேய்களுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. நாதுராம் கொட்சே என்ற கொடிய வகுப்புவாதி யொருவன் 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதி மகாத்மாவைச் சுட்டுக் கொலை செய்தான். இந்தியா சுதந்திரம் பெற்று ஆறு மாதங்கள் ஆக முன்னர் பாரத மாதாவின் சுதந்திரத் தியாகி இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்டார். காந்திஜி நாமம் வாழ்க!.

## புதிய மருமக்கள்

பெயரும் பதிவு எண்ணும்

501. கு. செல்வத்துரை, அசோகா பாடசாலை, எல்கடுவ.

502. இ. நடராசா, கணேச வித்தியாசாலை, சித்தங்கேணி, சிவன்கோவிலடி.

503. சி. இரஞ்சன, பத்மாலயம், உரும்பராய்.

504. கே. விக்ரமசிங்க, சங்கானை, நிற்சாமம்.

505. எஸ். பி. தர்மலிங்கம், அ. மு. த. க. பாடசாலை, கே. ஜி. கன்னத்தோட்டை.

506. பே. பாலச்சந்திரன், 217/3, கடைச்சாமிஒழுங்கை, யாழ்ப்பாணம்.

507. எம். ஜெ. யோசேப், 3/13, சென்ற் ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

508. மு. காளத்தம்பி, கற்கோவளம், பருத்தித்துறை.

509. சி. பொன்னம்பலம், 33, கண்டி வீதி, சுண்டிக்குளி.

510. கு. நவரத்தினராஜா, 8-ம் வகுப்பு, ஸி. ஸி. தமிழ் பாடசாலை, ராஜவீதி, கண்டி.

511. பெ. சிமியோன், கிரிப்பொருவ, எட்டியாங்தோட்டை.

512. செ. பேரின்பநாயகம், மே/பா சூ. செல்வர், உடுவில், சுன்னுகம்.

513. பொ. சண்முகலிங்கம், 3, கச்சேரி கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.

514. அ. பா. ஜெகரட்டினம், 27, புங்கங்குள வீதி, யாழ்ப்பாணம்.

515. ரா. நடராஜ சங்கர், 107, வாணப்பட்டரைத் தெரு, தெப்பக்குளம் P. O, திருச்சிராப்பள்ளி-2, தமிழ்நாடு.

செல்வச் சிறுவர்களே!

அனைவருக்கும் வணக்கம். காந்தித்தாத்தாவை நீங்கள் அறிவீர்கள்; அவருடைய பிறந்ததினம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நேற்று (ஒக்டோபர் 2) கொண்டாடப் பட்டது. காந்தித் தாத்தா உயிர்கள் மீது அன்பு கொண்டவர்: குழந்தைகளைக் கண்டால் கட்டி அணைத்து முத்தமிடுவார். அவர் எல்லாருக்கும் நல்லவராக இருந்து வந்தார். மகாத்மா காந்தியைப்போல நீங்களும் எல்லார் மீதும் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும். பெரிய காரியங்களைச் செய்து புகழ் அடைய வேண்டும்.

சின்ன மாமா

## மூளையில்லாச் சுப்பன்

சி. வைத்தியநாதன் (பதிவுஎண்: 25)

ஓரூரில் சுப்பன் என்றொரு கல்வியறிவற்ற விறகு வெட்டி இருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி விற்றுப் பணம் சம்பாதித்து தன் தாயுடன் சீவித்து வந்தான். ஒரு நாள் அவன் விறகு வெட்டிய களைப்பினல் தன் கோடரியை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு ஒரு மர நிழலில் படுத்துறங்கினன். சிறிது நேரத்தின் பின் எழுந்தான். எழுந்து தன் கோடரியை எடுத்தான். அது வெயிலில் கிடந்ததால் சுட்டது. அவன் அதை வைத்தியரிடம் கொண்டு சென்று "கோடரிக்குக் காய்ச்சல்" எனக் கூறினன். வைத்தியர் அவனுடைய முட்டாள்தனத்தை எண்ணி மனத்துள் சிரித்துக்கொண்டே "கோடரியைக் கிணற்றில் கட்டி இறக்கிப் பின் எடு காய்ச்சல் சுகமாகி விடும்" எனக் கூறினர். சுப்பனும் அவ்வாறே செய்தபின் கோடரி சில்லிட்டிருந்ததால் "அது குணமடைந்துவிட்டது" என்று சந்தோஷப்பட்டான். சில நாட்கள் சென்ற பின் அவன் தாய்க்குக் காய்ச்சல் வந்தது. அவன் இம்முறை வைத்தியரிடம் செல்லாமல் வைத்தியர் கோடரிக்குச் சொன்ன வைத்தியத்தையே தன் தாய்க்கும் "செய்யாதே" என்று தாய் கூறவும் கவனிக்காமல் செய்தான். இதனல் அவன் தாயிறந்தாள். அவன் கவலைக்குள்ளானன். தோழர்களே! சுப்பன் படிக்காததால் தானே இவ்வினை விளைந்தது. ஆகவே நீங்களும் இவ்வாறு இருக்காது நன்கு படியுங்கள்.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 10-10-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்பவேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்
(3-10-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்

கையொப்பம்


பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

## உண்மைக் கதைகள்: உலகச்சுற்றுப் பிரயாணம் — V







ஐரோப்பா:— உலகச்சுற்றுப் பிரயாணம் முடிவடையும் நேரம் நெருங்க, ஐரோப்பிய நகர்களிலும், கிராமங்களிலும் தெருக்களிலும் மக்கள் நிறைந்து வழிந்தனர். அமெரிக்கக்காரரான தொமஸ் முன்னுக்கு வந்து கொண்டிருந்தது. அதன் பின்னலே ஜெர்மன்காரரான புரொற்றஸ் வந்து கொண்டிருந்தது. மூன்ருவதாக, இத்தாலியக் காரான ஸஸ்ற் வந்தது. ஆனல், இத்தாலியக் கார் ஓட்டத்தில் வெற்றி பெறும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டது.

பாரிஸ்:— 1908 ஆம் ஆண்டில், ஜூலை மாதம் 30 ஆம் திகதி யன்று, உலகச் சுற்றுப் பிரயாணத்தில் முதலிடம் பெற்றுவிட்ட பெருமிதத்துடன், பாரிஸ் நகருக்குள் நுழைந்தது அமெரிக்கன் காரான 'தொமஸ்'! அது நியூயோர்க் நகரை விட்டுக்கிளம்பிச் சரியாக ஐந்து மாதமும், 18 நாளுமாகி யிருந்தன. அது ஜெர்மன் காரிலும் பார்க்கப் பத்து நாட்கள் முன்னதாக வந்து சேர்ந்து விட்டது!

சேவை:— ஒரு மோட்டார்ப் பந்தயமாகத் தொடங்கப்பட்ட போதிலும், இந்த உலகச் சுற்றுப்பிரயாணப் போட்டி மோட்டார் கார்களின் விருத்திக்குச் சேவை செய்யவும் உதவியது. கார்களில் உள்ள பல குறைகளை எடுத்துக்காட்ட இப்பிரயாணம் உதவிற்று. அத்துடன், கார்களுக்கு நல்ல ரோட்டுக்கள் தேவை என்ற உண்மையையும் விளக்கியது.

(முற்றும்)

**நியாசலாந்தில் நிகழ்ந்த கலவரங்களின் காரணங்களை ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி சேர் பற்றிக் டெல்வின் தலைமையில் ஒரு விசாரணைச் சபையை பிரித்தானிய அரசாங்கம் நியமித்தது. இவ் விசாரணைச் சபை வெளியிட்ட அறிக்கையிலுள்ள சில முக்கிய விபரங்களை இக் கட்டுரையிற் காண்க.**

# நியாசலாந்துக் கிளர்ச்சி
# மத்திய ஆபிரிக்காவின் எதிர்காலம்
## டெல்வின் அறிக்கையின் எதிரொலி

வ. மகாதேவன்

வட ரொடீசியா, தென் ரொடீசியா, நியாசலாந்து ஆகியவற்றை உறுப்புக்களாகக் கொண்டு 1953இல் உருவாக்கப்பட்ட மத்திய ஆபிரிக்காவின் எதிர்காலத்தை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மூன்று உறுப்பு நாடுகளுள் மிகவும் சிறிய நாடாகிய நியாசலாந்தில் சென்ற பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் ஆர்ப்பாட்டங்களும் கலவரங்களும் நிகழ்ந்தன. இவை காரணமாக 3-3-1959இல் நியாசலாந்தில் பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடிகால நிலைமை இன்னும் தொடர்ந்து நடைமுறையில் இருந்துவருகின்றது. கலவரங்களின்போது கைதுசெய்யப்பட்டவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. கலவரகாலத்தில் ஏறக்குறைய 50 ஆபிரிக்கர்கள் கொல்லப்பட்டார்கள்.

### வெள்ளை அறிக்கை

நியாசலாந்துக் கிளர்ச்சிகள் குறித்து ஒரு வெள்ளை அறிக்கையைப் பிரித்தானிய அரசாங்கம் கடந்த மார்ச் மாதத்தில் வெளியிட்டது. இவ் வெள்ளை அறிக்கையில் ஆபிரிக்க தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள் ஒரு குறித்த திகதியில் நாட்டிலுள்ள ஐரோப்பியர்களையும் ஆசிய மக்களையும் கொலைசெய்வதற்கு ஒரு பெரிய சதித்திட்டத்தை வகுத்துள்ளனர் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. அவர்களுடைய சதித்திட்டத்தில் பாலங்கள், விமானநிலையங்கள், மின்சக்திநிலையங்கள், தந்திப் போக்குவரத்துச் சாதனங்கள், பெற்ரோல் நிலையங்கள் முதலியவற்றைச் சேதப்படுத்தல், ஐரோப்பிய மாவட்ட, மாகாண நிர்வாக அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், மிஷனரிமார், தேசாதிபதி, ஆசியாவைச் சேர்ந்த வாசிகள் அனைவரையும் கொலைசெய்தல் ஆகியவையும் அடங்கியிருந்தன என வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

### டெல்வின் அறிக்கை

நியாசலாந்தில் நிகழ்ந்த கலவரங்களின் காரணங்களை ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரபல நீதிபதி சேர் பற்றிக் டெல்வின் (Sir Patrick Delvin) தலைமையில் நான்கு பேர்கள் அடங்கிய ஒரு விசாரணைச்சபையை பிரித்தானிய அரசாங்கம் 24-3-59இல் நியமித்தது. இவ் விசாரணைச்சபையினரின் அறிக்கை கடந்த ஜூலை 23இல் வெளிவந்தது.

இவ் விசாரணைச்சபையினர் கண்டுபிடித்த விபரங்களில் பிரதானமானவை பின்வருமாறு.

1. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெள்ளையர்களையும் ஆசிய மக்களையும் கொலைசெய்வதற்கு ஒரு பெரிய சதித்திட்டத்தைத் தயாரித்திருந்தது என்பதற்கு ஒருவகையான ஆதாரமும் கிடையாது.

2. மார்ச் மாதத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடிகால நிலைமை நியாயமானதும் தவிர்க்கமுடியாததுமான ஒரு செயலாகும்.

3. கலவரகாலத்தில் பல சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு ஐரோப்பியரையும் கொலை செய்யவில்லை.

4. கலவரங்களுக்கு அடிப்படையான காரணங்கள் 1953இல் நியாசலாந்தைப் பலவந்தப்படுத்தி சமஷ்டி அமைப்பில் உறுப்புநாடாகச் சேர்த்ததும், ஆபிரிக்க தேசிய காங்கிரசை ஒரு பயங்கரவாதிகளின் இயக்கமெனக் கருதி அதன் நடவடிக்கைகளை அரசாங்கம் வன்மையாகக் கட்டுப்படுத்தி வந்ததுமேயாகும்.

5. 1958 ஜூலையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் டக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா நியாசலாந்திற்கு திரும்புவதற்கு முன் நிலைமை மோசமான கட்டத்தை யடைந்துவிட்டது. டக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா மீது சுமத்தப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்கு ஓர் ஆதாரமும் இல்லை. அவர் நிரபராதி; பொதுவாக வலோற்கார நடவடிக்கைகளை அவர் ஆதரிப்பதில்லை. வலோற்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஏனைய காங்கிரஸ் பிரமுகர்களை அவரால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்திருக்கிறது.

"நியாசலாந்தின் தலைவர்கள் சிறைச்சாலைகளில் இருக்கின்றனர். அரசியல் சீர்திருத்தங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. நெருக்கடி நிலைமை உச்சத்தை அடைந்திருக்கின்றது. எமது அறிக்கையின் கருத்துக்களை சரியாக விளங்கிக்கொண்டால் மீண்டும் சனநாயக ஆட்சியை நடைமுறைக்குக்கொண்டு வரலாம். இதற்கு ஆபிரிக்க காங்கிரசின் வலிமையையும் சமஷ்டி அமைப்புக்கு ஆபிரிக்க மக்கள் காட்டி வரும் எதிர்ப்பையும் உணர்ந்து கொள்கையை வகுக்க வேண்டும்" என டெல்வின் விசாரணைச் சபையினர் கூறியிருக்கின்றனர்.

### அரசியலமைப்பின் மறு பரிசீலனை

ரொடீசியா — நியாசலாந்தின் அரசியல் திட்டத்தின்படி இச் சமஷ்டி அரசியலமைப்பின் மறுபரிசீலனை 1960 க்கும் 1963 க்கும் இடையே ஒரு வசதியான காலத்தில் நடைபெற வேண்டும். சமஷ்டிப் பிரதம மந்திரி சேர் ரோய் வெலன்ஸ்கி 1960 ல் நாட்டின் எதிர்கால அரசியலமைப்பு நிர்ணயமாவதை விரும்புகிறார் போலத் தோன்றுகிறது.

வெள்ளை அறிக்கையில் காணப்பட்ட விபரங்கள் பலவற்றுக்கு ஆதாரமில்லை என டெல்வின் அறிக்கை எடுத்துக் காட்டியிருந்தமையால் அவ்வறிக்கை பிரிட்டிஷ் பொதுமக்கள் (கொமன்ஸ்) சபையில் விவாதிக்கப்பட்டபோது குடியேற்ற நாட்டு மந்திரி திரு. லெனொக்ஸ் போயிட் ராஜினமா செய்யவேண்டும் என எதிர்க் கட்சியினர் வற்புறுத்தினர்கள். நியாசலாந்தின் தேசாதிபதி, சேர் ரொபேர்ட் ஆர்மிற்றேஜூம் விலகவேண்டும் எனக்கோஷம் கிளப்பப்பட்டது. ஆனால் இவ்விருவரும் ராஜினமாச் செய்யவில்லை.

### புதிய பெரிய விசாரணைச் சபை

ரொடீசியா — நியாசலாந்து சமஷ்டி நாட்டின் எதிர்காலத்தை ஆராய்ந்து சிபார்சுகள் செய்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு விசாரணைச் சபையை நியமிக்கப் போவதாக பிரதம மந்திரி திரு. ஹரல்ட் மக்மிலன் 21-7-59 இல் தெரிவித்தார். இச்சபையின் முதற் கூட்டம் லண்டன் மாநகரில் இலையுதிர் காலத்தில் நடைபெறும் என்றும் இவ்வருடப் பிற்பகுதியில் சபை கருமமாற்றத் தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இச் சபையில் 26 அங்கத்தவர்கள் இருப்பார்கள். ஒரு பிரித்தானியர் * தலைவராகவும், ஆறு அரசப் பேரவை அங்கத்தவர்களும் (Privy Councillors)- மூவர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பர். ஆறு சுயேச்சை அங்கத்தவர்களும் (இருவர் கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர்) மத்திய ஆபிரிக்காவைச் சேர்ந்த 13 பேரும் இவ்விசாரணைச் சபைக்கு நியமிக்கப் படுவார்கள். மத்திய ஆபிரிக்க அங்கத்தவர்களுள் ஐவர் ஆபிரிக்கர்களாக இருப்பார்களாம்.

(13ஆம் பக்கம் பார்க்க)

* மொங்றன் பிரபு 7-9-59 இல் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.


# யாழ்ப்பாணம்
# ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.


# காலஞ் சென்ற பிரதமர்
# திரு. பண்டாரநாயக்கா ஜாதகம்
## சி. சுப்பிரமணிய ஐயர் கணித்தது

26-9-59 சனிக்கிழமை காலமான இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஜாதகம்.

அக்ஷாம்சம் 6-58 வடக்கு, தேசாந்தரம் 79-52 கிழக்கு. விளம்பி ஞு மார்கழி மீ 26 ௳ (8-1-1899) ஞாயிற்றுக் கிழமை காலை 10மணி 8நிமிடத்தில்

ஜனனம்

**லக்கினம் கும்பம்**

| | | | |
|---|---|---|---|
| | | | கே. |
| ல | | | செ. |
| | | | |
| சூரி புத. ரா. | சந். வெ. சனி இந்தி. | வியா. | |

நக்ஷத்திரம் விசாகம் 4-ம் பாதம் ஜனன காலத்தில் குருமகா திசையில் இருப்பு 22 நாட்கள்.

### மேட சங்கிராந்தி பலன்

திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர் திரு. சி. சுப்பிரமணிய ஐயர் (F. R. A. S.) தமது விகாரி வருஷ பஞ்சாங்கத்தில் மேட சங்கிராந்தி பலன் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்:

"மேட மகர சங்கிராந்திகளையும், கிரக சஞ்சாரங்களையும் நோக்குமிடத்து இவ்வருடத்தில் சனங்கள் வேலையில்லாக் கஷ்டத்தால் சட்டத்தை மீறி நடத்தலும், அடிமை வாழ்க்கையில் கஷ்டமும், உள் நாட்டுக் குழப்பமும், **இராஜாங்கத்தில் முதன்மையுடைய ஒருவர் காத்திராப்பிரகாரமான நிகழ்ச்சிகளால் மரித்தலும்,** சோரபய அதிகரிப்பும், பொதுசன வாழ்க்கையில் பல இடர்களும், பலவித வியாதி சம்பவங்களும் அக்கினி ஆயுத பயமும் உண்டாம்."
**விகாரிஞு பஞ்சாங்கம்**(பக்கம் 30)

# சட்ட சபை மண்டபத்தில்
# ஒரு பரபரப்பான நிகழ்ச்சி
## உறுப்பினர் உடை கிளப்பிய பிரச்சினை

**மலாயாக் கடிதம்**
★
**நமது நிருபர்**

தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்ற மலாயாவில், செப்டம்பர் மாதம் 16-ம் தேதி முதலாவது பாராளுமன்ற துவக்க விழா என்று ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது. ஆனல், 14 ஆவது ஐக்கிய நாட்டு சபையில் கலந்து கொள்ள வெளிவிவகார மந்திரியும், அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட ஐந்து பேர் செப்டம்பர் 12-ம் தேதியே அமெரிக்காவுக்கு செல்லவிருந்ததால் 11-ம் தேதியன்றுமேல்சபை, கீழ்சபை அங்கத்தினர்கள் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்கள்.

இவ்வித சடங்கு, வழக்கமாக நடைபெறும் முந்திய சட்டசபை மண்டபத்தில் இல்லாமல் 12 லட்சம் மலாயன் டாலர் செலவில் கட்டப்பட்டதுங்கு அப்துல் ரஹ்மான் மண்டபத்தில் நடைபெற்றது. கீழ் சபைக்கான 104 உறுப்பினர்களின் 102 பேரும், மேல் சபைக்கான 38ல் 37 பேரும் பிரமாணம் செய்து கொண்டார்கள். கீழ்சபையைச் சேர்ந்த இருவரும், மேல் சபையில் இனிமேல் பேரரசரால் நியமிக்கப்படவிருக்கும் ஒருவரும் அடுத்தகூட்டத்தின் போது பிரமாணம் செய்வர்.

பிரமாணச் சடங்கு நாளன்று மற்றொரு பரபரப்பான நிகழ்ச்சியும் நடைபெற்றது. சோஷலிஸ முன்னணியைச் சேர்ந்த எட்டு உறுப்பினரில் ஆறுபேர் 'கோட், டை' ஆகியவை இன்றி திறந்த கழுத்துச் சட்டையுடன் மண்டபத்தினுள் நுழைந்தபோது முழுக்க முழுக்க தேசிய உடையிலும், ஆங்கில உடையிலும் வந்த கூட்டணி உறுப்பினர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தியது தான் அந்தப் பரபரப்பான நிகழ்ச்சி. இருசாராரும் பத்து நிமிடங்கள்வரை காரசாரமான விவாதம் நடத்தினர்கள். சோ. மு. கட்சியினர், "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் மக்களுக்குப் பிடித்தமான உடையணிந்து வந்திருக்கிறோம். ஆடம்பர உடையில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது" என்றார்கள். இந்த நேரத்தில் பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் வந்து, "நண்பர்களே, இன்னும் நமது உடைப் பிரச்சினையில் முன்னைய சட்டசபையின் கோட்பாட்டினையே அனுசரித்து வருகிறது. ஆகவே, தயவுசெய்து நீங்கள் திரும்பிப் போய், தேசிய உடை அல்லது 'கோட்' 'டை' ஆகியவை அணிந்துவாருங்கள். நீங்கள் வரும் வரை நிகழ்ச்சியை வேண்டுமானல் பின்போட்டு வைக்கிறேன்" எனச் சமாதானப்படுத்தி அனுப்பினர்.

ஏற்கனவே, ஆங்கில மோஸ்தரில் வந்த இருவர், திறந்த கழுத்துடன் வந்த அறுவர் ஆக எட்டுப் பேரும் தங்கள் தலைமைக் காரியாலாயம் சென்றார்கள். ஏதோ ஒரு முடிவுக்குப் பின் ஆங்கில உடையில் 75 நிமிடங்களுக்குப்பின் மண்டபத்தினுள் நுழைந்தார்கள். அப்போது மேல் சபை, கீழ்சபை அங்கத்தினர் அனைவரும் பெரும் கரகோஷம் செய்து வரவேற்றார்கள். பெரும்பான்மை உறுப்பினரைக் கொண்ட கூட்டணியார் அவர்களை அவ்விதம் வரவேற்றது பாராட்டத்தக்கதாகும். அதே நேரத்தில் எதிர்க் கட்சிகளில் ஒன்றாகவும், விரைவில் வளர்ந்து வரும் கட்சியான சோ. மு. யின் உறுப்பினர்கள் தங்களுக்கென ஒரு குறிப்பிட்ட உடையை நிச்சயப்படுத்தாமல், அவர்களுக்குள்ளேயே வெவ்வேறு விதமாக உடுத்தி வந்ததுதான் விந்தையிலும் விந்தையாகக் கருதப்பட்டது.

குறிப்பாக, கனம் டேவிட் அவர்கள் சாதாரண குடும்பத்திற் பிறந்த பச்சைத் தமிழர். தேசிய ஆடைக்கு மதிப்புத் தந்து இருக்கும் மலாயாவில், இவர் போன்றவர்கள் தமிழரின் ஆடைஅணிந்து வந்திருக்கலாம். அதை விடுத்து ஆங்கில ஆடையையும் முறையாக அணியாமல் இப்படிப்பட்ட சரித்திரம் தாங்கும் வைபவத்தின் போது பிறர் நகைக்கத் தக்க விதமாய் நடந்துகொண்டது தான் நமக்கு வியப்பை உண்டாக்குகிறது. கூட்டணியில் சுகாதார மந்திரியாகப் பதவி வகிக்கும் கனம் சம்பந்தன் பதவியேற்ற காலத்திலிருந்து தமிழரின் தேசிய உடையை அணிந்து, அத்துடன் லண்டனுக்கும் சென்று திரும்பினர். இதையறிந்தும் கனம் டேவிட் தமது ஆடையைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்திராதது வருந்தத் தக்கதே.

### பாராளுமன்றத் திறப்பு விழா

மறுநாள், அதாவது செப்டம்பர் மாதம் 12-ந் தேதி காலை 9-30க்கு மேற்சபை, கீழ்சபை அங்கத்தினர்கள் சூழ, மாட்சிமை தங்கிய மாமன்னர் யாங்-டி-பெர்த்துவான் ஆகோங், தமது பாரியார் பேரரசி பரமேஸ்வரியுடன் சர்வ அரசாங்க மரியாதைகளுடன், பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களால் வரவேற்கப்பட்டு, முதலாவது பாராளுமன்றத்தைத் திறந்து வைத்தார்.

(13ஆம் பக்கம் பார்க்க)

அருள்வழி

# நல் வாழ்வு பெறும் வரை மனிதனாக வாழ முடியாது

—க. கந்தசாமி—

மனித ஆன்மா ஒரு புது வாழ்வை வேண்டி ஒரு புதிய அமைதிக்கடலை நோக்குகிறது. வழியில் ஆயிரம் சோதனைகள் குறுக்கிடுகின்றன. வாழ்வை இன்பமாக்க விஞ்ஞான நாகரிகம் ஒளிவீசுகிறது. வானொலி பேசுகிறது. வெள்ளித்திரையில் சினிமா காட்சியளிக்கிறது. புதுப்புது இயந்திரங்கள் இயற்கையை ஆள முயல்கின்றன. ஆயினும் மனித மனம் இயற்கைக் கட்டுக்கடங்காக் காளை போல அலைந்து திரிகிறது. எத்தனையோ தீர்க்கதரிசிகள் அதனைப் பயன்படுத்த வந்தனர். அன்பு, கருணை, வாய்மை, தூய்மை, அறிவு, ஆற்றல் என்பன கொண்டு ஒற்றுமையான சமூக வாழ்வில் இன்பம் காணலாம் என்றனர்.

யேசு, புத்தர், சோக்கிறற்றீஸ், காந்திபோன்றஅருட் பெரியார் முடிபு சோக நாடகமாயிற்று. உபதேச குருமாரை உலகம் கழுவேற்றியது. சாதிச் சண்டைகள், மூடப் பழக்கவழக்கங்கள் என்பன மனித சமூகத்தைப் பாழாக்கி விட்டன. மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே நான், எனது, என்ற ஆயிரம் அகம்பாவத் தடைகள் நிற்கின்றன. அதனால் மனிதன் தன்னையறியாமல் தலைவனையறியாமல், மனிதருள் மனிதனாக வாழத் தெரியாமல் இடர்ப்படுகிறான்.

## தன்னைப்பற்றி அறிதல்

இந்த இடர்ப்பாடு நீங்க வேண்டுமானால் மனிதன் தான் போகிற போக்கில் தன்னைச் சிறிது திரும்பிப் பார்க்கவேண்டும். அப்படி என்றால் தன்னைப் பற்றி அறியவேண்டும்.

“ தன்னையறியத் தனக்கொரு
கேடில்லை
தன்னையறியாமல் தானே
கெடுகின்றான்
தன்னையறியும் அறிவை
அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத்
தான் இருந்தானே ”

என்பது திருமூலர் திருவாக்கு. இன்றைய உளநூல் ஆசிரியர்கள் கண்ட முடிபும் இதுதான். மனிதன் பிறக்கும்போது வேதனையோடு பிறந்து, இறக்கும்போது வேதனையோடு மடிகிறான். இந்த இருண்ட இரண்டு பெருந் துயர்களுக்கிடையில், வறுமை, மடமை, அடிமை போன்ற பல இன்னல்கள் அவனை அல்லற்படுத்துகின்றன. புறவாழ்வை எவ்வளவு அழகு செய்தாலும், அகவாழ்வு துன்ப நரகமாகவேயிருக்கும். அழகான நாற்காலியில் அத்தனையும் மூட்டைப் பூச்சியானால் அமைதியாக உட்கார முடியுமா? செல்லாக் காசுக்கு முலாம் பூசினால் செல்லுபடியாகுமா? முதலில் மனிதன் உள்ளிருந்து திருந்த வேண்டும். மனம் மட்டும் கோணலாய் இல்லாமலிருந்தால் மனிதன் மனிதனாக வாழ முடியும். தன் உழைப்பைக்கொண்டு பொருள் சேர்க்கவேண்டும். இவ்வழியில் பிறருக்குத் தீமை விளைத்தல் ஆகாது. தேவைக்கு மிஞ்சிய செலவும், மயக்கும் பொருள்களும் மனிதனை விட்டகல வேண்டும்.

அடுத்த படியாக மடமையிருள் போக்கவேண்டும். இன மயக்கம், மனமயக்கம் யாவும் மடமையால் வருவன. நல்ல கல்வியறிவினால் மடமையைப் போக்க முடியும். அறியாமையும் உலகில் சமர்புரிகின்றது. அறியாமை மேலிடும்போது மனிதன் மனிதனாக வாழ முடியாதுபோகின்றது.

“ வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற்
காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக்
கடலாய வெள்ளத்தே.

என்று மணிவாசகப்பெருமான் அறியாமை நெறியிலே செல்லுகின்ற மனத்தை அறிவுரைகூறி நன்னெறிப்படுத்துதலை நாம் சிந்திக்க வேண்டும்.

## அடிமை வாழ்வு

நாம் சிலசமயங்களில் எமது உரிமைகளை இழந்து கடமைகளை மறந்து அடிமைகளாக வாழ்கிறோம். தான் ஒரு கருமம் பெறுவதற்காக, அல்லது இன்னொருவருடன் வன்மம் சாதிப்பதற்காகப் பிறிதொருவருக்கு அடிபணிந்து அவருக்கு ஆளாகிக் கருமம் முடித்துக்கொள்கின்றோம். சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல் கடந்தும், பாவித்தும், பாராண்டும் பாட்டிசைத்தும் நாழி அரிசிக்காக இப்படி அடிமை வாழ்வு வாழவேண்டிய அவசியம் இல்லை. இவ்விதம் வாழுவோமாயின் மனிதநிலையில் வாழமுடியாது.

மேலே கூறப்பட்ட துயரங்கள் நீங்கி மனிதன் பூரண மனிதனாக வாழவேண்டின் சுத்தம், சுதந்திரம், ஆகிய சாதனங்களை அணிகலன்களாகப் பெற வேண்டும். புறத்தூய்மையோடு அகத் தூய்மையாகிய திரிகரண சுத்தி வேண்டும். அவை மனம், வாக்கு, காயம் என்பன. தூயஉள்ளம் படைத்தவனிடம் தான் நல்ல எண்ணங்கள் உதிக்கின்றன. அவை தாம் நல்ல வார்த்தைகளாக வாக்கில் வெளிவருகின்றன. நல்லெண்ணங்கள், நல்வார்த்தைகள் இவற்றின் பிரதிபலன்கள்தான் நற் செயல்களாக இருக்க முடியும். “மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்” என்று வள்ளுவர் அறவாழ்வுக்கு மனத் தூய்மையின் அடிப்படைக் காரணத்தை விளங்க வைக்கின்றார்.

கட்டுப்பாடற்ற மனித சுதந்திரம் பாதுகாக்கப்படுவதோடு சுயநலமான வாழ்க்கையில் சிறிது கண்ணோட்டம் செலுத்த வேண்டும். இன்று உலகம் விரும்புவது சுயநலம் தான். மேடைப் பேச்சாளர்களும் உபதேச குருமாரும் பிறர் நலத்தில் பங்கு கொள்ளும்படி புத்தி புகட்டுவர். இன்று உலகம் விரும்பும் இத்தகைய சுயநலத்திற்கும் நான் குறிப்பிடும் சுயநலத்திற்கும் வேறுபாடுண்டு. தன்நன்மையை விரும்பாதவன் பிறர் நன்மையை ஒருபோதும் விரும்பான். “நன்மை கடைப்பிடி” என்று ஒளவையார் பொதுப்படக் கூறும் வாக்கியத்தில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களை நாம் சிறிது சிந்தித்தால் இதன் உண்மை தெயவரும்.

தமக்குள் தாம் செய்கின்ற காதலுக்கு வள்ளுவர் காட்டுகின்ற வரம்பைமீறி விடுகிறது உலகம். “எனைத் தொன்றும் துன்னற்க தீவினைப் பால்” என்று அழுத்தம் திருத்தமாக வரம்பு போடுகின்றார். தனது நன்மையை நாடி. உழைக்கும் போது பிறருக்கு எள்ளளவும் தீமை வராதபடி காத்துக் கொள்ள வேண்டுமென்பதே அவர் வேண்டுதல். வரையறைக்கு கட்டுப்பட்ட. சுயநலம் கிட்டும்வரை மனிதன் மனிதனாக வாழ முடியாது.

மனித சமுதாயம் வறுமை, மடமை, அடிமை முதலாய துயரங்களை நீக்குமாறு நீக்கி, சுத்தம், சுதந்திரம் அடைந்து நல்வாழ்வு பெறும்வரை பூரண மனிதனாக வாழமுடியாது. மனிதன் மனிதனாக வாழ்ந்து, பிறந்ததன் பயனாகிய முத்தியின்பம் பெற வழிவகுப்பானாக.

## நியாசலாந்துக் கிளர்ச்சி

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

### முடிவுக்கு வரவேண்டும்

இவ் விசாரணைச் சபை கடமையாற்றத் தொடங்குவதற்கு முன் கைதிகளாக இருக்கும் ஆபிரிக்கர்கள் விடுதலை செய்து ஆபிரிக்க மக்களின் ஒத்துழைப்பையும் பெற வேண்டியது அவசியம். பலவந்தமாக சமஷ்டியமைப்பில் இணைக்கப்பட்ட நியாசலாந்து பிரிந்து கொள்ள விரும்புவதால் அக்கோரிக்கைக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமா என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். ஐரோப்பிய சிறுபான்மையோரின் கோரிக்கைக்கு உடன்பட்டு பூரண சுயாட்சியை வழங்கினால் தென்னாபிரிக்காவில் உள்ள நிலைமையும் மத்திய ஆபிரிக்காவிலும் பரந்து விடும். இதனால் ஆபிரிக்க மக்களுக்கு ஐரோப்பியர் மீது தீராத பகைமையும் உருவாகி மேலும் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும்.

மக்கள் செறிவு அதிகமானதும், நிலவளம் குறைவானதுமாக உள்ள நியாசலாந்து தொடர்ந்து சமஷ்டி உறுப்பாக இருந்து வர வேண்டுமா, அல்லது பிரிந்து தனி நாடாக இருக்க வேண்டுமா அல்லது பிரிந்த பின் வேறொரு புதிய சமஷ்டி அமைப்பில் சேரவேண்டுமா என்பதை நியாசலாந்து மக்கள் நாட்டு நலங்கருதி முடிவாகத் தீர்மானிக்க வேண்டும். இதற்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் (இப்போது சிறைச்சாலையில் இருப்பவர்கள்) தான் ஏற்ற முடிவை தீர்மானித்து விசாரணைச் சபையினருக்குக் கூற வேண்டும். அல்லது சனவாக்குக் கணிப்பு (Referendum) நடாத்தி முடிவுக்கு வரவேண்டும்.

## மலாயாக் கடிதம்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது, பேரரசர் தேசியத்தின் கொள்கைகளை விளக்கியதோடு, இரு சபை அங்கத்தினர்களும் தத்தம் பொறுப்புகளில் தமக்குள்ள நம்பிக்கையைத் தெரிவித்தார். பின்பு ஏறத்தாழ 11 மணிக்கு மண்டபத்தை விட்டேக, பொதுவான விவகாரங்களில் விவாதம் நடைபெற்றது. 12-30க்கு சபை கலைந்ததோடு அடுத்த கூட்டம்வரை பின்போடப்பட்டது.

இந்தியர்களைப் பொறுத்தவரையில் மேல் சபையில் நான்கு பேரும், கீழ்சபையில் மந்திரி கனம் வீ. தி. சம்பந்தன் உட்பட எட்டுப் பேரும், அதாவது மொத்தம் 12பேர் இருக்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்திருப்பினும் தமிழர்களுக்காக அறைகூவல் விடுத்துப் பாடுபடுவார்கள் என்று தாராளமாய் நம்பலாம். மற்றவை அடுத்த கடிதத்தில் பார்ப்போம்.



# பிரதமரின் கொலை பற்றி நிலவும் கருத்துக்கள்

ம. ம.

பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் படுகொலை நாட்டிற் பலவித சிக்கல்களைக் கிளப்பியுள்ளது. சிலர் இக்கொலை திட்டமிடப்பட்டு செய்யப்பட்டதாகக் கூறுகின்றனர். சிலர், கொலை செய்தவருக்கும்கொலைசெய்யப்பட்டவருக்குமிடையே ஏற்பட்டிருந்த பிரத்தியேக மனஸ்தாபத்தையொட்டியே கொலை நடந்ததென்று கூறுகின்றனர். பிரதமரின் வீட்டிலிருந்த இரு புத்த பிக்குகளுக்குமிடையே தொடர்பு உண்டு எனச்சிலரும், அப்படியில்லையென வேறு சிலரும் கூறுகின்றனர்.

பிரதமர் சுடப்பட்ட தினம் தொடங்கி இன்றுவரை நாட்டில் அடிபடும் செய்திகள்பல.

பிரதமர் தமது வாசஸ்தலத்திலே, வெளி விருந்தையில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். அவரைச் சுட்டவர் தல்டுவ சோமராமதேரோ என்னும் புத்தபிக்கு. இவருடன் பிரதமரின் வீட்டில் இன்னும் இரு புத்த பிக்குகளும், ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயரும் இருந்திருக்கின்றனர். அத்துடன், வீட்டிலுள்ள வாசிகசாலை அறையில் திரு. விஜயசிங்க என்ற ஒருவரும் இருந்திருக்கிறார்.

கொலை செய்த புத்த பிக்குவான சோமராமதேரோவுடன் கூடிவந்திருந்த பிக்குவின் பெயர் கலகெதர பஞ்ஞாசேகர தேரோ என்பதேயாகும். இந்தக் கலகெதர பஞ்ஞாசேகர தேரோவுக்கும், சோமராம தேரோவுக்கும் ஏற்கனவே தொடர்பு இருந்துள்ளதென இப்பொழுது வெளியாகியுள்ளது. இவர்களிருவரும் கொழும்பு வியாபாரி ஒருவரிடம் பண மோசடி செய்ததாக இவர்கள் மீது கண்டி நீதிஸ்தலத்தில் ஏற்கனவே வழக்குத் தொடரப்பட்டுள்ளதாம். இந்த வழக்கில் பண மோசடி செய்தவராகக் கூறப்படுபவர் பஞ்ஞாசேகர தேரோ. வழக்கில் சாட்சியாக அழைக்கப்பட்டிருப்பவர் டி. சோமராமதேரோ. குறித்த வியாபாரி ரூ. 25,000க்கு மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில், பஞ்ஞாசேகர தேரோவுக்கு உடந்தையாக ஒரு பிரபல வியாபாரி கொடுத்த 'புரோநோட்' ஒன்றில் சோமராமதேரோவும் சாட்சியாகக் கையெழுத்திட்டிருக்கிறார். சோமராமதேரோவைப் பொதுசனம் தாக்கிய பொழுது, அவ்விதம் அவரைத் தாக்கவேண்டாமெனக்கேட்டுக் கொண்டவர் பஞ்ஞாசேகர தேரோ என்பதும் வெளிவந்துள்ளது.

## மூன்றாவது பிக்கு

அங்கு காணப்பட்ட மூன்றாவதுபிக்கு ஆனந்த தேரோ. இவர் தமது சாட்சியத்தில், சோமராமதேரோ, பிரதமரின் வீட்டு விருந்தையில் மன அமைதியற்ற நிலையிற் காணப்பட்டாரென்றும் கூறியுள்ளார்; சுட்டவரை பிடிப்பதில் தானும் மற்றவர்களுடன் ஈடுபட்டாரெனவும் தெரிவித்துள்ளார். வேறு பல சாட்சிகள் இருந்தபடியால்தான், உடனே தேவை இல்லையென்று கருதியே தான் இரத்தம் படிந்த உடையை மாற்றச் சென்றதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்து சேர முன்னர், அவர் அவசரப்பட்டுப் போய்விட்டார். எனினும் அவர் தமது விலாசத்தை டெலிபோன் மூலம் பொலிஸாருக்குப் பின்னர் அறிவித்திருந்தார். விசாரணையின் பின் அவர் இப்பொழுது விடுதலை செய்யப்பட்டுள்ளார். மற்ற இரு பிக்குகள் இன்னும் காவலிலே உள்ளனர். பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இதுவரை விசாரித்துள்ள 11 பேரில் இன்னும் இரு பிக்குகள் இருக்கின்றனர்.

இக்கொலை தனிப்பட்ட ஒருவரின் செயலாயின் பிரதமருக்குக் குறித்த பிக்குவை ஓரளவு தெரிந்திருக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கலாம்.

## விசாரணை

பிரதமர் திரு. பண்டாரநாயக்கா சுட்டுக் கொலைசெய்யப்பட்ட முயற்சியானது சதித்திட்டமல்ல என ஒரு பொலிஸ் அதிகாரி கூறியுள்ளதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என புதிய பிரதமர் திரு. தஹநாயக்கா கூறியிருக்கின்றார். அத்துடன் இக்கொலை சம்பந்தமாக நடைபெறும் விசாரணை பொலிஸாரால் நல்ல முறையில் நடாத்தப்படவில்லை என்னும் குறை பொதுமக்களிடையே காணப்படுவதாகவும், அதை நீக்க உடனடியாகப் பொலிஸ் அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளைக் கையாள வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார். இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் தலைமையில் விசாரணை ஒழுங்காக நடைபெற்று வருவதாகவும் புதிய பிரதமர் பொதுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியொன்றில் உறுதிப்படுத்தியுள்ளார்.

## பரமேஸ்வரக் கல்லூரி நவராத்திரி இசைஅரங்கு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரி ஆலயத்தில் நேற்று மாலை ஆறுமணிக்கு ஆரம்பித்த நவராத்திரிகால இசை அரங்கு 10-10-59 சனிக்கிழமை வரை நடைபெறும். இசைநிகழ்ச்சிகள் தினமும் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். பிரபல கலைஞர்கள் இந்நிகழ்சிகளிற் பங்கு கொள்ளுகின்றனர்.

## கண்ணீர் வடித்துக் கைகூப்பி நின்ற ஜனத்திரள்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் மந்திரியாகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் தேசத் தொண்டாற்றி, தமது அற்புதமான வாக்குவன்மையால் அங்கத்தவர்களை மகுடியில் பட்ட நாகம்போலச் சிக்க வைத்து, சில வாதங்களில் தோற்று பலவற்றில் வென்று, இலங்கை மாதா தந்த அரும்புதல்வர்களில் ஒருவரென அகிலமெலாம் புகழ் நாட்டினரோ, அந்த சபையில் இன்று, சகலவிதமான பொறுப்புக்கள் பாரங்கள் எல்லாவற்றையும் களைந்தெறிந்து விட்டு, நிம்மதியாகப் பரமானந்த சொரூபியாக சயனித்திருந்தார் சொலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா.

11 மணியளவில் வெளியில் கூடியிருந்த பொது மக்கள் அனுமதிக்கப்பட்டார்கள். கிட்டத்தட்ட 2 லட்சம் பேர் வரை கூடியிருந்தார்களாகையினால் அதிக நேரம் நின்று பார்ப்பதற்கு இடம் கொடுக்கப்படவில்லை. நிமிடத்துக்கு 150, 200 பேர் வரை வந்து போய்க் கொண்டிருந்தார்கள். 'கியூ'வரிசையில் நிற்கும் பொறுமையில்லாதவர்கள், குறுக்கு வழிகளால் உள்ளே செல்ல முயற்சித்தார்கள். ஆனால் கட்டடத்தைச் சுற்றி நின்ற உறுதியான பொலிஸ் மதிலை அவர்கள் தாண்ட முடியவில்லை.

செவ்வாய்க்கிழமை முழுவதும் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த பிரதமரின் பூதவுடல் புதன்கிழமை காலையில் அவரது சொந்த ஊராகிய ஹொரகொல்லைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவருடைய வளவிலேயே ஓரிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

திரு. பண்டாரநாயக்கா பரிநிர்வாணப் பதவிஎய்துவாராக!

## உண்ணுவிரதம் இருக்குமாறு இந்திரன் உத்தரவு

**பினாங்கில் நவபுத்தர்**

பினாங்கிலுள்ள சிகரெட் விற்பனையாளர் ஒருவர் தம்மை ஒரு 'வாழும் புத்தர்' என்று கூறிக் கொள்கிறார். இவரது பெயர் லிம் ஈவ் ஹோர். காற்று நுழையாத கண்ணாடிப் பெட்டிக்குள் இவரை 49 நாட்களுக்கு அடைத்து வைத்திருக்கின்றனர். இவருடன் ஏழு கரப்பான் பூச்சிகளும் 20 எறும்புகளும் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

உண்ணுவிரதம் இருக்குமாறு தமக்கு இந்திரனிடமிருந்து உத்தரவு வந்திருப்பதாக இவர் குறிப்பிட்டுள்ளார். பினாங்கில் 200 பக்தர்கள் முன்னிலையில் இவரைப் பெட்டியில்வைத்துப் பூட்டினர்.

## நாகையா நினைவு கட்டுரைப் பரிசு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா கஷ்ட நிவாரண சங்கத்திற் சமீபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் 'சைவ சமயத்துக்குச் சட்டம் வேண்டாம்' என்ற கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இக்கூட்டத்துக்கு திரு. ஐ. வயித்தியநாதன் தலைமை வகித்தார். காலஞ்சென்ற திரு. சி. நாகையாவின் நினைவை முன்னிட்டு இப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## புரட்சிகரமான தபால் நிலையம்

### ஆளில்லாமலே பல வேலைகள்

வாஷிங்டன்

இயந்திரங்களைக் கொண்டே பல வேலைகள் செய்யும் புரட்சிகரமான புதிய தபால் நிலையம் ஒன்று நிறுவப்படுமென்றும், அதனால் செம்மையாகவும் விரைவாகவும் வேலைகள் நடைபெறும் என்றும் அமெரிக்க போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் சம்மர்பீல்ட் அறிவித்துள்ளார். "புராஜக்ட் கேட்வே" என்பது அந்தத் திட்டத்தின் பெயர். அதன்படி கலிபோர்ணியாவில் ஒக்லாந்து என்னும் இடத்தில் ஒரு தபால் நிலையம் அமைக்கப்படும். தபால்கள் விரைவில் வந்து சேரவும், போக வேண்டிய இடங்களுக்கு விரைவாகப் போகவும் அது நிறுவப்படுகிறது. அந்தத் தபால் நிலையத்தில் பயன்படுத்தப்படவிருக்கும் புதிய சாதனங்கள் சிலவற்றை சம்மர்பீல்ட் நிருபருக்குக் காட்டினார். தபால் தலைகள் விற்கும் இயந்திரம், விலாசங்களைக் கண்டு கொள்ளும் இயந்திரம். பார்சல்களைப் பிரிக்கும் இயந்திரம் முதலியவற்றை அவர் காட்டினார்.

## கலைவாணி சனசமூகநிலையம்

யாழ்ப்பாணம்

இலங்கைவாழ் தமிழினத்தின் விடுதலைக்காகத் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து வரும் கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. கு. வன்னியசிங்கம் அவர்களின் அகால மரணம் குறித்து விசேட கூட்டம் ஒன்று ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தினரால் ,திரு. வே. சா. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

மறைந்த தலைவரின் ஆன்மா சாந்தியடையும் பொருட்டு 2 நிமிடநேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

# பெருவாழ்வா? சிறுவாழ்வா?

— க. கணேசலிங்கம் —

'ஐந்தாவது பெண் கெஞ்சினாலும் கிடையாது' என்பார்கள். நான் கெஞ்சாமலே பிறந்திருக்கிறது ஐந்தாவதும், பெண்ணுக. ஐந்து பெண் பெற்ருல் அரசனும் ஆண்டியாவான் என்பதை நிரூபிக்க!

"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும்" என்று என் திருமணத்தன்று வாழ்த்திய என் சுற்றத்தார்கள், 'அவனுக்கு மூன்று குமர். அதோடு இப்ப பிறந்ததும் பெண்' என்று கவலைப்படுகின்ருர்கள்.

'பெண் குழந்தைகள் தான் நல்லது. அவர்கள்தான் வீடு வாசலைக் கூட்டித் துப்புரவு பண்ணி சுத்தமாக வைத்திருப்பார்கள். ஆவ தேவைக்கு சோறு சமைத்துத் தருவார்கள்' என்று விட்டுக் கொடுக்காமற் பேசினாலும் வீட்டில் நடக்கும் விவகாரங்களைப் பார்த்தால் எல்லாமே இப்படிப் பெண் பிள்ளைகளாகப் பிறக்க வேண்டுமா என்றே எண்ணத் தோன்றுகிறது.

'அப்பா எனக்குத் துணி' 'அப்பா எனக்கு ஊசி' 'அப்பா எனக்கு நூல்' அப்பப்பா இப்படிக் குரலெழுப்பி என்னைக் குழப்புகின்ருர்கள்.

வீட்டில் தூசி மண்டிக் கிடந்தால் அதைப் பார்த்து விட்டுப் போவார்களே அன்றி ஒரு துரும்பைக் கூடக் கையால் எடுக்க மாட்டார்கள். வீட்டு வேலை செய்தால் பெண்களுக்கு அவமானமில்லையா?

ஏதோ படிப்பித்துவிட்டால் பிற்காலத்தில் தங்கள் பாட்டைப் பார்த்து விடுவார்கள் என்று சிலர் எண்ணுவதுண்டு. ஆனால் படிப்பிப்பதென்ருல்!

இந்த டீச்சர்மார் அதை வாங்கு இதை வாங்கு என்று இலேசாகச் சொல்லி விடுகின்ருர்கள். இங்கே என் பெண்கள் வந்து என் உயிரையே வாங்குகின்ருர்கள்.

சமையல் செய்யப் பழகுகின்ருர்களாம் பாடசாலையில்! என் மனைவி எல்லாம் பாடசாலையிலா சமையல் பயின்ருள்? ஏதோ உப்போ மிளகோ, பாட்டுச் சமைக்கிருள், நானும் சாப்பிட்டு வருகிறேன். இதைப் பாடசாலையிலா பயில வேண்டும்?

பாடசாலையில் என்போன்று சாதாரண மனிதன் சாப்பிடும் சமையலையா பழக்கிக் கொடுக்கின்ருர்கள்? ஐஸ்கிறீமும், அல்வாவும் செய்யும் விதமல்லவா செய்து காட்டிக் கொடுக்கின்ருர்கள்.

என் மூத்த மகளைக் கூப்பிட்டு 'பாடசாலையில் சமையல் பழகிருயே, உலையில் அரிசியைப் போடு' என்ருல் 'எனக்கு இதைக் காட்டித் தரவில்லை' என்கிருள்.

இத்தனை காசும் செலவழித்துப் படிப்பிக்கின்றேனே. ஆவ தேவைக்கு ஒரு சோறு காச்சித் தர முடியாதாம்!

அம்மாவுக்கருகில் இருந்து இவற்றைப் பழகிக் கொள் என்ருல் 'எனக்குப் பள்ளிக்கூடப் பாடங்கள் இருக்கு. நான் சமையலுடன் மினக்கெட முடியாது' என்று மறுப்புக் கூறி எந்தப் புத்தகத்தையோ எடுத்துப் புரட்டுகிருள். வெறும் புரட்டுத்தானே!

அழுகுரல் ஒன்று மிதந்து என் மனைவி தனியே இருக்கும் அடுப்படியைச் சேரும். 'அந்தச் சின்னனைச் சற்று அழாமற் பார்த்துக் கொள்ளத் தெரியாதா?' என் இரண்டாவது மகளுக்குத்தான் அவள் கூறுவாள். 'நான் சங்கீதப் பாடங்கள் படிக்க வேணும். அதைத் தாலாட்ட எனக்கு நேரமில்லை. பெரிய கரைச்சல்' எரிச்சலுடன் கூறுவாள்.

'இதுகள் எப்படித்தான் பிற்காலத்தில் குடும்பம் நடத்தப் போகுதுகளோ தெரியாது!' சலித்துக் கொண்டு குழந்தை அருகில் வருவாள் என் மனைவி.

என் மூன்ருவது, தையல் பழகுது. தையலில் பெற்ற பரிசுகள் சுவர் நிறையத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. சதா பூப் போடுகின்றேன், பூப் போடுகின்றேனென்று எதையோ போட்டுக் கொண்டிருப்பாள். யாரை நினைத்துப் போடுகிருளோ தெரியவில்லை. என் சட்டை சற்றுக் கிழிந்து விட்டது தைத்துத் தா என்று கொடுத்தால் அந்தச் சட்டையை நான் திருப்பிப் போட முடியாத நிலைக்குக் கொண்டு வந்து விடுவாள். 'என்னம்மா இது! சட்டை போட முடியாமற் பண்ணி விட்டாயே' என்ருல், 'அதை விட்டுட்டு வேறு சட்டையைப் போட்டுக் கொள்ளுங்கள்' என்று புத்தி கூறுகின்ருள்.

எலும்புந் தோலுமாக இருக்கும் என் நாலாவது மகள், தான் உடற் பயிற்சி ஆசிரியையாகப் போகின்ருளாம். படிப்பு ஓடா விட்டாலும் அவள் ஓட்டத்தில் கெட்டிக்காரி. 'இதெல்லாம் அவளுக்கு எதற்கு' என்று என்னிடம் மனைவி முறையிடுகிருள்.

இதுகளைப் பழகிக் கண்ட மிச்சமென்ன?

ஐந்து குழந்தைகளுக்குத் தாயான பின்பும் இவர்களைக் காட்டிலும் இளமையோடு இருக்கின்ருளே என் மனைவி! இவர்களைப் போல் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டா ஓடினுள்?

'உம்முடைய மனைவியோ மகளோ?' என்று பலர் என்னிடம் கேட்குமளவிற்கு இருக்கும் அவளுடைய இளமை இந்தப்பூச்சுக்களெல்லாவற்றையும் பூசும் இவர்களிடமில்லையே!

அவள் தன் கடமைகளை உணர்ந்து செய்கிருள். இவர்கள் உடைமைகளை விற்ருவது உல்லாச வாழ்வு வாழ நினைக்கின்ருர்கள்.

சினிமா, சினிமா என அழுகிருர்களென்று சினிமாவுக்குக் கூட்டிச் சென்ருல் வரும்பொழுதும் அழுதுகொண்டிருக்கின்ருர்கள்.

அங்கு வரும் நடிகைகள் அணிந்திருக்கும் நகைகளைப் போல் தமக்கும் வாங்கித்தருமாறு கேட்கிருர்கள். அவர்கள் போட்டிருக்கும் நகையைப் பொன்னல் செய்து போடுவதென்ருல் என்னல் ஆகக் கூடிய காரியமா?

என்ன செய்வது, அருமையாக வளர்த்து விட்டோமே என்று மனைவி போட்டிருக்கும் ஓரிரு நகையைத்தான் அவர்கள் கூறிய உருவங்களில் மாற்றிக் கொடுத்து வருகிறேன்.

இதையெல்லாம் போட்டுக் கொண்டு வீட்டு வாசலிலே வந்து நிற்கிருர்கள்.

வயது வந்த பெண்கள் இப்படி வாசலிலே வந்து நிற்கக் கூடாதென்ருல் 'எத்தனை நேரத்துக்கு வீட்டுக்குள் அடைஞ்சு கிடப்பது' என்று சுகாதாரம் பேசுகிருர்கள்

இவற்றை எல்லாம் யோசித்து இவர்களை யார் தலையிலாவது கட்டிப்போட்டு நான் நிம்மதியாக இருக்கலாமென்ருல், உத்தியோக மாப்பிள்ளையைக் கொண்டுவரட்டுமாம். மாப்பிள்ளைகளே உத்தியோகமில்லாமல் இருக்கும்பொழுது உத்தியோக மாப்பிள்ளைக்கு நானெங்கே போவது?

அடுத்த பிறவியைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் நான் இறைவனிடம் வேண்டும் வரம் இதுதான்:

பெண்ணுகப் பிறந்தாலும் பாதகமில்லை; பெண்களின் தகப்பனுக மட்டும் நான் மீண்டும் பிறந்துவிடக்கூடாது என்பதே.

சினிமா உலகம்

## ★ மின்னல் வீரன் ★

பல கிராமங்களை அடக்கி ஆளும் ஜமீன்தாரின் கைப்பிடிக்கு அடங்காத ஊர்தான் மோகினித் தீவு. அத் தீவின் மக்கள் செம்படவர். அவர்களில் ஒருவன் சின்னையா. ஜமீன்தாரின் அநியாயத்தினால், வீண்பழி சுமத்தப்பட்டுச் சிறைக்குச் செல்கிறான் சின்னையன். சிறையிலிருக்கும்போது, அவன் மனைவி ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்துவிட்டு இவ்வுலகைவிட்டு மறைந்துவிடுகிறாள். அந்த ஆண்மகன் வாட் சண்டை, குதிரை ஓட்டம் முதலிய போர்ப் பயிற்சிகளில் வல்லவனாக வளர்ந்து மின்னல்வீரனாகத் திகழ்கிறான்.

மின்னல் வீரனாக வந்திருக்கும் ரஞ்சன் நன்றாக நடித்துள்ளார். முக்கியமாக அவர் தோன்றும் குறும்புக் கட்டங்களிலும், காதல் கட்டங்களிலும் அவருடைய முகபாவம் உணர்ச்சியுடன் ததும்புகின்றது.

ஜமீன்தாரின் மகளாக, ரஞ்சனின் ஜோடியாக வரும் சந்தியா அளவுடன் நடித்து, இனிமையாகப் பேசி, அழகாக நடனமும் ஆடுகிறார்!

படத்தின் வில்லன் உண்மையில் ஜமீன்தாராக விருந்த போதிலும், அந்தப்பாத்திரத்தின் உணர்ச்சிகளைப் பிரதிபலித்து, ரசிகர்களின் உள்ளங்களில் 'வில்லன்' ஸ்தானத்தைப் பெறுபவர்—வேறுயாருமில்லை, வீரப்பாதான்!

எம். பஷீரின் நடிப்பு மற்றப் படங்களில்போல் இதில் சோபிக்கவில்லை.

காகா ராதாகிருஷ்ணன்—முத்துலட்சுமி ஜோடி ஹாஸ்யம் அளிக்கிறது.

சண்டைகள் நிறைய உண்டு. மின்னல் வீரனின் சாகசச் செயல்கள் படப்பிடிப்பின் திறமையைப் புலப்படுத்துகின்றன.

பாடல்கள் செவிக்கினிமையாக இருப்பதுடன் அவற்றில் கருத்தும் செறிந்துள்ளன.

மின்னல் வீரன்—சண்டைகள் நிறைந்த பொழுதுபோக்குப் படம். —மின்மினி

### பட விமர்சனம்

தந்தையின் சிறைவாசத்துக்குக் காலாகவிருந்த ஜமீன்தாரையும், அவருடைய துடுக்கு மகனையும் அடக்கிவைத்துவிடுகிறான், மின்னல் வீரன். அத்துடன், ஜமீன்தாரின் மகளையும் கடைசியில் மணம் செய்கிறான்.

வெறும் சண்டைப்படமாக விளங்காது, நல்ல கதையைக் கொண்டு இரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்து விடுகின்றது மின்னல் வீரன்.

## வீரபாண்டிய கட்டபொம்மன்

அடங்கி வாழ்தலையும் இரங்கிப் பிழைப்பதையும் இனத்துரோகஞ் செய்தலையும் அடியோடு அழிக்கும் ஆவேசத்தையும் விருப்பையும் கொடுக்கக் கூடியது "வீரபாண்டிய கட்டபொம்மன்" சரிதம். இத்தகைய சரிதத்தினூல் கிடைக்கும் யாதொரு உணர்ச்சியும் குன்றுதபடி அதைப் பேசும் படவாயிலாகக் கொடுத்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அதில் திறம்பட நடித்தவர்கள் போற்றுதற்குரியவர்கள். "வீரபாண்டிய கட்டபொம்மனி"ன்வெற்றியின் உச்சம் போன்று, வீரமுள்ள தமிழனை நடிப்பதில் சிவாஜி கணேசனின் நடிப்பின் உச்சத்தை நாம் காண்கிறோம். எப்பாகத்தையும் ஏற்று நடிக்கும் தலை சிறந்த தனி நடிகர் என்பதைப் படத்தில் மாறி மாறி வரும் வீரம், காதல், சோகம் ஆகிய கட்டங்களில் அவர் நடிக்கும் பாணியில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். இப்போது வெளியாகும் பல படங்களில் எல்லா அம்சங்களும் சிறப்பதில்லை. அதற்கு மாறாக "வீரபாண்டிய கட்ட பொம்மன்" படத்தில் சகல அம்சங்களிலும் ரசனை சொட்டுகின்றது. "நான் ரசித்த காட்சி" என்று படத்தைப் பார்த்த ஒருவர் கூறத் தக்கதாக ஒரு காட்சியுமே இல்லை. ஏனெனில் எல்லாக் காட்சிகளும் ரசிக்கற் பாலன வையே. இனிய பாடல்களும் அளவான ஹாஸ்யமும் படத்திற்கு இதமாக இருக்கின்றன.

"கட்டபொம்மன்" கணேசன் மாத்திரமல்லாமல், "வெள்ளையத்தேவன்"கணேசனும்,"வெள்ளையம்மாள்" பத்மினியும், ஊமைத்துரை தேவரும் மிகத் திறமையாக நடித்துள்ளனர்.

### ரசிகர் கருத்து

மற்றவர்கள் நடிப்பும் நன்றாகவேயிருக்கிறது. குறிப்பாக ஜெமினி கணேசனின் நடிப்பு சிவாஜி கணேசனின் நடிப்புடன் ஒப்பிடக் கூடிய அளவுக்கு உயர்ந்திருக்கின்றது. தளபதியாக அவர் மிடுக்கான நடை போடுவது உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. தீந்தமிழ்ச் சுவை வரலாறுகளை திரைதனிலே தராமல் அந்நியக் கதைகளைக் கவர்ந்திடும் படாதிபதிகளுக்கு, நம் கையிலேயே வெண்ணெயிருக்க ஊரெல்லாம் நெய்க்கலைய வேண்டாம் என்பதை எடுத்துக் காட்டுவது "வீரபாண்டிய கட்ட பொம்மன்".

—நயினை நடராஜன்
நயினதீவு.

## மேனுட்டில் சினிமாத் தொழில்

### அமெரிக்காவில் பிரமாண்டமான 'ஸ்டுடியோ'

திரு. ஏ. வி. மெய்யப்பன் தரும் விபரம்

அண்மையில் மேல் நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுத் திரும்பியுள்ள திரு. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார், மேல் நாட்டுச் சினிமாத் தொழில் பற்றிக் கூறியுள்ளதாவது:

நாங்கள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், யப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்றோம். எல்லா இடங்களிலும் நல்ல விதமான வரவேற்பு இருந்தது.

சினிமாத் துறையில் அமெரிக்கர் எவ்வளவோ முன்னேறியுள்ளனர். அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற பெரிய ஸ்டுடியோக்களில் ஒன்றுகக் கருதப்படும் '20 ஆம் நூற்றுண்டு பொக்ஸ்' ஸ்டுடியோவைச் சென்று பார்வையிட்டேன். அது பிரம்மாண்டமான ஸ்டுடியோத்தான். ஆனல், அவ்வளவு சுத்தமானது என்று கூற முடியாது.

நாங்கள் அந்த ஸ்டுடியோப் பகுதியில் காரில் சென்ற போது ஒரு கிராமப் பகுதியைக் கடந்து செல்வதுபோல் தெரிந்தது. ஆனல் அக் கிராமம் படப்பிடிப்பிற்காக அமைக்கப்பட்ட 'ஷெட்' என்பது பின்புதான் சொல்லத் தெரிந்தது. அவ்வளவு பெரிய அளவில் ஷெட் அமைக்கிறர்கள்.

சாதாரணமாக ஒரு செட் போடுவதற்கு 30 முதல் 40 லட்ச ரூபாய் வரை செலவு செய்கிருர்கள். படப்பிடிப்பிற்கு 6 மாதங்களுக்கு முன்பாகவே செட்டுகள் போடத் தொடங்கி விடுகிருர்கள்.


நாங்கள் அந்த ஸ்டுடியோவில் 50 கமெராக்கள் இருப்பதைப் பார்த்தோம். அங்கேயே கமெராக்களைப் பழுது பார்க்கும் ஒரு சாலையும் இருக்கிறது.

அங்கு இருந்த ஒருதென்னை மரத்தை என்னல் தூக்க முடிந்தது. காரணம் நம்மைப் போல அவர்கள் உண்மையான தென்னைமரங்களை வெட்டிக் கொண்டு வந்து நடுவதில்லை. 'பைபர் கிளாஸ்' என்ற ஒரு வித பொருளில் மரங்கள் மற்றும் காட்சி ஜோடனைக்கு வேண்டிய பல சாமான்கள் முதலியவற்றைச் செய்கிருர்கள். அது கனம் இல்லாதது.


பொதுவாக, முதலில் ஒரு 70 மில்லி மீட்டர் கண்ணடியுள்ள கமெராக்களில் படம் பிடிக்கிருர்கள். பின்பு இதையே 30 மில்லி மீட்டராக வும், 16 மில்லி மீட்டராகவும், சினிமாஸ்கோப்பாகவும் தேவைக்குத் தகுந்தபடி மாற்றியமைத்துக் கொள்கிருர்கள். இதற்கான இயந்திர வசதியும் அவர்களிடம் இருக்கிறது. இவற்றை இந்த அளவில் செய்வதற்கு அவர்களுக்கு உலக மார்க்கட் இருப்பதுதான் காரணம்.


மகத்தான 2-வது வாரம்!

சென்ட்ரல் ஓடியன் ராணி லிபேர்ட்டி ஜோதி
(மருதானை) (கல்கிசை) (யாழ்ப்பாணம்) (பதுளை) (திருக்கோணமலை)



★ ஏ. நாகேஸ்வரராவ்
★ ஜமுனு
★ ராஜசுலோசன
★ எம். என். நம்பியார்
★ ஏ. கருணுநிதி
★ கே. சாரங்கபாணி
★ எஸ். வி. ரங்கராவ்
★ டி. பி. முத்துலட்சுமி



இன்னும் பலர் நடித்த

ஜெயந்தி பிக்சர்ஸ்
அளிக்கும்

# வாழ்க்கை ஒப்பந்தம்

வாழ்க்கைக்கடலிலே வந்து மோதும் வேதனை அலைகளிலே
எற்றுண்டு தவிக்கும் நிரபராதிகளின் நெஞ்சத் துடிப்பை
எம்நெஞ்சிலே பதிக்கும் திரையோவியம்!

பின்னணி:
கண்டசாலா, திருச்சி லோகநாதன்,
லீலா, சுசீலா, ஜிக்கி,
டி. வி. ரெத்தினம்.

சங்கீதம்:
கண்டசாலா
டைரக்ஷன்:
கே. வி. ரெட்டி



## தாய்மொழிக்கு அரசினர் ஆதரவு

### மருதனமடத்தில் இலக்கிய விழா

மருதனமடம் சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இலக்கிய தின விழாக் கொண்டாட்டங்கள், பேச்சுப்போட்டி, விவாதம் இவற்றுடன் ஆரம்பமாயின. இவ் விழாவை உடுவில் கிராமச் சங்கத்தினர் ஒழுங்கு செய்தனர். உள்ளூர் ஆட்சிப் பகுதியின் உதவிக் கொமிஷனரான திரு. ஏ. ஏ. யோசப் விழாவைத் திறந்துவைத்துப் பேசுகையில், "இலங்கையில் உள்ளூர்களிலெல்லாம் இலக்கிய விழாவை ஒரு தேசிய அடிப்படையில் கொண்டாட இன்றைய அரசாங்கம் ஊக்குவித்துள்ளது மகிழ்ச்சிக்குரியதே. முன்னைய நாட்களில் ஆங்கில மொழியே பெருமையான இடம் வகித்து வந்தது.ஆனல், இப்பொழுதோ மக்களின் தாய் மொழிகளுக்கு ஊக்கமும், உதவியும் அரசாங்கம் செய்து வருகின்றது. மக்கள் தமக்களிக்கப்படும் வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு யாழ்ப்பாண அரசாங்க உதவி அதிபர் திரு. தெட்சணமூர்த்தி தலைமை வகித்தார். அவர் இலக்கிய விழாவின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கியதுடன், ஒவ்வொரு வருடமும் இவ்விழாக் கொண்டாடப்பட வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் வேலனர், செல்வி மகாலிங்கசிவம் ஆகியோர் இலக்கியத்தின் சில அம்சங்கள் பற்றி விளக்கினர்.

இசைப்புலவர் என் சண்முகரத்தினத்தின் இன்னிசை விருந்துடன், அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. திரு. ரி. தங்கராஜா நன்றியுரை கூறினர்.



கலர் நடனம்:
சாயி - சுப்புலெட்சுமி

# இன்றே பாருங்கள்!

பார்த்தோர் எல்லோரும் போற்றிப் புகழ்கிறார்கள்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) சம்ரோக் (வென்னப்புவா)

ஆகிய திரைகளில்

★ ரஞ்சன் ★ வீரப்பா ★ காகா ராதாகிருஷணன்
★ சந்தியா ★ வனஜா ★ முத்துலெட்சுமி

நடித்த

டி. என். ஆர். புரொடக்ஷன்

# மின்னல் வீரன்

இன்னல் வரும்போது காட்சி கொடுக்கிறான் மின்னல் வீரன்!
அண்ணல் வீரன் மதங்கொண்ட எருதுடன் போரிடுகிறான்!!
கண்ணால் அவ்வீரனைக் கவர்ந்தாள் ஒரு கட்டழகி!!!
பின்னால் நடப்பதைத் திரையில் கண்டுகளியுங்கள்!!!!


பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்
எஸ். ஸி. கிருஷ்ணன்
பி. லீலா
எம். எல். வசந்தகுமாரி
ஜமுனா ராணி
டி. வி. ரத்னம்

இசை:
எஸ். எஸ். வேதா

கதை - வசனம்
ஏ. எல். நாராயணன்

டைரக்ஷன் :
ஜம்பனா

தயாரிப்பு:
ஆர். கல்யாணராமன்



குதிரை — சந்தானம் நாய் — உஷா



மூன்று லட்சம் இரசிகர்களால் முதல் ஐந்து வாரங்களிலேயே ஐந்து தியேட்டர்களில் கண்டு போற்றப்பட்ட மகத்தான திரை ஓவியம்!

## வெற்றிகரமான 7-வது வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரீகல் (கண்டி) நெல்சன் (திருக்கோணமலை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)

வீரமும் உரிமையும் ஒன்றோடொன்று கூடிக்குலவ, ஆங்கில நாட்டாரின் அடிமை விலங்கை அறுத்தெறிய முதல் முழக்கமிட்ட வீரன்!

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், ஓ. ஏ. கே. தேவர், கருணாநிதி,
பத்மினி, ராகினி, வரலெட்சுமி, முத்துலெட்சுமி

நடித்த

## வீரபாண்டிய

# கட்டபொம்மன்

(முழுநீள டெக்னிக்கலர் படம்)

தமிழ்த்திரை வானிலே ஒளிவிடும் நட்சத்திரங்களை ஒருங்கே சந்திக்கும் அரிய வாய்ப்பு!
கலைத்துவம் செறிந்த காட்சிகளை உடனே கண்டானந்தியுங்கள்!!

## 3-வது வாரம்! கெயிட்டி திரையில்

பாலையா, பண்டரிபாய், தங்கவேலு, ஈ. வி. சரோஜா நடித்த

# மனைவியே மனிதனின் மாணிக்கம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ந் திகதி வெளியிடப்பெற்றது